# தியாகராஜர் கீர்த்தனைகள்

## நூற்றாண்டு விழா மலர்

JL
V211:5147M85
N85
145390

# தியாகசீலர் தீர்த்தகிரியா

# நூற்றாண்டுவிழா மலர்



தருமபுரி

145390

## சமர்ப்பணம்

நாட்டு விடுதலைக்காக தங்கள் நல்லுயிர் ஈந்த
பல்லாயிரக்கணக்கான அமர தியாகிகளுக்கும்
குறிப்பாக
அன்னை **இந்திரா** அவர்களுக்கும்
இம்மலரை
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றோம்.



# முன்னுரை

*ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்*
*வாராது போல வந்த மாமணியாம்*

இந்திய சுதந்திர போராட்ட வீர வரலாற்றில் தருமபுரி பகுதி ஓர் உயரிய இடத்தைப் பெற்றிருந்ததை சிறப்பாக எடுத்துக்காட்டும் வகையிலும், சேலம் மாவட்டத்தில் உள்ளடங்கியிருந்திட்ட தருமபுரி பகுதியை தனியாக 'உருப்பெருக்கி' கண்ணாடி மூலம் பெரிது படுத்திக்காட்டி, மற்ற மாவட்டங்கள் மாநிலம் பூராவும் தருமபுரி பகுதியின் தன்னிகரற்ற சுதந்திர போராட்ட ஈடுபாட்டை தெரிந்து கொள்ளக் கூடிய வகையிலும் இம்மலர் உருவாக்கப்பட்டுள்ளது.

தியாக சீலர்கள் தாங்கள் வாழ்ந்திருக்கும் போதே வீர வரலாற்றை உருவாக்கி விடுகிறார்கள், தங்கள் வாழ்நாளைக்குப் பிறகும் பிற்கால சந்ததியர்களுக்கென ஓர் புதிய வரலாற்றையும் வழிகாட்டியாக விட்டுச் செல்கிறார்கள். அவ்வகையில் தியாகப் பெருந்தகை தீர்த்தகிரியாரின் நூற்றாண்டு விழாவின் வாயிலாக வெளியிடப்படும் இம்மலர் எதிர்கால தலைமுறையினருக்கும் இக்கால இளைஞர் தலைமுறையினருக்கும் ஓர் வரலாற்று பதிவேடாக திகழும் என்ற நம்பிக்கையோடு மலர்ந்து மணங்கமழ பவனி வருகிறது.

நாட்டுக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பே பொதுமக்களில் பெரும் எண்ணிக்கையினர் தேச விடுதலை இயக்கத்துக்கு பக்கபலமாக ஆர்த்தெழுந்தார்கள். அன்றைய அந்நிய ஆட்சியின் கொடூரமான அடக்கு முறை கெடுபிடிகள் வெள்ளையனுக்கு வெண்சாமரம் வீசிவந்த சமஸ்தான மன்னர்களின் எதிர்ப்புகள், கொடுமைகள் பெருநிலச் சுவான்தார்கள் - மிட்டா மிராசுதார்கள் ஜமின்தார்கள் என்பவர்களின் கடுமையான கட்டுப்பாடுகள் பணத்தை மூட்டை மூட்டையாக காட்டி ஆசை காட்டியும், மிரட்டியும் கூட எதனையும் பொருட்படுத்தாமல் நாட்டு மக்கள் தேசபக்தர்களையே தேர்தலில் தேர்ந்தெடுத்த தீரம் நாட்டு மக்களுக்கு எப்படி வந்தது? ஆம்! அன்று தேசபக்தர்களுக்கு ஓட்டு போட்ட அத்தனை பேர்களுமே நாட்டுப்பற்று மிக்கவர்கள் தான் - வரலாற்று ஏட்டிலே பதிக்கப்பட வேண்டியவர்களே!

மக்களுக்கு அத்தகைய ஆர்வமும் விழிப்புணர்ச்சியும் ஏற்படக் காரணமாக இருந்தவர்கள் தேசபக்த சுதந்திர போராட்ட வீரர்கள் தான் அவர்களின் தன்னலமற்ற - இன்னல்கள் - இழப்புகளைப் பெருட்படுத்தாத - சாதி - மத - சமய பேதங்களால் தங்களை கட்டுப்படுத்திக் கொள்ளாத மாசு மருவற்ற - தியாகங்கள் தான் காரணம்.

வாலிப பருவத்தில் - தேசபக்தி உணர்வினால் உந்தப்பட்டு குடும்பம் வாழ்க்கை - வாழ்க்கையின் எதிர்காலம் ஆகியவைகளைப்பற்றிய சிந்தனையே இல்லாமல் - என்ன நேர்ந்தாலும் சரியே - இன்னுயிர் இம்மண்ணுக்கு - விடுதலை இந்நாட்டுக்கு என்ற நிலை ஏற்படினும் இன்முகத்தோடு ஏற்க தன்னை தயார் படுத்திக் கொண்டு-பல்வேறுவிதமான போராட்டங்களை சந்தித்த-கீழ்மட்டத்தில் உள்ள - வாலிபர்கள், நடுத்தர வயதினர் - முதியவர்கள் ஆகிய எத்தனையோ பேர்கள் தங்கள் முகவரியைக் கூட தெரிவிக்காமல் மறைந்து விட்டனர்.

மேல் மட்டத்திலுள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையிலுள்ளவர்கள் சிலரது சேவைகள் - மேதாவிலாசங்கள் மட்டுமே மறக்கக் கூடாதனவையாக உலா வந்து கொண்டிருக்கின்றன. பாரபட்சமின்றி இருசாரர்களின் புகைப்படங்களையும் புதையலாக கண்டெடுத்து கிடைத்த மட்டிலும் இம்மலரில் வெளியிடப்பட்டு இருக்கின்றன.

இந்நாட்டை அடிமைப்படுத்தி — சுரண்டிக்கொழுத்து - கொடுமைப்படுத்தி "தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோடா?" என்று இழிவு படுத்திய அந்த வெள்ளையனின் சொந்த நாட்டிலே சொந்தமாக் இடம் வாங்கி — சிங்கத்தின் குகையிலே புகுந்து அதன் பிடரி மயிரைப்பிடித்து உலுக்குவதைப் போன்று "இலண்டனில் இந்தியப் புரட்சிக் களம்" என்ற திரு. பெ. சு. மணி அவர்களின் கட்டுரை — போக்குவரத்து வசதியும், தகவல் தொடர்பு வசதிகளும் இல்லாத அந்த காலத்தில் 6000 மைலுக்கு அப்பாலிருந்துக் கொண்டு இந்நாட்டில் சுதந்திரக் கனலை பரப்பிய - கற்பனை கதைகள் கூட தோற்கும் அளவுக்கு உண்மையான வீரசாகசங்களை படிக்கும் ஒவ்வொருவரும் இளமை பெற்று அந்த காலத்துக்கே சென்று விட்ட உணர்வைப் பெறுவர். 'காங்கிரஸில் ஒலித்த முதல் தமிழ் குரல்' என்ற பெ. சு. மணி அவர்களின் மற்றொரு கட்டுரையும் தமிழனுக்கே உரிய தனித்தன்மை வாய்ந்த தேசபக்தியையும்' வீரத்தையும் காட்டும் உன்னத வரலாறாய் அமைந்துள்ளதை காணலாம்.

தியாகி தீர்த்தகிரியாரின் சகதியாகியும் - தென்மண்டல சுதந்திர போராட்ட வீரர்கள் ஸ்தாபகதலைவரும் — நீலன் சிலை அகற்றிய போராட்ட வீரரும் சுதந்திரம்வரும்வரைக்கும் கருப்புச் சட்டையைத்தான் அணிவேன்எனசபதம்பூண்டு சுதந்திரம் வரும் வரையும் அவ்வாரே செய்த அந்த கிழட்டுச் சிங்கம் உயர்திரு S. N. சோமயாஜுலு அவர்களின் 'தியாக தீபம்' தீர்த்தகிரியார் எனும் கட்டுரையும், பென்னாகரம் திரு. R. வெங்கட்ராமனின் தியாகச் செம்மல் தீர்த்தகிரியார் என்னும் தலைப்பில் தியாகி தீர்த்தகிரியாரின் வரலாற்றையும் தருமபுரி மாவட்டத்தின் சிறப்பினையும் எடுத்துக் காட்டும் சிறப்புக் கவிதையும், G. A. வடிவேலு அவர்களின் "மாமனிதர் தீர்த்தகிரியார்" எனும் உடனிருந்த அனுபவத்தோடு எழுதிய கட்டுரையும், தியாகி குமரன் நெசவாளர் சங்க தலைவரும், சேலம் தருமபுரி மாவட்ட நெசவாளர் சம்மேளனத்தின் செயலாளருமான உயர்திரு P. A. வட்டமலை அவர்கள் எழுதியுள்ள "கொடிகாத்த குமரன்" என்ற தலைப்பில் "நெஞ்சக்குருதியை நீரெனப்பாய்ச்சி நாட்டுக் கொடியினை நெஞ்சுயர்த்திப் பிடித்துக் காத்திட்ட அந்த அமரக்குமரனின் கண்ணீர் காவியமான வாழ்க்கை வரலாறும், தருமபுரி மாதர் சங்கத்தலைவி திருமதி M.R. காளியம்மாள் அவர்களின் "தியாக சீலர் தீர்த்தகிரியார்" என்னும் கட்டுரையும். பெரியவர் உயர்திரு T. S. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களின் "மகாத்மா காந்தியடிகளுடன் ஒரு நாள்" என்ற கட்டுரையும், செட்டிப்பட்டி திரு S நாகராஜன் அவர்களின் "திறம் பாடவந்த மறவன்" என்ற பாரதி பற்றிய தெளிவான கட்டுரையும், தோழர் தெய்வம் அவர்களின் "விடுதலைப் போரில் சேலம் - தர்மபுரி மாவட்டங்கள்"என்ற கட்டுரையும், திரு "ரகமி" அவர்கள் எழுதியுள்ள "வீர வாஞ்சி" என்ற வாஞ்சிநாதனை பற்றிய நூலின் சுருக்கமும், அமரர் K. T. கோசல்ராம் அவர்கள் தாம்ரமலரில் எழுதியுள்ள "ஜீவா" பற்றிய கட்டுரை சுருக்கமும். இன்னும் சிறந்த கட்டுரைகள் பலவும் இம்மலரில் வெளியிடப்பட்டுள்ளன.

ஆகவே இம்மலர் தருமபுரி மாவட்ட சுதந்திர போராட்ட வரலாற்றின் பொக்கிஷமாக அனைவரின் கைகளிலும் இருக்கவேண்டிய ஓர் மலராகும். அதுவும் தமிழக அரசு இம்மலரை அரசு நூல் நிலையங்களில் வைக்க சிபாரிசு செய்யப்பட வேண்டிய சிறப்பான மலராகவும் இது திகழ்கிறது.

இம்மலரில் கட்டுரைகள் கவிதைகள் எழுதியுள்ள அனைவருக்கும் மலர் குழு தனது மகிழ்வையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

தியாக சீலர் தீர்த்தகிரியாரின் நூற்றாண்டு விழாவையும், சிலை திறப்பு விழாவையும் சென்ற 5 ஆண்களுக்கு முன்பாகவே நடத்திட வேண்டுமென்று தருமபுரி மாவட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் சங்கத்தினர் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் பொருளாதார வசதியின்மை காரணமாக காலம் நீடித்துக் கொண்டே வந்தது. இருப்பினும் சலியாமலும் சளைக்காமலும் - சுதந்திரபோராட்ட வீரர்களும், தியாகி திரு. M. S. அய்யம்பெருமாள் அவர்களும், உயர் திரு J. K. பத்மரூப செட்டியார் அவர்களும் திரு. D. C. கந்தசாமி அவர்களும் திரு. S. K. காளியப்பன், திரு. T. D. வாசுதேவராவ், திரு. C. கிருஷ்ணமூர்த்தி மற்றும் அனைத்து நிர்வாகிகளும் விடாமுயற்சியோடு இவ்விழாவை வெற்றி கரமாக முடிக்கவும் - மலரை சிறப்பாக வெளியிடவும் முயன்று வெற்றி பெற்றனர் என்றே கூறலாம். அவர்கள் அனைவருக்கும் இம்மலர்குழு மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தியாகி தீர்த்தகிரியாரின் நூற்றாண்டுவிழா மலர் சிறப்பாக அமைய கூட்டுறவு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்கங்களும், மாவட்ட கூட்டுறவு நெசவாளர் சம்மேளன பொதுச் செயலாளர் திரு வட்டமலை அவர்களின் ஊக்கமும் ஒத்துழைப்பும் போற்றற்குரியது.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சங்கங்கள் விற்பனை நிலையங்கள் ஆகியவைகள் தங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய விளம்பரங்கள் கொடுத்து உதவியதோடு — நாட்டின் பொருளாதாரம் — நெசவுத் தொழிலாளர்களின் முன்னேற்றம் ஆகியவைகளில் கண்ணும் கருத்துமாயிருந்த — இறுதி மூச்சு வரை அவர்களுக்காக பாடுபட்ட தியாகி தீர்த்தகிரியாரின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியாவதற்கும் உறுதுணையாக இருந்தனர் என்பதை குறிப்பிடாமல் இருக்க இயலாது.

தருமபுரி மாவட்ட வரலாற்றிலே இதுவரை இத்தகைய மலர் வெளிவந்ததில்லை எனும் அளவுக்கு மலரின் அமைப்பையும் அழகையும் சிறப்பாக உருவாக்கித் தந்த 'சுபம்' அச்சகத்தாரையும் அதன் நிர்வாகிகளையும் நாம் பாராட்டாமல் இருக்க இயலாது. **சுபம் அச்சக** உரிமையாளர்கள் — ஆர்வமுள்ள — துடிப்பான இளைஞர்கள்.

திரு G. அன்பழகன்
திரு A. வள்ளுவன்
திரு S. செந்தில்குமார்
திரு R. பாலசுப்ரமணியம்
திரு E. சரவணன்

145390
600 008

அச்சுக் கோர்த்தவர்கள்

திரு R. L. S. ரகுராமன்

உதவியாளர்கள்

திரு M. சிவகுமார்

திரு K. அறிவு

அச்சு இயந்திரத்தை இயக்கியவர்

திரு D. மணி

உதவியாளர்

திரு P. கமலேசன்

மற்றும் புகைப்படங்களை நல்ல முறையில் — மலருக்கு அழகு தரும் வகையில் 'பிளாக்' குகள் செய்து தந்து உதவிய **"ஜீவா பிராசஸ்"** உரிமையாளர் திரு A. ஜீவானந்தம்

ஆகிய அனைவருக்கும் மலர்குழுவின் சார்பாக எங்கள் நன்றியையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இறுதியாக இம்மலரின் சகல பொறுப்புகளையும் ஏற்று அனைவருடனும் ஒத்துழைத்து மலரை பூர்த்தி செய்ய அரும்பாடுபட்டுழைத்த

**திரு M. S. அய்யம்பெருமாள்**
தர்மபுரி

**திரு R. வெங்கட்ராமன்**
பென்னாகரம்

**திரு C. கிருஷ்ணமூர்த்தி**
தர்மபுரி

அவர்களுக்கும் இம் மலர் குழு தனது பாராட்டுதலை சிறப்பாக தெரிவித்துக் கொள்கிறது.

இங்ஙனம்

**மலர்க்குழுவினர்**

தாழ்வுற்று வருமை மிஞ்சி விடுதலை தவறிகெட்டுப்
பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசந்தன்னை



வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க வாழ்க !

— பாரதி

பெருந்தலைவர்



பாரதரத்னா

# கு. காமராஜ்

குடிமையி லுயர்வு கல்வி ஞானமுங் கூடிஓங்கப்
படிமிசைத் தலைமை எய்தும் படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்:



முடிவிலா கீர்த்தி பெற்றாய்! புவிக்குள்ளே
முதன்மையுற்றாய்.

பாரதப் பெருந்தலைவர்

மேதகு **ஞானி ஜெயில்சிங்** அவர்களுடன்



அகில இந்திய பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்

திருமிகு **K. இராமமூர்த்தி,** B. Com., B. L., M. P.

அவர்கள் அளவளாவி கைகுலுக்கி மகிழ்கிறார்

பாரதம் போற்றும் பண்புடைத் தலைவராம்



பாரதத் துணைப் பெருந்தலைவர்

மேதகு **R. வெங்கட்ராமன்,** M. A., B. L., அவர்கள்

उपराष्ट्रपति, भारत
नई दिल्ली
VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

27-6-1985

தமிழகத்தின் பழம் பெரும் தியாகிகளில் தலை சிறந்தவர் திரு. தீர்த்தகிரி முதலியார். சுதேசி இயக்கங்கள் ஒவ்வொன்றிலும் பங்கு கொண்டு, தமது செல்வத்தை எல்லாம் இழந்து வறுமையை அரவணைத்த பெரியார். குறிப்பாக, உப்பு சத்தியாக்கிரகம், கதர் இயக்கம் ஆகிய சமூக சேவைகளில் ஈடுபாடு கொண்டவர். தமிழகத்தின் விடுதலை வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றுத் திகழ்கின்ற தியாகி தீர்த்தகிரி முதலியார் நாமம் என்றென்றும் வாழ வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

ஆர். வெங்கட்ராமன்

ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த கண்ணினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா



பாரதப் பிரதமர்

## மேதகு ராஜீவ்காந்தி அவர்கள்

★ ★ ★

தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா

—பாரதி



தமிழக முதல்வர்

**எம். ஜி. இராமச்சந்திரன்**



பெருந்தலைவர் காமராசர் புகைப்படத்துடன்

**பேராசிரியர் பா. இராமச்சந்திரன் அவர்கள்**

## வீரத்தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின்
## நூற்றாண்டு விழா நிகழ்ச்சி



தமிழக சட்டப்பேரவைத் தலைவர்

மாண்புமிகு **K. இராசாராம்,** B. A., அவர்களும்

செய்திமக்கள் தொடர்பு இயக்குனர்

மாண்புமிகு **கிருஷ்ணபாரதி,** இ. ஆ. ப. அவர்களும்

*தமிழக சுதந்திர போராட்ட வீரர்கள் சங்க நிர்வாகத் தலைவர்*

திரு **P. S. K. லட்சுமிபதிராஜு** அவர்களும்

மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி மற்றும்

*தியாகசீலர் சுப்பிரமணிய சிவா நூற்றாண்டு விழா குழுத்தலைவர்*

ஓய்வுபெற்ற ஆசிரியப் பெருந்தகை

தியாகி **R. சுப்பராவ்** அவர்களும்

பின்புரம் தெரிவது நினைவுத்தூணின் அடிப்பகுதி



ராமசாமிபிள்ளை, பெருந்தலைவர் காமராஜ், பெரியார் டாக்டர் வரதராஜுலு நாயுடு, பட்டாபி சீத்தாராமையா சேலம் சேர்மென் ஜெகநாதன்

தியாகசீலர் தீர்த்தகிரியார் நூற்றாண்டு விழாவிற்கு
எங்கள் உளமார்ந்த வாழ்த்துக்கள்





# அன்னை கஸ்தூரிபாய் காந்தி மாணவ-மாணவிகள் இல்லம்

## கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டம்



தலைவர்
**A. குஷால்சந்த்ஜெயின்**
திருப்பத்தூர். (வ. ஆ. மாவட்டம்)

செயலர் & தொடர்பாளர்
**ப. சித்தன்**
கிருஷ்ணகிரி. (தருமபுரி மாவட்டம்)





தியாகி சுப்பிரமணியசிவா




வள்ளல் சின்னமுத்து முதலியாரவர்களுக்கு வீரத்தியாகி சுப்பிரமணிய சிவம் அவர்கள் கைப்பட எழுதிய கடிதம் "எம்டன்" என இருப்பது தியாக சீலர் தீர்த்தகிரியாரை குறிப்பதாகும்.









1915-ம் ஆண்டில் பாப்பாரப்பட்டி தியாகி திரு M. சின்னமுத்து முதலியார் அவர்களுக்கு கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் தன் கைப்பட தமிழில் பிரம்பூர் சென்னை என எழுதிய கடிதம். இருபக்கங்களையும் இணைத்துப்படிக்க வேண்டும்.




1917ம் ஆண்டு பாப்பாரப்பட்டி தியாகி திரு M. சின்னமுத்து முதலியார் அவர்களுக்கு தியாகசீலர்களான தீர்த்தகிரியார், அவரது குருவெனதிகழ்ந்த கந்தசாமிகுப்தா அவர்களையும் குறிப்பிட்டு வீரத்தியாகி சுப்பிரமணிய சிவம் அவர்கள் மைலாப்பூரிலிருந்து தம் கையால் தமிழில் எழுதிய கடிதமும், மு. சின்னமுத்து முதலியாரவர்களின் முகவரியும்.




## தியாகசீலர் தீர்த்தகிரியாருடைய மேதகு நண்பர்கள்



கப்பலோட்டிய தமிழன்
**வ. உ. சிதம்பரம்பிள்ளை**

லோகமான்ய
**பாலகங்காதர திலகர்**

சுதந்திர இந்தியாவின்
முதல் கவர்னர் ஜெனரல்



**மூதறிஞர் இராஜாஜி**

தமிழ் தென்றல்
திரு. வி. கலியாணசுந்தரனார்



**திரு. வி. க.**



தியாகி T. நடேசன்
தருமபுரி



தியாகி ஜெயசீலன்
பென்னாகரம்

விழா சிறப்பு பெற வாழ்த்துக்கள்



**A. ஜீவானந்தம்**

**"ஜீவா பிராசஸ்"**

**ஓசூர்**

# இலண்டனில் ஓர் இந்தியப் புரட்சிக்களம்

— பெ. சு. மணி

பொதுச் செயலர்
அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம்

இந்திய விடுதலைப் போர் திலகர் சகாப்தத்தில் சீறிக் கனல் வெகுண்டு எழுந்தது.

பேரொளி விதுபோர்! புண்ணியத் திருப்போர்
பாரினிலிதுபோல் பார்த்திடற்கெளிதோ ?
நெஞ்சக்குருதியை நிலத்திடை வடித்து
வஞ்சகமழிக்கும் மாமகம் புரிவோம்
வேள்வியில் இதுபோல் வேள்வியொன்றில்லை,
தவத்தினில் இதுபோல் தவம் பிறிதில்லை.

இவ்வாறு, விடுதலைப் போர்க்களக் கவிஞன் சுப்ரமணியபாரதியார், "சத்ரபதி சிவாஜி தன் சைனியத்திற்கு கூறியது" எனும் ஆவேசக் கவிதையிலே சாற்றினார்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் களத்தை விரிவுபடுத்தவும், புரட்சிக்கனல் ஒளிபாய்ச்சவும் அயல் நாடுகளில் தங்கியிருந்த இந்திய தேசபக்தர்கள் பல அமைப்புகளை நெஞ்சுரத்துடன் நிறுவி அஞ்சாது தொண்டாற்றினார்கள். பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்வீடன் முதலான நாடுகளில் பல புரட்சி அமைப்புகள் தோன்றின.

இந்திய விடுதலைப்போருக்கு ஆதரவாக உலகப்பொதுக்கருத்தை உருவாக்கவும், இந்தியாவின் புரட்சி சக்திகளுக்கு ஊக்கமளித்து வழிகாட்டவும், பிரிட்டனின் எதிரி நாடுகளின் துணை பெற்று ஆயுதப் புரட்சி மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை இந்தியாவிலிருந்து தூக்கி எறியவும், திட்டமிட்டன இந்த புரட்சி அமைப்புகள்.

## இந்தியா விடுதியின் தோற்றம்

இத்தகைய விழுமிய விடுதலை வேட்கையோடு, இலண்டனில் ஓர் இந்தியப் புரட்சிக் களம் அமைக்கப்பட்டது.

'இந்தியா ஹவுஸ்' எனும் ஆங்கில மொழிப் பெயரில் தோன்றியதுதான், இந்த "இந்தியா விடுதி", இந்தியப் புரட்சிக்களம்.

'இந்தியா ஹவுஸ்' எனப்பட்ட இந்தியா விடுதியை தோற்றுவித்தவர், பேரறிஞரும் தேசபக்தருமான ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா (1857 - 1930) என்பவராவார்.

யார் இந்த ஷியாம்ஜிகிருஷ்ணவர்மா ?

இந்தியப் புரட்சிக்கனல் கனன்ற 1857 – ல் தோன்றியவர் ஷியாம்ஜிகிருஷ்ணவர்மா. குஜராத் நிலத்தில் உள்ள கட்ச் பிரதேசத்தில் மிக ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர் இவர். சமஸ்கிருத மொழி ) இவருக்குள்ள பெரும் புலமையைக்கண்டு, மோனியந்வில்லியம்ஸ், மாக்ஸ்மூலர் போன்ற இந்திய ல் ஆய்வாளர்கள் இவருடன் நட்பு பூண்டனர். இலண்டன் ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் நல் "எம் – ஏ" இந்தியப் பட்டதாரியாகப் புகழ்பெற்றவர். சட்டம் படித்தவர். இந்திய சமய – சமூகப் ட்சிகரச் சிந்தனையாளர் – செயல்வீரர். சுவாமி தயானந்தரின் ஆரிய சமாஜ ஆதரவாளராகவும் ட்டனின் தலைசிறந்த தத்துவ அறிஞரான ஹெர்பர்ட்ஸ்பென்சரின் சிந்தனைக் கருத்துக்களில் ளைப்பவராகவும் பொதுவாழ்க்கையில் நுழைந்தார் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா இந்தியாவில் உதயபூர் ஸ்தானத்தில் திவானாகப்பணிபுரிந்த பொழுது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அரசியல் ஏஜெண்டாக ஸ்தானத்தில் ஆதிக்கம் செலுத்திய வெள்ளையனோடு ஒத்துப் போக மறுத்து சுதந்திரமாகச்செயல் டவர் கிருஷ்ணவர்மா. இவரை அப்பொழுதே "அபாயகரமானவர்" என பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் றுணர்ந்தது. குறிப்பாக, இலண்டனில் தியாகச் சுடர் மதன்லால் திங்ராவால் சுட்டொழிக்கப்பட்ட சன்வைலி என்பவன் உதயபூர் சமஸ்தானத்தில் 1894 முதல் "அரசியல் ஆலோசகராக" இருந்த லத்தில் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவை தலையெடுக்க முடியாமல் தடைகளை விதித்தான்.

சுதந்திரமாகச் செயல்படமுடியாத சூழ்நிலையில் இலண்டனில் குடியேறினார். ஷியாம்ஜி ஷ்ணவர்மா.

இந்தியர்களுக்கு இந்தியாவில் கிடைக்காத கருத்துச் சுதந்திரம், பிரிட்டனில் இலண்டன் ரத்தில் – அக்காலத்தில் கிடைத்தது. இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தத் திட்டமிட்டார் யாம்ஜி கிருஷ்ணவர்மா. இலண்டனில் ஐரிஷ் சுதந்திரப் போராட்ட வீரர்களின் 'ஸீன் – பீன் இயக் தலைவர்களும், 'ரஷ்ய நிஹிலிஸ்ட்' இயக்க வீரர்களும், பிரிட்டிஷ் தொழிற்கட்சிப் பிரமுகர்களும் யாம்ஜிக்குப் பக்கபலமாகத் திகழ்ந்தனர்.

பிரிட்டனில், மேற்படிப்பு வர்த்தகத்தொழில் உறவு சம்பந்தமாக வந்து தங்குபவர்களுக்காக றைந்த செலவில் ஒரு விடுதியை அமைக்க திட்டமிட்டார் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா. இலண்டனில் ஹகேட்' என்னும் பகுதியில் 65, கிராம்வெல் அவென்யூ என்னும் பெரிய வீட்டை இலட்ச ரூபாயிற்கும் லாகக் கொடுத்து விலைக்கு வாங்கினார். இந்த வீடுதான் "இந்தியா விடுதி"யாக உருவாகியது.

இந்தியா விடுதியின் தொடக்கவிழா சிறப்பாக நடைபெற்றது. இந்திய விடுதலைப் புரட்சி வீரர் ரின் ஆதரவாளரான ஹைண்ட்மேன் (HYNDMAN) என்பவர் 1 ஜூலை 1905 – ல் 'இந்தியா டுதி' யை முறைப்படி திறந்து வைத்தார். எச். எம். ஹைண்ட்மேன் (1842 – 1921) இலண்டனில் சோஷலிஸ நோக்குடன் "சோஷல் டெமாகிரேடிக் பெடரேஷன்" என்னும் பெயரில் ஓர் அரசியல் மைப்பை 1881 – ல் நிறுவினார்.

"சோஷலிஸத்தின் பொருளாதாரம்" (Economies of socialism) என்னும் நூலை 1896 ல் எழுதி வெளியிட்டார். இவரது பத்திரிகையான 'ஜஸ்டிஸ்' (Justice) என்பது இந்தியாவில் தடைசெய்யப் ட்டது.பிரிட்டன் எவ்வாறு இந்தியாவைச் சுரண்டி ஏழ்மையாக்கி வருகிறது என்பனவற்றையெல்லாம் ள்ளி விவரங்களுடன 'ஜஸ்டிஸ்' இதழில் ஹைண்ட்மேன் எழுதி வந்ததே இதற்குக் காரணம்.

உலக அரசியல் நிகழ்ச்சிகளை உற்றுப்பார்ப்பதிலும், உரியவகையில் இந்திய அரசியலோடு )ணைத்துப் பேசுவதிலும் வல்லவராக விளங்கிய பாரதியார், தமது 'இந்தியா' இதழ்களில் ஹைண்ட் மனைப்பற்றி பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளார்.

செப்டம்பர் 11, 1906 – ம் 'இந்தியா' இதழில் எச். எம். ஹைண்ட்மேனைப்பற்றி பாரதியார் ன்வருமாறு புகழ்ந்துள்ளார் :-

"எச். எம். ஹைண்ட்மேன் என்பவர் இந்தியாவிற்கு இங்கிலாந்திலேயுள்ள முக்கிய நண் களில் ஒருவர். இவர் வேறு சிலரைப்போல நம்மிடம் அரைமனதுடன் அனுதாபம் கொண்டவரில்லை நம்மவர்களுக்கு முற்றிலும் சுயாட்சி கிடைக்க வேண்டுமென்பதையே பெருநோக்கமாகக் கொண்ட ஸ்ரீ ஷியாம்ஜிகிருஷ்ணவர்மா பண்டிதருக்குக் கண்ணுக்குக் கண்ணாய் இருப்பவர்."

இவ்வளவு சிறப்புகளுடன் தமது முயற்சிகளுக்கெல்லாம் உற்றத்துணைவராக – பிரிட்டி தொழிற்கட்சியில் – ஒத்துழைத்த ஹைண்ட்மேனைக் கொண்டு திறப்பு விழாவை நடத்தினா ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா.

தொடக்கவிழாவில் பிரிட்டிஷ்ஏகாதிபத்ய எதிர்ப்புணர்ச்சி எதிரொலித்தது. ஷியாம்ஜி கிருஷ் வர்மா, இந்திய தேசிய காங்கிரஸ் அச் சமயத்தில் கடைப் பிடித்த, மிதவாத தேசியப் போக்கை முற்றி மாக வெறுத்தவர்.தீவிரவாத தேசியத்தை அவாவியவர். இவரது கருத்து பரவுவதற்கு 'இந்தியாவிடு பயன்பட தொடக்க விழா உரைகளே வித்தூன்றின. விழாவில் பங்கு கொண்ட முக்கியத் தலைவர்க வருமாறு :

'பாஸிடிவ்ஸ்ட்ரெவ்யூ' எனும் பத்திரிகையின் ஆசிரியர் செடிம்னி, பெண்ணுரிமை இயக்க தலைவி டெஸ்பார்ட், தாதாபாய் நவ்ரோஜி, லாலா லஜபதிராய், மேடம் காமா, பரமேஸ்வரிலால் (கய வைச் சார்ந்த இந்திய வழக்கறிஞர்), அப்துல்லா சுஹர்வர்த்தி (உலக இஸ்லாமியத் தலைவர்)அப்து மஜீத், J. M. பரீக், டாக்டர் பெர்ரியா மற்றும் பல ஐரிஷ் தேசிய வாதிகள்.

புரட்சிகரசிந்தனையாளர் ஷியாம் ஜிகிருஷ்ணவர்மா, புரட்சிகர செயல்வீரர் விநாயக தாமோத சாவர்க்கார் ஆகிய இருவரின் தலைமையின் கீழ் 'இந்தியாவிடுதி' பல புரட்சி வீரர்களை உருவாக்கிய மாவீரன் மதன்லால் திங்ரா, இந்தியாவிடுதியில் உருவாக்கப்பட்டவன். தமிழகத்தின் வீர விளக் வ. வெ. சு. ஐயர், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், எம். பி. டி. ஆசார்யா, ஆகியோர் இந்தியாவிடுதியி புரட்சிச் சிந்தனையிலும், திட்டங்களிலும் தோய்ந்தவர்கள். மற்றும் அயல் நாடுகளில் புகழ் பெற் மாபெரும் தலைவர்களான ஹர்தயாள், மேடம் காமா, எஸ். ஆர். ராணா, கவிஞர் வீரேந்திரநா சட்டோபாத்யாயா, இந்திய தேசியத் தலைவர்களான லாலா லஜபதிராய், விபின் சந்திரபா பாலகங்காதரதிலகர், தாதாபாய் நவ்ரோஜி முதலானோர், இந்திய விடுதியின் அரசியலில் ஆர்வ காட்டியவர்கள்.

மதன்லால் திங்ராவின் வன்முறை புரட்சிக்குப் பிறகு முற்கூறிய தலைவர்களில் தாதாபா நவ்ரோஜி, விபின் சந்திரபால் பின்வாங்கினார்கள்.

ஷியாம்ஷி கிருஷ்ணவர்மா,வீரசாவக்கார் ஆகிய இரு பெருந்தலைவர்கள் இந்தியாவிடுதியின் புரட்சிகர வரலாற்றை உருவாக்கினார்கள்.

## ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவின் தலைமையின் கீழ் இந்தியாவிடுதி

ஜூலை 1905 ல் இந்தியா விடுதியைத் தொடங்கியதற்கு முன்பு, பிப்ரவரி 1905ல் 'இந்தியன் ஹோம்ரூல் சொசைட்டி' யையும் (Indian Home rule Society) ஜனவரி 1905 – ல் 'இந்தியன் சோஷாலஜிஸ்ட்' (Indian Socialogist) எனும் திங்கள் இதழையும், ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா தமது பணிக்கு பயன்படுத்திக் கொண்டார்.

இந்தியன் சோஷாலஜிஸ்ட் மிக விரைவிலேயே தீவிரவாத இந்திய தேச பக்தர்களின் பாராட்டு தல்களைப் பெற்றது. இந்தியாவிற்கு பரிபூர்ண விடுதலையே வேண்டும் எனும் கோரிக்கையை முன் வைத்து சக்தி வாய்ந்த அரசியல் பிரசார ஏடாக விளங்கத் தொடங்கியது, இந்தியன் 'சோஷாலஜிஸ்ட்

**ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்** (1820 - 1903) என்னும் புகழார்ந்த பிரிட்டிஷ் தத்துவ அறிஞரிட கொண்ட பற்றுதலால், ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா தமது பத்திரிகையின் முகப்பு மேற்கோள் வாசகமா (MOTTO) பின்னுள்ளதை அமைத்துக் கொண்டார்.

"Every man is free to do that which he will, provided he infruiges not the equal fre dom of any other man" :- Herbert spencer principles of Ethics, section 272 —

"Resistance to aggression is not simply just fiable but imperative - Non - Resistan hurts both altruism and egoism" - The study of socialogy, chap. 8.

இதன் தமிழாக்கம் வருமாறு :

"பிறருடைய சமமான உரிமையை மீறாதிருக்கும் வரையில், ஒவ்வொருவரும், அவர் விரும் ய வாறு சுதந்திரமாக செயலாற்றத்தக்கவர்.

ஆதிக்கத்திற்கு காட்டும் எதிர்ப்பு, ஆதரிக்கத்தக்கது மட்டுமன்று தவிர்க்கமுடியாததுமாகும். எதிர்ப்பு காட்டாமலிருப்பது பொது நலப் பண்பிற்கும் தன் முனைப்பிற்கும் ஊறு விளைவிப்பதாகும்.

முதல் இதழிலேயே ஹெர்பர்ட்ஸ் ஸ்பென்ஸர் இந்தியப் பட்டதாரிகள் ஆதரவு ஊ, யத் திட்டத்தை (The scheme of Herbert spencer Indian fellowship) அறிவித்தார்.

மேற்படிப்பிற்கான கல்வியோடு தேசிய தன்மானத்தை உறுதியாகப் பற்றத்தூண்டும் இத் திட்டத்தைப்பற்றி இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையை வழிநடத்திய வெள்ளையர்களுள் ஒருவ ான ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் என்பவருக்கு 8 - 12 - 1904 -ல் எழுதிய கடிதத்தில் குறிப்பிட் ார், அடுத்தகாங்கிரஸ் மகாசபையின் வருடாந்திர கூட்டத்தில் பரிசீலனைக்கு இத்திட்டத்தை வைக் மாறு வேண்டுகோள் விடுத்தார். ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் பெயரில் அமைந்த கல்வித்திட்டம் பிரிட்டிஷ் அரசாங்க ஊழியத்தை உதறித்தள்ளத் தூண்டுவது. பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் விசுவாசம் ாட்டி, மிதவாதப்போக்கைப் பின்பற்றும் காங்கிரசின் ஆதாரக் கொள்கைக்கு எதிரான ஷியாம்ஜியின் திட்டத்தை வெட்டர்ன் காங்கிரசின் பரிசீலனைக்கு வைக்க மறுத்து ஷியாம்ஷிக்கு பதில் கடிதம் எழுதினார்.

1904 - ல் தங்கள் இருவரிடையே நடந்த இந்தக் கடிதப் போக்குவரத்தை தமது கல் த்திட்ட அறிக்கையோடு இணைத்து வெளியிட்டார்.

ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் பெயரில் அமைந்த கல்வித்திட்டம் புதிய, துணிச்சலான தி மாகும். இந்தியப் பட்டதாரி இளைஞர்கள் மேற்படிப்பிற்காக இங்கிலாந்திற்கு வருவதற்கு பண உ வி செய் வது திட்டத்தின் ஒரு அம்சமாகும். இத்திட்டத்தின் கீழ்வரும் இளைஞர்கள் தேசிய நோக் டையவர் களாக இருக்க வேண்டும். இந்தியா திரும்பியதும், பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் எவ்வித ழியமும் ஊதியமும், பதவியும்பெறக்கூடாது, இந்திய விடுதலைக்காக தொண்டு புரிய வேண்டும்;சு ந்திரமான தொழிலைச் செய்யலாம். இத்தகைய தேசிய நோக்கில் பல அறக் கட்டளைகளை இ ண்டனில் நிறுவினார் ஷியாம்ஷ் கிருஷ்ணவர்மா.

## பாரதியாரும் இந்தியன் சோஷாலஜிஸ்ட்டும்

**இந்தியன் சோஷாலஜிஸ்ட் பத்திரிகைக்கு இந்தியாவில் திலகரைப் பின்பற்றுவே டையேயும், புரட்சி இயக்கத்தினரிடையேயும் எழுச்சிமிக்க வரவேற்பு கிடைத்தது.**

**மகாகவி சுப்ரமணிய பாரதியார் இந்தியன் சோஷா லிஸ்ட்டைப் படித்து வந்தார். 'இந்தியா' பத்திரிகையில் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவைப்பற்றி எ நம்பொழுது இந்தியன் சோஷாலஜிஸ்ட்டில் வெளிவந்த ஷியாம்ஜியின் ஒரு கட்டுரையைப்பற்றி விரிவ விமரிசனம் செய்துள்ளார்' பாரதியார்.**

ன்வருமாறு புகழநதுளளாா :-



டிசம்பர் 22, 1906 - ம் 'இந்தியா' இதழில் **"தாதாபாய் நவுரோஜியும், கிருஷ்ணவர்மா பண்டிதரும்"** எனும் தலைப்பில் உள்ள கட்டுரை ஸியாம்ஜீயின் பத்திரிகையை, பாரதியார் படிக்கும் வழக்கம் உடையவர் என்பதைப் புலப்படுத்துகிறது. ..............லண்டனிலே இருக்கும் பாரத பக்த சிரோமணியாகிய ஸ்ரீ கிருஷ்ணவர்மா பண்டிதர் தமது **ஸ்வதந்திர பத்திரிகை** யிலே, தாதாபாய் நவ்ரோஜியைப்பற்றி நீண்டதோர் வியாசம் எழுதியிருக்கின்றார்..............இவர், பாரத மாதாவிடம் பக்திசெலுத்துவோர், சிறிதேனும் அரை மனதுகொண்டவராய் இருக்கக் கூடாதென்றும், இந்தியாவின் முழு சுயாதினத்தை விரும்புவோரை சரியான தேசபக்தர்கள் ஆவார்களென்று நினைக்கின்றார்".

பாரதியார் இந்தியன் சோஷாலஜீஸ்ட் இதழில் கொண்ட ஈடுபாட்டை மிகத்தெளிவாகப் புரிந்து கொள்ள மேலும் ஒரு சான்றைப் பார்ப்போம்.

செப்டம்பர், 1908 - ம் இந்தியன் சோஷாலஜீஸ்ட் இதழில் வெளிவந்த ஒரு கட்டுரையின் சாராம்சத்தை, அக்டோபர் 17, 1908 - ம் "இந்தியா" இதழில் பாரதி அளித்துள்ளார்.

"வங்காள நவாப் தன் குமாரனுக்குக் கூறியது" என்னுள் துணைத்தலைப்பில் பாரதியார் இந்தியன் சோஷாலஜீஸ்ட் இதழில் வெளிவந்த ஒரு மேற்கோளை அப்படியே தமிழில் வழங்கி யுள்ளார்.

ஆங்கிலமூலமும், அதன் தமிழ் வடிவமும் வருமாறு:

"Once again I tell you, oh my son, crush the English. If you allow them to have in your land, factories and soldiers, the country you rule will soon be theirs."

—We IV — No. 9 London, September 1908.

**"ஆங்கிலேயர்களை நசுக்கிவிடு. முக்காலும் சொன்னேன். உனது சாம்ராஜ்யத்திலேயே தொழிற்சாலைகளையும், சிப்பாய்களையும் வைத்திருக்க அவர்களுக்கு இடம் கொடுப்பாயானால் அப் பொழுது நீ ஆளும் பூமி வெகுசீக்கிரம் அவர்களுக்கு சொந்தமாகிவிடும்."**

—பக்கம் 14, "இந்தியா" அக். 17 1908

ஷியாம்ஜீகிருஷ்ணவர்மா கல்விகற்ற ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தில் ஹெர்பர்ட்ஸ் பென்ஸர் பெயரில் ஓர் அறக்கட்டளையை நிறுவியவர். இந்தியாவிலிருந்த எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோர் ஐரோப்பா, அமெரிக்கா, பிரிட்டன் முதலான நாடுகளில் தங்கி, அரசியல் தத்துவங்களை நன்கு கற்று, இந்தியாவிற்கு திரும்பிச்சென்று இந்திய மக்களுக்கு விடுதலை உணர்வு, தேசிய நோக்கு பற்றி எடுத்துரைக்க முன்வரவேண்டும் என்பதற்காக 1000 ரூபாய் வீதம் ஆறு நிதி உதவித் திட்டங்களை ஏற்படுத்தினார், சியாம்ஜீ இந்தத் திட்டத்தைப் பாராட்டி தாதாபாய் நவ்ரோஜி தலைமையில் இலண்டன் இந்தியன் சொஸைடி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது இதன் தொடர்பாக தாதாபாய், ஷியாம்ஜீக்கு எழுதிய கடிதம் மார்ச் 1905 - ம் இந்தியன் சோஷியாலஜீஸ்டில் வெளி வந்தது.

இவ்வாறே அரசியல் பிரசாரப் பணியாளர்களுக்காக பல அறக்கட்டளை ளையு நிறுவினார் இந்தியாவில் திலகர், பிபின்சந்திரபால், லஜபதிராய் முதலான தலைவர்களோடு கலந்தாலோசித்தார்.

பிப்ரவரி 28, 1907 - ல் நடைபெற்ற இண்டியன் ஹோம்ரூல் சொஸைடியின் ஆண்டுவிழாவில் அரசியல் பிரசாரப் பணியாளர்களுக்கான பத்தாயிர ரூபாய் நன்கொடை பற்றிய அறிவிப்பை வெளியிட்டார்.

பிப்ரவரியில் வெளிவந்த இந்த அறிக்கையைக் குறிப்பிட்டு பாரதியார் மார்ச் 23, 1907 - ம் 'இந்தியா' இதழில் பின்வருமாறு ரூ."10,000 இனாம்" என்னும் தலைப்பில் எழுதினார்.

**"இந்தியாவிலே "ஸ்வராஜ்ய" உபந்நியாசம் செய்து வருபவர்களின் சகாயத்திற்காக தாம் ரூ 10,000 இனாம் கொடுப்பதாக ஸ்ரீ கிருணவர்மா வாக்களித்திருக்கிறார். இதன் விபரம் பின்பு தெரிவிக்கப்படும்."**

தேசபக்த சமாஜ் அல்லது சொஸைடி ஆப் பொலிடிகல் மிஷனரிஸ் (Society of Political Missioneries) எனும் பெயரில் ஓர் அமைப்பை நிறுவுவது. இத்திட்டம் திலகர், விபின் சந்திரபால், கத்தர் புரட்சி இயக்கத் தலைவர் ஹர்தயான் ஆகியோர் கூற, வகுக்கப்பட்டது. திலகர் மார்ச் 17, 1907 – ம் "மராட்டா" இதழில் இத்திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் சொற்பொழிவுப் பயணம் மேற்கொள்ள உதவும் வகையில் மூன்று ஆண்டுகளுக்கு இத் திட்டத்தின் கீழான நிதி உதவி அளிக்கப்பட வேண்டும். புதிய கட்சியின் அதாவது திலகர் இயக்கம் கோட்பாடுகளை விளக்கவேண்டும். இதற்காக விபின் சந்திரபால் முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டார் ஆனால் அவர் சிறைப்படுத்தப்பட்டதால் இத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. விபின் சந்திர பாலரும் 1908 – ல் தமது பேச்சொன்றில் இதைக் குறிப்பிட்டார்.

சென்னையில் தேசியவாதிகளின் புரவலராக விளங்கிய டாக்டர் எம். சி. நஞ்சுண்டராவ் ஆதரவில் வெளிவந்த "பாலபாரதா" எனும் ஆங்கில ஏட்டின் ஆசிரியராகப் பணியாற்றினார் பாரதியார். இந்தியாவில் வெளிவந்த 'வந்தேமாதரம்', 'யுகாந்திரம்', 'பாலபாரதா' முதலான இதழ்களுக்கும் மாற்றுப் பிரதிகளாக 'இந்தியன் சோஷாலஜிஸ்ட்' பிரதிகள் கொள்ளப்பட்டன. இந்த இதழ்கள் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவின் பாராட்டுதல்களைப் பெற்றன என்பதைப் பெருமையுடன் குறிப்பிட்டார், பாரதியார்.

23—3—1907 இந்தியாவில் பாரதியார் எழுதியதாவது :

"இந்திய ஸ்வராஜ்ய சங்கம்" என்பதோர் சபை லண்டனில் ஸ்ரீ ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா பண்டிதரால் ஸ்தாபனம் பெற்றிருக்கும் விஷயம் நேயர்கள் அறிவார்கள். அதன் இரண்டாம வருஷாந்திரக் கூட்டம் சில தினங்களின் முன்பு லண்டனில் நடைபெற்றது. அப்போது சியாம்ஜி கிருஷ்ண வர்மா அருமையான ஒரு பிரசங்கம் புரிந்தார். அதில் கல்கத்தாவின் 'வந்தேமாதரம்', 'யுகாந்திரம்', என்ற பத்திரிகைகளும், சென்னையிலே நமது 'பாலபாரதா' பத்திரிகையும் இன்னும் பல பத்திரிகைகளும் தோன்றி அரிய தொழில் செய்வது பற்றி சந்தோசம் பாராட்டினார்.

பாரதியாரின் குருநாதர் திலகரின் 'மராட்டா' இதழில் இந்தியன் சோசலிஸ்டின் கட்டுரைகள் மறு வெளியீடு செய்யப்பட்டுவந்தன என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஜூலை 24, 1906 - ல் இலண்டனில் இஸ்லாமிய சங்கத்தார், முஸ்தபா பாசா எனும் எகிப்திய தேசத்தலைவருக்கு அளித்த வரவேற்பில் ஷியாம்ஜீ கிருஷ்ணவர்மா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்ச்சியை அடுத்த மாதமே, ஆகஸ்ட் 18, 1906 – 'இந்தியா' இதழில் செய்தி விமரிசனமாக வெளியிட்டு கிருஷ்ணவர்மாவின் பேச்சு வன்மையைப் பாராட்டினார், பாரதியார்

## வ. உ. சியும் – இந்தியன் சோஷாலஜிஸ்ட்டும்

திலகர் இயக்கத்திற்கு ஆதரவளித்த கிருஷ்ணவர்மா, தமிழகத்தில் திலகர் இயக்கத்தின் போர்க்களமாக விளங்கிய தூத்துக்குடி போர்க்களத்தைப்பற்றியும் இந்தியன் சோஷாலஜிஸ்ட்டில் குறிப்பிட்டது, வியப்பிற்குரிய மகிழ்ச்சியான செய்தியாகும்.

கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார், தூத்துக்குடியை இந்திய விடுதலைப் போராட்டக் களங்களில் தனிச்சிறப்புடையதொன்றாக உருவாக்கி உலகிற்கு அறிமுகப் படுத்தினார். தமிழகத்தின் தன்மானத்தை நிலைநிறுத்தினார்.

வங்கத்தின் 'வந்தேமாதரம்' பத்திரிகையில் வ. உ. சி யின் தூத்துக்குடி போர்க்களத்தின் அரிய சாதனைகள், ஒன்பதிற்கும் மேற்பட்ட தலையங்கங்களில், அதன் ஆசிரியர் அரவிந்தரால் பாரதிய பறை சாற்றப்பட்டுள்ளன.



ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவும் இலண்டனில் இருந்து கொண்டு தூத்துக்குடி போர்க்களச் செய்திகளை அறிந்து வைத்திருந்தார்.

நாவலர் விபின் சந்திரபால் விடுதலைப்பெற்ற நாளைக் கொண்டாட சிதம்பரனார் ஏற்பாடு செய்த கூட்டம் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டது. இந்தியன் சோஸாலஜிஸ்ட் ஏப்ரல் 1908 - ம் இதழில் பின்வருமாறு கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

"To Judge from the brutal murders of unqured innocent Indians who recently assembled at Tinnavelly toExpress their Joy at the release of Bepin chandra pal from Jail and who were butchered at the instance of the British Government,thesafest plan for Indians would seem to be to organise secret and determined and combined disaffection, as suggested by a European friend.

திருநெல்வேலியில் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏவிவிட்ட அடக்குமுறையால் விளைவித்த படுகொலைகளைப் பார்க்கும் பொழுது இரகசிய இயக்கங்களின் தேவை உணரப்படுவதை ஷியாம்ஜி எடுத்துக் காட்டுகிறார்.

## இந்தியப் புரட்சி வீரர்களுக்கு வீர வணக்கம்

புரபுல்ல சாகி, குதிராம்போஸ், கனைலால்தத், சத்யேந்திரநாத்போஸ் முதலான புரட்சி வீரர்களுக்கு இந்தியா விடுதியில் நினைவுச்சின்னங்கள் நிறுவுவதற்குரிய கருத்துகளையும் இந்தியன் சோஷாலஜிஸ்ட் இதழில் டிசம்பர் 1908 – ல் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா வெளியிட்டார். ஷியாம்ஜி ஐரோப்பா, அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளில் இருந்த இந்தியப்புரட்சி இயக்கங்களுக்கும் இந்தியாவின் ரகசிய புரட்சி இயக்கங்களுக்கும் இடையே ஓர் இணைப்புச் சக்தியாக விளங்கினார்.

இலண்டன் வந்த சமயங்களில் கோபால கிருஷ்ண கோகலே, இலண்டன்வாழ் இந்திய இளைஞர்கள், ஷியாம்ஜியின் போதனைகளில் கவர்ச்சியுற்றதைக் கவலையுடன் எடுத்துரைத்தார்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில்' ஷியாம்ஜியின் இந்தியன் சோஷாலஜிஸ்ட் இதழின் பிரசாரம் பற்றி கேள்வி கேட்கப்பட்டது.

ஜூலை 1907 – ல் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் ஜே. டி. ரீஸ் என்னும் உறுப்பினர், இந்திய ராஜாங்கச் செயலர் மார்லி பிரபுவிடம் இந்தியன் சோஷாலஜிஸ்ட் இதழின் தலையங்கப் பகுதியொன்றைச் சுட்டிக் காட்டினார்.

ஜே. டி. ரீஸ் சுமத்திய குற்றச்சாட்டின் சுருக்கம் வருமாறு :

"இந்தியன் சோஷாலஜிஸ்ட் தலையங்கத்தில், கிருஷ்ணவர்மா, "அந்நிய ஆதிக்கத்தை அகற்ற வேண்டும் என எடுத்துரைக்கும் ஒரு சுதேசி, கலகக்காரர் என அழைக்கப்பட்டால், அவ்வாறு அழைக்கப் படுவது பெருமைக்குரியதாகும்", எனக்கூறியுள்ளார். "இந்திய தேசபக்தர்களில் ஒரு பிரிவினர் இந்தியாவிற்கு முழு விடுதலை வேண்டும் எனக் கோருவதோடு அமையாமல், இந்தியாவில் இங்கிலாந்து சுரண்டி ஏழைமக்களின் கோடிக்கணக்கான செல்வத்தையும் திரும்பப் பெறவேண்டும் எனவும் கோருகின்றனர்". இவ்வாறு கிருஷ்ணவர்மா மேலும் எழுதியுள்ளார். ஆகவே, ராஜவிசுவாசிகளான பிரிட்டிஷ் மன்னரின் குடிமக்களை, மோசமாகக் கெடுக்கும் விருப்பத்தகாத இந்த அன்னியனை

இங்கிலாந்தில் இருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய ராஜாங்கச் செயலாளரைக் கேட்டுக்கொள்கிறேன்."

இந்திய ராஜாங்கச் செயலர், ரீஸ்ஸின் கோரிக்கையை ஏற்கவில்லை ஆனால் இந்தியன் சோஷியாலஜிஸ்ட் இந்தியாவிற்குள் வருவதற்கு செப்டம்பர் 1907 முதல் தடை விதிக்கப்பட்டது. ரகசிய வழிமுறைகள் மூலம் இந்தியன் சோஷியாலஜிஸ்ட் இந்தியாவிற்குள் தடைபடாமல் வந்தன.

இத் தடையைப் பற்றி, பிப்ரவரி 1908 – ம் இந்தியன் சோஷியாலஜிஸ்ட் இதழில் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா எழுதியதாவது : "நமது பிரசார சக்திக்கு கிடைத்த வெற்றியாக இதைக் கருதுகிறோம் ................அனைத்து எதிர்ப்புகளையும், தடைகளையும் மீறித் தொடர்ந்து இந்தியாவிற்குள் இந்தியன் சோஷியாலஜிஸ்ட் வழக்கம்போல் சென்றுகொண்டிருக்கும்."

இவ்வாறு 1910 – ல் நியூயார்க்கில் இருந்து பாண்டிச்சேரி இந்தியா, பத்திரிகை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட இதழ்களை சென்னை போலீசார் கைப்பற்றினர்.

பிரிட்டன் நாடாளுமன்றத்தில் தம்மைப்பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியையும் பதிலையும் இந்தியன் சோஷாலஜிஸ்ட்டில் வெளியிட்டு (செப்டம்பர் 1907 - ல்) பின்வரும் விளக்கத்தையும் எழுதினார் :

"பத்து ஆண்டுகளுக்கு முன்பு நமது நண்பர் பாலகங்காதர திலகரும், நமது சகோதரர்களும் சிறைப்படுத்தப்பட்டபொழுது இந்தியாவிலிருந்து வெளியேறி இங்கிலாந்தில் குடியேறுவதென முடிவு செய்தேன். இப்பொழுது மற்றொரு நண்பரான லாலா லஜபதிராய் நாடு கடத்தப்பட்டுள்ளார். இந்தச் சூழ்நிலையில் இங்கிலாந்தில் இருந்து தொடர்ந்து பணியாற்ற நான் விரும்பவில்லை. பணச் செலவும், சொந்த அசௌகரியங்களுக்கிடையே நான் பாரிஸ் நகரை என் தலைமைச் செயலகமாகக் கொள்கிறேன்."

ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா பாரிஸ் சென்ற பிறகும் இலண்டனில் இருந்து இந்தியன் சோசியாலஜீஸ்ட் தவறாமல் வெளிவருமாறு பார்த்துக் கொண்டார்.

ஆசிரியர் பாரிசில் இருக்க இலண்டனில் இருந்து இந்தியன் சோஷியாலஜிஸ்ட் வெளிவருவதில் தோன்றத் தொடங்கின. இதழைப் பதிப்பித்துவந்த அச்சக உரிமையாளர் ஆர்தர் எப். ஹார்ஸ்லே மீது வழக்கு தொடரப் பட்டது. 23 ஜூலை 1909 – ல் நான்குமாத சிறைவாசதண்டனை ஹார்ஸ்லேக்கு விதிக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து அச்சிட்ட கெய் ஆல்ட்ரெட் என்னும் இளைஞரும் செப்டம்பர் 10, 1909 – ல் ஓராண்டு சிறைவாச தண்டனைக்குள்ளானார்.

தமக்கு உதவியாக இருந்த நண்பர்கள் இருவரும் சிறைப்படுத்தப்பட்டதற்குப் பிறகு வேறு வழியில்லாமல் இந்தியன் சோஷியாலஜிஸ்ட் இதழை பாரிசில் இருந்து வெளியிட்டு வந்தார் ஷியாம்ஜீ கிருஷ்ணவர்மா.

இலண்டனில் மதன்லால் திங்கரா கர்சன் வைலியை சுட்டுக் கொன்ற நிகழ்ச்சிக்குப் பிறகு பிரிட்டிஷ் காவல் துறையினர் இலண்டனில் இந்தியா விடுதிமீது கண்காணிப்பை மேற்கொள்ளத் தொடங்கினர்.

ஷியாம்ஜீ கிருஷ்ணவர்மா, மதன்லால் திங்கராவின் வீரச் சாகசச் செயலுக்கு நேரடியான பாராட்டுதல்களைத் தெரிவிக்க காலம் தாழ்த்தினார். கர்சன்வைலி உதயபூரில் இருந்த பொழுது சியாம்ஜீ கிருஷ்ணவர்மாவை பலமுன்ற எதிர்த்தார். இதனால் மதன்லால் திங்ரா, கர்சான்வைலியைக் கொன்றதில் ஷியாம்ஜீயின் தூண்டுதலும் இருக்கலாம் என்று இலண்டன் டைம்ஸ் பத்திரிகை கருதியது. இக்கூற்றை மறுத்தார் ஷியாம்ஜீ ஆனால், "நான் திங்ராவின் செயலை மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். இந்திய விடுதலைக்காகச் செயல்பட்ட இந்தத் தியாகத்தைப் போற்றுகிறேன்." என்று சியாம்ஜி டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதிய மறுப்பில் குறிப்பிட்டார்.



அக்டோபர் 1907 – இந்தியன் சோஷியாலஜிஸ்ட் இதழில் ஒரு செய்தி நிருபர் எழுதிய கட்டுரையை வெளியிட்டார். இந்தக் கட்டுரையில் இந்திய ராஜாங்கச்செயலர் மார்லிபிரபு அமைத்த ஒரு குழுவைப் பற்றிய செய்தி உள்ளது.

இங்கிலாந்தில் இந்திய மாணவர்களிடையே, இந்தியன் சோஷாலஜிஸ்ட் ஆசிரியரின் கொள்கைகள் பரப்பப்படுகின்றனவா? என்பதைக் கண்டறிய இக்குழு அமைக்கப்பட்டது. சர். வில்லியம் லீவார்னர், டி. மாரிசன் என்போர் இருவரோடு சர். வில்லியம் கர்சான்வைலியும் மூன்றாவது உறுப்பினராக மேற்படிக்குழுவில் நியமிக்கப்பட்டார். "இந்தியவிவசாயிகள் வறுமையில் ஆழ, வருத்தமே படாத இந்திய எதிரிகள் உண்டு கொழுத்தனர்"எனக்குழுவின் உறுப்பினர்களைப் பற்றிய கண்டனமும் கட்டுரையில் கூறப்பட்டது.

இந்தியன் சோஷியாலஜிஸ்ட் செப்டம்பர் 1909 – முதல் 1914 வரையில் பாரிசிலிருந்து வெளிவந்தது. இக்கால கட்டத்தில் 'பாரிஸ்குழு' என்ற இந்தியப் புரட்சி இயக்கத்தினருடன் நெருக்கமானத் தொடர்பு ஷியாம்ஜிக்கு ஏற்பட்டது. இக்குழுவில் மேடம்காமா, கவிஞர் வீரேந்திர நாத் சட்டோபாத்யாயா எம். பி. டி. ஆச்சார்யா, வ. வெ. சு. ஐயர், லாலா ஹர்தயாள், தாதாபாய் நவ்ரோஜியின் பேத்தி பெரின் நவ்ரோஜி ஆகியோர் இருந்தனர். பெரின் நவ்ரோஜியின், "ஹாய் ! மர்தானோ ஹிந்தியா, ஜல்திலோ ஹத்தியார்(ஓ வீரம்மிக்க இந்தியர்களே! ஆயுதங்களைவிரைந்து எடுங்கள்)எனத் தொடங்கும் தேசபக்திப் பாடல் பாரிஸ்குழுவில் பிரபலமாய் வழங்கியது

பாரிசில் மேடம்காமா அறிமுகப்படுத்த, பாவ்லோவிச் (M. Pavolovich) எனும் நாடுகடத்தப்பட்ட ரஷ்யப்புரட்சியாளருடன் நட்பு கொண்டார். ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா. அக்டோபர் 8, 1909 – ல் பாவ்லோவிற்கு எழுதிய கடிதத்தில், தமது பணியைப் பாராட்டிய பாவ்லோவிக்கிற்கு நன்றியைத் தெரிவித்தார். ரஷ்யாவின் புகழ்பெற்ற எழுத்தாளர்களான மாக்சிம்கார்க்கி, டால்ஸ்டாய் ஆகியோர்க்கு இந்தியன் சோஷியாலஜிஸ்ட் இதழ்களை அனுப்பி வந்தார், ஷியாம்ஜி.

25, பொலிவர்ட் மெகண்டா, பாரிஸ் (25, Boulevard Magenta, Paris) என்னுமிடத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது, இந்தியன் சோஷியாலஜீஸ்ட் செப்டம்பர் 1909 இதழில் பயங்கரவாதஇயக்கம் எதிரிகளின் – பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மனப்பான்மையில் மாறுதலை தோற்றுவிக்கின்றது என பின்வருமாறு ஷியாம்ஜீ குறிப்பிட்டார்.

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இலண்டன் டைம்ஸ், "இந்தியாவை நாம் வாள்முனையில் வென்றோம். வாள்முனையாலேயே தக்க வைத்துக் கொள்ள வேண்டும்," என எழுதியது. அதே பத்திரிகை இப்பொழுது "இந்திய இராணுவத்தினால் மட்டும் இந்தியாவை நாம் நம்வசம் வைத்துக் கொள்ள முடியாது", என்று குறிப்பிடுகிறது. எதிரிகள் முகாமில் ஏற்பட்ட இந்தப் பொதுக் கருத்தை, சிறிய அளவிலான பயங்கரமும், வன்முறை எதிர்ப்புகளும் உருவாக்கின. ஆயுதப் போராட்டத்திற்கு வாய்ப்பில்லாத நிலையில், திட்டமிட்ட பயங்கரவாத இயக்கம், நமது மக்களின் பிறப்புரிமையான இந்திய சுதந்திரத்தை நன்கு சாதனை செய்யும்."

1917 – ல் நன்கு திட்டமிடப்பெற்ற மகத்தான அக்டோபர் சோஷலிச மக்கள் புரட்சி இயக்கம் தோன்றுவதற்குமுன், தனி நபர் பயங்கரவாத விடுதலைப்போராட்டத்தின் புரட்சிகர சிந்தனையில் செல்வாக்கு பெற்றிருந்தது.

ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா, முதல் உலக மகாயுத்தம் தொடங்கிய காலத்தில்' பாரிசை நீங்கி, ஸ்விட்சர்லாந்து நாட்டிற்கு சென்றார். அங்கு இந்தியன் சோஷாலஜீஸ்ட்டை வெளியிடுவதை ஸ்விஸ் அரசாங்கம் ஆதரிக்கவில்லை. யுத்தகாலத்தில் ஸ்விஸ் நாட்டின் நடுநிலைமைக்கு ஊறு தேடதாம் விரும்பவில்லையென அறிக்கை வெளியிட்டு, பத்திரிகையை நிறுத்தினார். சியாம்ஜி.

மீண்டும் 1920 - முதல் 1922 வரையில் இந்தியன் சோஷாலஜிஸ்ட் வெளிவந்தது.

இலண்டனில் ஒரு புரட்சிக்களமாய் 'இந்தியாஹவுஸ்' புகழ்பெற இந்தியன் சோஷாலஜிஸ்ட் இதழ் ஒரு முக்கிய காரணமாய் விளங்கியது.

இனி, இந்தியன் ஹோம்ரூல் சொசைடி மூலம் இந்தியா ஹவுஸின் புகழை எவ்வாறு ஷியாம்ஜி பரப்பினர் என்பதைப் பார்ப்போம்.

## இந்தியன் ஹோம்ரூல் சொசைடி

இந்தியன் ஹோம்ரூல் சொசைடி, பிப்ரவரி 1905 ல் இலண்டன் ஐரிஷ் தேசபக்தர்கள், பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் தலைவர் எச். எம்.ஹைண்ட்மேன் ஆகியோர் ஆலோசனைகூற, ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவால் தொடங்கப்பட்டது. இதன் தலைவர் ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா, ஒன்பது துணைத்தலைவர்கள்.

துணைத்தலைவர்கள் பட்டியலில் தமிழர் ஒருவர் பெயரும் உள்ளது. அவர்பெயர் சி. முத்து (C. Muthu, M. D., M. R. C. S., L. R. C. P. [LOND])

கௌரவச் செயலாளர் ஜே. சி. முகர்ஜீ.

நோக்கங்கள் வருமாறு :

1, இந்தியாவிற்கு 'ஹோம்ரூல்' எனப்படும் ஆட்சியுரிமையைக் கோருவது.

2, இதற்காக பிரிட்டனில் சாத்யமான எல்லா வழிகளிலும் பிரசாரம் செய்தல்,

3, விடுதலை,தேசிய ஒற்றுமை ஆகியவற்றின் பயன்களைப் பற்றி இந்திய நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறுவது.

இந்தியர்கள் மட்டுமே உறுப்பினராகலாம் உறுப்பினருக்கான ஆண்டுக் கட்டணம் மூன்று ஷில்லிங் அல்லது இரண்டேகால் ரூபாய். உறுப்பினர்களுக்கு இந்தியன் சோஷாலஜிஸ்ட் இலவசமாக அனுப்பப்படும்.

பொதுக் குழு, நிர்வாகக் குழு மற்றும் பிற விதிமுறைகள் யாவும் இந்தியன் சோஷாலஜிஸ்ட் மார்ச் 1905 -ம் இதழில் வெளிவந்துள்ளன.

ஷியாம்ஜியின் இந்தியன் ஹோம்ரூல் சொசைடியை லாலா லஜபதிராய், தாதாபாய்-நவ்ரோஜி, திலகர், விபின் சந்திர பால் ஆகியோர் வாழ்த்தினர்.

கோபால கிருஷ்ண கோகலே, சுரேந்திர நாத் பானர்ஜி, ஹ்யூம், வெட்டர்பர்ன் ஆகியோர் கண்டித்தனர்.

ஓர் ஆண்டிற்குள் 119 உறுப்பினர்கள் சேர்ந்தனர். ஹோம்ரூல் இயக்கத்திற்குக் கிடைத்த பலத்த ஆதரவை, இது குறித்தது. பாரிஸில் எஸ். ஆர். ராணா என்னும் புரட்சி வீரர் தலைமையின் கீழ் இந்தியன் ஹோம்ரூல் சொசைடியின் கிளை ஒன்று அமைந்தது.

சியாம்ஜியின் நன்கொடை, அறக்கட்டளை அறிவிப்புகள் இந்திய இளைஞர்களுக்கு ஊக்கமளித்தன.

இந்திய அரசாங்கத்தின் 14, மார்ச் 1906தேதியிட்ட குறிப்பின்படி சியாம்ஜியின் மேற்படிப் பிற்கான நிதி உதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வருமாறு :



1. அப்துல்லா அல்மாமும் சுஹர்வர்த்தி, 2. சையத், 3. அப்துல்மஜீத், 4. ஷேய்க்அப்துல்அஜி 5. வி. டி. சாவர்க்கார், 6. பி.என். முகர்ஜி, 7. மொய்தீன் அகமது, 8. கே.எல். வர்மா, 9. பி.சி. செ 10. ஆர். ஜி. பிரதான் பரமேஸ்வர்லால், 11. ஸ்வரூப் சந்தரமுகர்ஜி.

1905 –ல் ஐவரும் 1906ல் மற்றவர்களும் இலண்டனுக்கு வந்தனர். முன்கூறப்பட்டவர்களு பரமேஸ்வர்லால், அப்துல்லா அல்மாமும் சுஹர்வர்த்தி இருவரும் இந்தியன் ஹோம்ரூல் சொசை யின் துணைத்தலைவர்கள் ஆவார்கள்.

இந்தியன் ஹோம்ரூல் சொசைடியில் பங்கேற்றதை முஸ்லீம் தலைவர்கள் சிலர் எதிர்த்தன முஸ்லீம் மக்களை தேசிய காங்கிரஸோடு ஒத்துழைக்கக் கூடாது எனக்கூறி, பிரிவினை மனப்பா மையை வளர்த்த சையத் அகமத்கான் வழிவந்தோர் அப்துல்லா சுஹ்ரவர்த்தியை கண்டித்தன ஆனால் புரட்சி இயக்கத்தில் இந்து - முஸ்லீம் எனும் மத உணர்வு, பிரிவினை வாதத் ஏற்பிக்கவில்லை.

## இலண்டனில் 1857 புரட்சியின் முதல் கொண்டாட்டம்

ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா 1857 புரட்சியின் தேசிய வரலாற்று முக்யத்துவத்தை உணர்ந்தவர் இதைப் பாராட்டும் வகையில் இலண்டனில் முதன் முறையாக 1857 புரட்சி நினைவு நாளை 9 மே 1905ல் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டது. ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவை கௌரவிக்கும் வகையில் அவருக்கு ஒரு விருந்துபச்சாரம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஷியாம்ஜியி இந்தியன் ஹோம்ரூல் சொசைடியை ஆரம்பிக்குமாறு யோசனை கூறிய பிரிட்டிஷ் சோசலிஸ் தலைவரான எச். எம். ஹைண்ட்மேன் தமது "ஜஸ்டிஸ்" பத்திரிகையில் 1857 - புரட்சியின் சிற கூட்ட நிகழ்ச்சியைப் பற்றிய் செய்திகளை வெளியிட்டார்.

ஹோம்ரூல் சொசைட்டியின் துணைத்தலைவர்களுள் ஒருவரான ஜே. எம். பரீக் வழக்கறிஞ தலைமையேற்றார். திரு, சட்டர்ஜீ என்பவர் பேசும் பொழுது "இந்தியாவின் எதிர்காலம் அத அரசியல் விடுதலையில்தான் உள்ளது.சியாம்ஜீயின் கொள்கைகள் பரவிட உதவும் ஒரு கூட்டம் இதுவே " என்றும் திரு சட்டர்ஜி கூறினார்.

டாக்டர் பெர்ரியா என்பவர் ஹோம்ரூல் சொசைடியின் துணைத் தலைவர்களுள் ஒருவ ரத்தம் சிந்தும் போராட்டத்தினால்தான் இந்தியா விடுதலை பெறும் என்று முழங்கினர்.

1905 முதல் ஆண்டு தோறும் 1857 புரட்சியின் நினைவு நாளைக் கொண்டாடும் வழக்கத்தை இந்தியா ஹவுசில் ஏற்படுத்தினார் ஷியாம்ஜீ கிருஷ்ணவர்மா.

1857 புரட்சியை முதல் இந்திய தேசிய விடுதலைப் போர் எனச்சாற்றி அதற்காக இலக்கிய படைத்து ஓர் இயக்கத்தையும் வீர சாவர்க்கார் படைத்தார்என்றால் அதற்கு மூலகாரணம் ஸ்ரீ வர் ஆவார். 1906–ல் திலகர் பரிந்துரையுடன் ஸ்ரீ வர்மாவின் இந்தியா விடுதியில் சேர்ந்த சாவர்க்கார். இலண்டன் 'இந்தியா ஆபீஸ்' (INDIA OFFICE) நூலகம், பிரிட்டிஷ் மியூசியம் நூலக இரண்டையும் பயன்படுத்தி பதினெட்டு மாதங்கள் ஆய்வு செய்து ஏப்ரல் 1908 - ல் மராத்தி மொழியில் ''முதல் இந்திய விடுதலைப்போர் 1857" என்னும்அரிய ஆய்வுநூலைஎழுதி முடித்தா

இந்தியாவில் நாசிக்கில் உள்ள தமது சகோதரரிடம் பாபுராவ் சாவர்க்கார் கையெழுத்து பிரதியை அனுப்பினர் ஆனால் இந்தியாவில் எந்த அச்சகமும் இதை அச்சிட முன்வரவில்லை பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கடுமையான கண்காணிப்பே இதற்கு முக்ய காரணமாகும்.

இலண்டன் அபி நவ பாரத சபையின் (சாவர்க்கார் இந்தியாவில் அமைந்த அபிநவபாரத சபையின் கிளை) உறுப்பினர்களில் மராட்டிய மொழி அறிந்த பட்கே போன்றோர் வ. வே. சு. ஐயரின் மேற்பார்வையில் சாவர்க்கரின் நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர் 1909 -ல் ஹாலந்தில் அச்சிடப்பட்டது.

சாவர்க்கார் ஒரு வரலாற்று நூல் எழுதப்போக அதை அச்சேற்ற எடுத்த முயற்சிகளே ஒரு வரலாறாக ஆகிவிட்டது.

இந்தியா ஹவுசில் சாவர்க்காரின் புரட்சி நூல் கையெழுத்துப் பிரதியாக இருந்த நிலையில் வேதமென மதிக்கப்பட்டு ஓதப்பெற்றது. இந்தியா ஹவுசில் நடைபெறும் கூட்டங்களில் இந்நூலின் கையெழுத்துப்பிரதி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வந்த நிலையில் பகுதிப பகுதியாக படிக்கப் பட்டது, விவாதிக்கப்பட்டது. பிரிட்டிஷ் அரசாங்க குறிப்புகள் ஒன்றில் இந்தியா ஹவுசின் மாணவர்கள் எவ்வளவு எழுச்சியுடன் சாவர்க்காரின் கையெழுத்துப் பிரதியைப் போற்றிக் கொண்டாடினர். என்பது கூறப்பட்டுள்ளது. அக்குறிப்பு கூறுவதாவது :

4 ஏப்ரல், 1909 – ல் இந்தியா ஹவுசில் இருபத்தைந்து இந்திய இளைஞர்கள் கூடினர். சாவர்க்காரின் வலக்கரமான வ. வெ. சு. ஐயர் நூறு பக்கங்களைப் படித்தார். ஒலித் பிரதேசத்தில் வெடித்தெழுந்தப்புரட்சியை வருணிக்கும் பகுதி, அது, பகதூர்ஷாவின் திருப்பெயர் ஒலித்த பொழுது அவையினர் அனைவரும் எழுந்து நின்று ஆரவார ஒலி எழுப்பி உணர்ச்சி வெள்ளத்தின் மட்டிலா மகிழ்ச்சியில் திளைத்தனர்.

1907- ல் மே முதல் நாள் பிரிட்டனில் 1857 – புரட்சியை தோற்கடித்த வீரர்களுக்கு நன்றி கூறும் நாளாகக் கொண்டாடப்பட்டது.

டெய்லி டெலிகிராப் எனும் செய்தி ஏடு மே, 1907 -ல் "ஐம்பதாண்டுகளுக்கு முன்பு இதே வாரத்தில் வீரச் செயல்களால் ஒரு சாம்ராஜ்யம் காப்பாற்றப் பட்டது," என எழுதியது.

ஜான்ஸி ராணி லட்சுமி பாயையும், மாவீரர் நானா சாஹிப்பையும், கொடிய கொலைக்காரர்களாகச் சித்தரிக்கும் நாடகத்தை இலண்டனில் வெள்ளையர் அரங்கேற்றினர்.

இந்த இழிவான நிகழ்ச்சிகள் "இந்தியா ஹவுஸ்" தேச பக்தர்களை கிளர்ந்தெழச் செய்தன. சாவர்க்காரின் நூலை, போர்வாளாகப் பயன் படுத்திய அந்த தேச பக்தர்கள் "இந்தியா ஹவுஸி"ல் புரட்சியின் ஐம்பதாம் ஆண்டின் நினைவு நாளை விழாக் கோலத்துடன், போர் உணர்ச்சி பொங்கக் கொண்டாட திட்டமிட்டனர். வீர சாவர்க்கார் முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்தார்.

அழைப்பிதழ் பின்வருமாறு அமைந்திருந்தது.

**Bande Mataram**

To.

Commemerate the anniversary of
the
INDIAN NATIONAL RISING
of 1857
A. MEETING of INDIANS IN
ENGLAND
Willl be held at
INDIA HOUSE
65, Cromwell Avenue Highgate N.



on Sunday the 10th of May 1908,
at 4 P. M. Precisely
You and all your indian friends are
Cordially invited to be present.

இந்தியா ஹவுஸ் மலர்களாலும் விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டு பகதூர்ஷா, நாநா-சாகிப், ராணி லட்சுமிபாய், ராஜாகுன்வர்சிங், மௌல்வி அகமதுஷா, ஆகியோரின் உருவப் படங்கள் சிவப்புத் திரையில் ஒளிவீசின.

திரு கியான் சந்த் வர்மா என்பவர் வந்தே மாதர தேசிய கீதத்தைப் பாடினார். திரு. வ. வே. சு. ஐயர், ஒரு பாட்டிற்குப் பிறகு இறை வணக்கத்தை ஓதினர். எஸ். ஆர். ராணா எனப்பட்ட சர்தார் -சிங்ஜீ ரேவாபாய் ராணா தலைமை வகித்தார் பாரிசில் இருந்து அவருடன் தனிக்குழுவே வந்து விழாவில் கலந்துகொண்டது. மேடம் காமா வாழ்த்துச் செய்தியை அனுப்பிவைத்தார். வீர சாவர்க்கார், பகதூர்ஷா நாநாசாகிப்பின் தியாகங்களையும், துன்பங்களையும் கேட்டோர் கண் கலங்க உருக்கமாக எடுத்துரைத்தார். இந்திய நாட்டு விடுதலைக்காக சூளுரைகள் மேற்கொள்ளப்பட்டன விசேஷ பாட்ஜிகள் அணியப்பட்டன. 1857 – புரட்சி வீரர்களின் நினைவாகத் திரட்டப்பட்ட நிதி திட்டத்திற்கு மேடம் காமா கணிசமான தொகையை அளித்தார். எஸ். ஆர். ராணா தமது ஒரு மாத வருவாயை அளித்தார். 1857-ல் புரட்சியின் தொடக்கத்தை ரகசியமாகக் காட்டும் வகையில் சப்பாத்திகள் வழங்கப்பட்டன. அந்த நிகழ்ச்சியைப் போற்றும் வண்ணம் ஐம்பதாம் ஆண்டு நினைவு நாள் கூட்டத்தில் சப்பாத்தி பிரசாதங்களாக அளிக்கப்பட்டன.

ஸ்ரீ வர்மா, பாரிசுக்குச்சென்றபிறகு, 'இந்தியா ஹவுஸின்' தலைவராக சாவர்க்கார் செயல் பட்டார். பாரிஸில் இருந்துகொண்டு எஸ். ஆர். ராணாமூலம் இந்தியா ஹவுஸின் நிதிநிலையைக் கவனித்துவந்தார் ஷியாம்ஜி.

## சாவர்க்காரின் தலைமையின்கீழ் இந்தியா ஹவுஸ்

இந்தியா ஹவுஸை ஒரு புரட்சிகரச் சிந்தனைக்கூடமாக அமைத்தவர் ஸ்ரீ வர்மா; அதை ஒரு புரட்சிகரச் செயற்களமாக மாற்றியவர் வீர சாவர்க்கார்.

வீர சாவர்க்காரின் காலகட்டத்தில், இந்தியா ஹவுஸ் பற்றி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் "வ.வெ. சு. ஐயர்" என்னும் நூலில் (பக். 35 - 36) கூறியுள்ளதாவது :

"சுதந்திர இந்தியா சங்கம்" என்ற பெயருள்ள ஒரு ஸ்தாபனத்தை நாங்கள் நடத்தி வந்தோம். இதற்கு விநாயக சாவர்க்காரும், ஐயரும் உயிர் நாடிகள். பெரும்பாலும் சீமைக்கு படிக்க வந்த இளைஞர்களே அதன் அங்கத்தினர்கள் தினந்தோறும் தேசத்திற்காக ஒரு தொண்டு செய்ய வேண்டும். என்பது ஒவ்வோர் அங்கத்தினருக்கும் நிபந்தனை. தினசரி குறிப்பு வைத்துக் கொண்டு அடிக்கடி தணிக்கை செய்வது வழக்கம். இந்தியா, இங்கிலாந்து இத்தேசங்களில் இருக்கும் பத்திரிகைகளுக்கு கடிதங்கள், குறிப்புகள் முதலியன எழுதுவதும் ஒரு சேவை எனக் கருதப்பட்டது. ஐயர் அக்காலத்தில் சென்னையிலும், புதுவையிலும் நடைபெற்றுவந்த பத்திரிகைகளுக்குத் தலையங்கங்களும், இந்தியா பத்திரிகைக்குத் தொடர்ச்சியாகச் சுமார் ஒரு வருஷகாலம் வரையிலும் கரிபால்டி சரித்திரமும் எழுதிவந்தார். என் பங்கிற்கு ராணி லட்சுமிபாயின் சரித்திரத்தை எழுதி வந்தேன். விநாயக சாவர்க்கார் மகாராஷ்டிரத்தில் 'இந்தியாவின் சுதந்திரயுத்தம்' என்னும் புத்தகம் எழுதி வந்தார். இதன் மகாராஷ்டிரப் பதிப்பும் ஆங்கிலப்பதிப்பும் இந்தியாவிற்குள் வரக்கூடாது என அரசாங்கத்தார் தடுத்து விட்டார்கள். தேகப்பயிற்சி, குதிரை ஏற்றம், மோட்டார் ஓட்டக் கற்றுக் கொள்ளுதல், குத்துச்சண்டை, துப்பாக்கிப்பிரயோகம் இவைகளில் பயிற்சியும் தேச [illegible]

குதிகளாகவே சங்கத்தாரால் கருதப்பட்டன. சங்கத்தின் வேலைகள் ஆங்கில அதிகாரிகளுக்கு ரட்டின. எங்கள் விடுதியும் நாங்களும் ரகசியப்போலீஸ் காரர்களின் ஓயா கவனிப்புக்கு ஆளானோம்."

இந்தியா ஹவுஸில் விபின் சந்திரபால், லாலா லஜபதிராய், மேடம் காமா, திலகரின் தோழர் ாபர்டே, ஹர்தயாள் ஆகியோர் சொற்பொழிவாற்றியுள்ளனர்.

28 டிசம்பர் 1908- ல் குரு கோவிந்த சிங்கின் பிறந்த நூற்றாண்டுவிழா கொண்டாடப்பட்டது பின் சந்திரபால் தலைமை வகித்தார். லாலா லஜபதிராய் டாக்டர் கோகல் சந்த்நாரங் ஆகியோர் பேசினர்; 150 பேர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியா ஹவுஸில் இந்தியப் புரட்சித் தாய் மேடம் காமாவும், நாவலர் விபின் சந்திரபாலும் சம்பர் 19, 1908 -ல் சொல்மாறி பெய்தனர். '**இந்திய தேசீயம்**' (Indian Nationalism) என்னும் லைப்பில் விபின் சந்திரபால் நிகழ்த்திய பேருரையைச் செவிமடுப்பதற்காக பாரிசில் இருந்து வந்த மேடம் காமா, இந்தியில் சொற்பொழிவாற்றினார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறையை ஆவேசமாகத் தாக்கி, ஆயுதப் புரட்சியின் அவசியத்தை வலியுறுத்தினார்.

## வ. உ. சி. பற்றி மேடம் காமா

தமது வீர உரையின் இறுதியில் இந்தியாவில் திலகருக்கும், வ. உ. சிதம்பரனாருக்கும் விதிக்கப்பட்ட கொடும் தண்டனையை எதிர்த்து குரல்கொடுத்தார். சிதம்பரனாரை 'மிஸ்டர் பிள்ளை' என்று அன்போடு அழைக்கும் வழக்கத்தைபொட்டி மேடம் காமாவும் தமது பேச்சில் பிள்ளை என்று குறிப்பிட்டார். மேலும் காமா குறப்பிட்டதாவது :

"We have seen such a travesty of Justice in cases of Tilek and Pillay." (திலகர், பிள்ளை மீது சுமத்தப்பட்ட வழக்குகளில் நகைப்பிற்குரிய பிரிட்டிஷ் நீதியின் போலித்தனத்தைக் கண்டோம்.)

## இந்தியா ஹவுஸில் மூன்று தமிழர்கள்

சாதி, சமய, இன வேற்றுமைகளிடையே ஒற்றுமையுடன் தொண்டு புரிய வாய்ப்பளித்தது இந்தியா ஹவுஸ் இத்தகைய"ஒற்றுமை உணர்வுடன் புரட்சி மனப்பான்மையுடன், பணி புரிந்த மூன்று தமிழர்கள் இன உணர்வுடன் போற்றத்தக்கவர்கள்.

வ.வெ.சு. ஐயர், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், எம்.பி.டி. ஆச்சார்யா என்பவர்களே அந்த மூன்று தமிழர்கள்.

## வ.வெ.சு. ஐயர்

இவர்களில் முடிமணியாய் ஒளிவீசுபவர் வ.வெ.சு. ஐயர்

1881-ல்பிறந்த வ.வெ.சு. ஐயர் (வரகனேரி வேங்கட சுப்ரமணிய ஐயர்) பிறந்த நூற்றுண்டு விழாவின் அமர நாயகராக 1981-ல் நம் சிந்தனையை கவர்கிறார்

சேர்மா தேவி குரு குலத்தால் மூண்டெழுந்த வகுப்பு வாதப் பேய்க்காற்று வ.வெ.சு. ஐயரின் சான்றாண்மையை, தியாகத்தை, புரட்சியுள்ளத்தை, தமிழ்ப்பற்றை நடு நிலைமையோடு மதிப்பிட்டு



ஏற்றிப் போற்றத் தடுத்து வருகிறது. ஆனால், வரலாறு, அதன் நியாயமானப் போக்கில் தீர்ப்பு வழங்கும். இத்திசையில் ஒளி பாய்ச்சும் ஆய்வுகள் தொடங்கியுள்ளன. சேர்மா தேவி குரு குலத்தில் மாணவர்களின்கலந்துண்ணல் ஏற்பாட்டிற்கு தொடக்கத்தில், பிறர்காரணமாக வ.வெ.சு.ஐயர் இணங்கத் தயங்கியது ஒருமனித பலவீனமே. ஆனால்பிரிட்டன், பிரான்ஸ், பாண்டிச்சேரி, தமிழ்நாடு ஆகிய எங்கும் அம்மாவீரன் ஆற்றிய புரட்சிகர அரசியல் தொண்டுகள், புதுமை தமிழ் இலக்கியப் பணிகள் மாபெரும் மானுட வீரராக விளங்கி அந்த சிறிய மனித பலவீனத்தை ஒதுக்கக் கோருகிறது. காவ்ய கண்ட கணபதி முனிவர் எனும் தேச பக்த-மெய் ஞானியின் சமரச திட்டத்தினால் இந்த மனித பலவீனம் மறைந்தது.

உள் நாட்டு, வெளி நாட்டுத் தேசிய விடுதலைப் போராட்டத் தலைவர்களின் பெரு மதிப்பைப் பெற்ற வ.வெ.சு. ஐயரின் வரலாறு ஒரு வீர காவியம்.

இந்த வீர காவியத்தின் தொடக்கம், இலண்டன்'இந்தியா ஹவுஸ்' எனப்பட்ட இந்தியா விடுதியில் நிகழ்ந்தது.

அக்டோபர் 10, 1907 - ல் இலண்டன் இந்தியா விடுதியில் இலண்டன் வந்த அதேநாளில் சேர்ந்தார் வ. வே. சு. ஐயர். வ. வே. சு. ஐயரை வரவேற்றவர் வீர சாவர்க்கார். "ரங்கூனின் பிளீடர் (Pleader) தொழில்புரிந்த தாம் இலண்டனில் 'பாரிஸ்டர்' (Barrister) ஆகமுழுத்தகுதிபெற வந்துள்ளதாக வ. வே. சு. ஐயர், வீர சாவர்க்காரிடம் முதல் சந்திப்பில் கூறியதாக வீர சாவர்க்கார் குறிப்பிட்டிருக்கிறார்.

எதிர்பார்க்கப்பட்டவர், கிடைத்தவர்போன்று, வீர சாவர்க்காருக்கு யாத்தத் தோழராகக் கிடைத்தார், வ. வே. சு. ஐயர்.

இந்தியா விடுதியில் இயங்கிய வீர சாவர்க்காரின் 'அபிநவ பாரத் சபையின் துணைத்தலைவரானார், வ. வே. சு. ஐயர்.

இந்தியா விடுதியில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் கூட்டங்களில் வ. வே சு. ஐயரின் பேச்சு, தத்துவ விளக்கமாக அமைந்திருக்கும்.

## தனிநபர் பயங்கரவாதம் - வ. வே. சு. ஐயர் கருத்து

ஏப்ரல் 10, 1910 - ல் இந்தியா விடுதியில் நடைபெற்றக் கூட்டத்தில் வ. வே. சு. ஐயர் தனிநபர் பயங்கரவாதத்தைப்பற்றிய தமது விளக்கத்தை பின்வருமாறு அளித்தார்.

"தனிநபர் பயங்கரவாதம் (Terrorism or individual assasination) புரட்சியின் முதல் கட்டமே ஆகும். தற்பொழுதைய சூழ்நிலையில் தனிநபர் பயங்கரவாதம் குறைவற்றஎழுச்சியுடன் தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். ஆனால், அதே சமயத்தில் ஆங்கிலேயர்களுடன் நேருக்கு நேரான போரில் ஈடுபட இறுதியான புரட்சியை குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். அமெரிக்கா அல்லது பிரான்சிற்கு நம்மக்களை அனுப்ப வேண்டும். அங்கு அவர்கள் நவீன போர்க்கருவிகளை தயாரிப்பதிலும், ஆள்வதிலும் பயிற்சி பெற வேண்டும். இராணுவப் பயிற்சியின் முக்கிய அம்சங்களைக் கற்க வேண்டும். இந்த நிலைமையில் கூட்டு முயற்சியான போர், தனிநபர் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்தும்."

தனி நபர் பயங்கர வாதத்திற்கும் புரட்சிக்கும் உள்ள இடைவெளியை வ வே. சு. ஐயர் விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. விடுதலைப் போருக்கான மக்கள் புரட்சிக்குரிய காலம் கனியும் வரையில் தனிநபர் பயங்கர வாதத்தை ஏற்பதில் தவறில்லை என்று வ.வே.சு. ஐயர் கூறுகிறார் 1917-ல் சோவியத் ரஷ்யாவில் தோன்றிய யுகப் புரட்சியான மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்குப் பிறகு, தனி நபர் பயங்கர வாத தத்துவத்தின் செல்வாக்கு தேய்வுற்றது. எனினும், ஆயுதமேந்த தடைசெய்யப்பட்ட இந்தியர்களிடையே மக்கள் எழுச்சியுடன் இணைந்த ஆயுதப் போராட்டத்தை தோற்றுவிப்பதைவிட பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எச்சரிப்பதற்கும், இந்தியப் பொதுமக்களின் உறக்கத்தை கலைப்பதற்கும் தனிநபர் பயங்கரவாதத்தை பயன் படுத்தினர், பயங்கரவாத இயக்கத்தினர்.

இந்த அடிப்படையில் இந்தியா விடுதியில் சாவர்க்கார் வ. வெ. சு. ஐயரால் உருவாக்கப் பட்டவர்தான் மதன்லால் திங்ரா.

மதன்லால் திங்ரா கர்சன் வைலி என்பவனை சுட்டு வீழ்த்திய வீர நிகழ்ச்சியும் இதன் காரணமாக தூக்குக் கயிற்றை முத்தமிட்டு மன நிறைவுடன் தேச பணி புரிந்ததாக தூக்கில் தொங்கிய மதன் லால் திங்ராவின் ஒப்பற்ற தியாகமும் இந்தியா விடுதியை, புரட்சிக்களங்களுள் ஒன்றாக எடுத்துக் காட்டியது.

மதன் லால் திங்ரா 1909 ஜூலை 1-ல் கர்சன் வைலியைக் கொன்ற பிறகு ஜூலை 4-ல் இந்தியா விடுதியில் திங்ராவின் வீரச்செயலைப் பாராட்டிக் கூட்டம் நடந்தது. வ. வே. சு. ஐயர் தமது பாராட்டுரையில் குறிப்பிட்டதாவது :

*மகத்தான செயல் புரிந்த திங்ராவை உருவாக்கிய உண்மையான குரு, சாவர்க்கார் சாவர்க்கார் ஒரு கிருஷ்ணாவதாரத்திற்கு ஒப்பானவர்."*

## பாரதியார் – வ. வே. சு. ஐயர் கருத்து மோதல்

மதன்லால் திங்ராவின் தனிநபர் பயங்கரவாதத்தை ஆதரித்து வ. வே. சு. ஐயரும், எதிர்த்து பாரதியாரும் இந்தியாவில் எழுத நேரிட்டது.

புதுச்சேரியிலிருந்து வெளிவந்த 'இந்தியா' இதழில் வ. வே. சு. ஐயர் லண்டனில் இருந்து எழுதிய 'லண்டன் கடிதம்' மற்றும் பல கட்டுரைகள் வெளிவந்து கொண்டிருந்தன.

பாரதியார், தனிநபர் பயங்கரவாதக் கொள்கை, சமூக சீர்திருத்தக் கொள்கை ஆகிய இரண்டிலும் தமது குருநாதரான திலகரோடு ஒத்த கருத்து கொள்ளவில்லை.

அரசியல் கொலைபுரிந்த குதிராம்போஸை, திலகர் ஆதரித்தார் ; பாரதியார் கண்டித்தார்.

மதன்லால்திங்ரா செய்த அரசியல் கொலையை வ. வே. சு. ஐயர் புகழ்ந்துரைக்க, பாரதியார் இகழ்ந்துரைத்தார்.

திங்ராவின் அரசியல்கொலை, பைத்தியக்காரத்தனமானது என்பது பாரதியார் கருத்து. 'இந்தியா' வில் கண்டித்து தலையங்கம் எழுதினார். தமது கருத்திற்கு மாறுபட்ட வகையில் வ. வே. சு. ஐயர் எழுதிய லண்டன் கடிதத்தையும் 'இந்தியா' வில் வெளியிட்டார்.

திங்ராவின் செயலை பைத்தியக்காரத்தனம் எனக்கூறினால், கம்ஸனைக் கொன்ற கிருஷ்ணன் செயல், அப்ஸல்கானைக் கொன்ற சிவாஜியின் செயல் யாவும் பைத்தியக்காரத்தனமாகும் என்று வ. வே. சு. ஐயர் லண்டன் கடிதத்தில் குறிப்பிட்டார்.



தன் உடலை இந்து அல்லாதார் தீண்டக்கூடாது, தன் உடல் எரிக்கப்பட வேண்டும், தன் உடமைகள் விற்கப்பட்டு அதில் கிடைக்கும் தொகை, தேசிய நிதியில் சேர்க்கப்பட வேண்டும் எனும் மூன்று கோரிக்கைகளை திங்ரா வெளியிட்டார். திங்ராவின் உடலை ஒப்படைக்குமாறு வ. வே. சு. ஐயர் முதலானோர் கேட்டுக்கொண்டதை இந்திய ராஜாங்கச் செயலர் ஏற்கவில்லை. இந்தச் சமயத்தில் கிளாஸ்கோமில், தீப்பற்றியது. வ. வே. சு. ஐயர் இந்நிகழ்ச்சியை குறிப்பிடுகையில் திங்ராவின் புனிதஉடலைத் தீண்ட மறுக்கப்பட்ட அக்னிக்கடவுளே கோபங்கொண்டு கிளாஸ்கோமில்லை எரித்ததாக எழுதினார்.

வ. வே. சு. ஐயரின் மேற்படிக்கருத்தை பாரதியார் மறுத்து 'இந்தியா' இதழில் தலையங்கம் எழுதினார். திங்ராவின் கோரிக்கையை ஏற்க மறுத்த பிரிட்டிஷ் நிருவாகத்தை கண்டித்தார். அக்னிக் கடவுள் பழிவாங்கியதாக ஏன் கருதவேண்டும் ? என்னும் தலையங்கத்தில் குறிப்பிட்டார்.

'இந்தியா' இதழின் உரிமையாளர், வ. வெ. சு. ஐயர் கருத்தை ஆதரித்ததால், பாரதியாருக்கு தருமசங்கடமாயிற்று. கருத்து வேற்றுமை காரணமாக ஆசிரியர் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார் பாரதியார்.

## பத்திரிகை சுதந்திரம் பற்றி வ. வெ. சு. ஐயர்

இந்தியன் சோஷாலஜிஸ்ட் செய்து வந்த பிரசாரத்தின் விளைவே கர்சன்வைலி கொலையுண்டது எனக் கருதிஅடக்குமுறையில் இறங்கியது இலண்டன் போலீஸ் நிருவாகம். ஜி. எல்ட்ரெட் என்பவர் அச்சிட்டு வந்ததால் அவரை கைது செய்தது. வ. வெ. சு. ஐயர் இந்த அடக்குமுறையைக் கண்டித்து இலண்டன் கடிதத்தில் எழுதினார். 'பத்திரிகை சுதந்திரம்' எனும் தலைப்பில் 18—9—1909-ம் 'இந்தியா' இதழில் வெளிவந்ததின் ஒரு பகுதி வருமாறு :

*பத்திரிகா சுதந்திரமானது ராஜாங்கம் சரிவர நடைபெறுவதற்கு இன்றியமையாத தாம் பாத்தியமாகிறது............ராஜாங்கம் செய்கிற அல்லது ஒளிக்கிற விஷயங்களைப்பற்றி விசாரித்துப் பேசவும் எழுதவும் ஜனங்களுக்குப் பூர்ணமான சுதந்திரமில்லாத விஷயத்தில் நாளுக்குநாள் ராஜாங்கம் கொடுங்கோல் வழிகளில் அதிகமாகப் பிரவர்த்திக்கும்.........*

இதனை நினைத்துத்தான் இங்கிலாந்திலும் இதர ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளிலும் சில நூற்றாண்டுகளாக இந்த சுதந்திரத்தை மிகவும் தைரியத்துடன் ஜனங்கள் பாதுகாத்து வருகிறார்கள் இந்த சுதந்திரம் நம்து பாரத பூமியில் புதிதானது என்று ஒரு பரிசமாகப் பார்க்கக் கூடிய ஆங்கிலேயர் மாத்திரமல்ல அநேக ஹிந்துக்கள் கூட நினைக்கவும், பேசவும் செய்கிறார்கள். இதைப்பற்றி விரித்து எழுதுவதற்கு இது இடமில்லாததால் ஒரு மேற்கோள் மாத்திரம் இவ்விடம் காட்டுகிறேன். இறைமாட்சி அதிகாரத்தின் ஒன்பதாவது குறளில் திருவள்ளுவ நாயனார்

செவி தைப்பச் சொற்பொருக்கும் பண்புடைவேந்தன்

கவிகைக் கீழ்த் தங்குமுலகு

என்றருளிச் செய்ததன் அருத்தமென்ன?

உலகத்தை நெடுங்காலம் ஆளவேண்டும் என்கிற எண்ணத்தையுடைய அரசன் தனக்குக் கசப்பான வார்த்தைகளைச் சொல்பவர்களை அப்படிச் சொல்வதற்காகத் தண்டியாமல் பொறுமையுடன் அவர்கள் வார்த்தைகளைக் கருத வேண்டுமென்பதே.

அப்படி அவன் தண்டிக்க முயல்வனேல் உலகு அவனிடம் தங்காது.

இது பத்திரிகா சுதந்திரமாகா தேல்பத்திரிகா சுதந்திரமென்பது என்ன?

அக்காலத்தில் பத்திரிகைகள் இல்லை என்பது வாஸ்தவம். ஆனால் பத்திரிகைகள் கேவலம் கருவிகளே ஒழிய காரணமல்ல அக்காலத்தில் அச்சுநடை இல்லாமையால் செவிகைக்கும் சொல் வாயினுல் பேசப்படும் தன்மையாயிற்று.

தற்காலத்தில் அதி வேகத்தில் எண்ணற்ற நகல்கள் அச்சிட்டு பரப்பக்கூடிய வசதிகள் ஏற்பட்டமையால் அத்தகைய சொல் பத்திரிகையில் அதிகமாகப் பிரசுரிக்கக்கூடியதாயிற்று. ஆனுல் இரண்டிலும் ஒன்றே இவ்வளவு சர்வோன்னதமான சுதந்திரத்தை ஜனங்களுக்குக் காப்பாற்றி வைப்பதற்காக சரீர தண்டனைகளை கிஞ்சித்தேனும் கருதாது போராடும் மிஸ்டர் ஜி. ஆல்ட்ரைட்டை உலகம் புகழும்

பத்திரிகை சுதந்திரத்திற்கு. திருக்குறளை எடுத்தாண்டு "இது பத்திரிகா சுதத்திரமாகாதேல், பத்திரிகா சுதத்திரமென்பது என்ன?" என்று கேட்குமிடத்து வ. வே. சு. ஐயரின் இலக்கியத்தை, அரசியல் விளக்கத்திற்கு பொருத்தமாகப் பயன்படுத்தும் வித்தகம் தமிழ் நெஞ்சங்களைக் கவர்கின்றதல்லவா?

மதன்லால் திங்ரா, கர்சன்வைலியைக் கொன்றபிறகு சில நாட்கள்வரை 'இந்தியா ஹவுஸ்' மூடப்பட்டது. சாவர்க்கார், வ. வே. சு. ஐயர், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் ஆகியோர் தற்காலிகமாக வெளியே நண்பர்கள் இல்லத்தில் தங்கினர்.

கர்சன் வைலியைச் சுட்டுக்கொன்ற மதன்லால் திங்ராவைக் கண்டித்து லண்டனில் சில இந்தியர்கள், ஒரு கூட்டத்தை நடத்தினர். சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் ஆகாகான் என்னும் முஸ்லீம் தலைவர், திங்ராவை இக் கூட்டம் ஒருமனதாகக் கண்டிக்கிறது என்று கூற, "இல்லை, ஒரு மனதாக இல்லை", என்று எதிர்ப்புக் குரல் கொடுத்தார் சாவர்க்கார். கூட்டத்தில் ஒருவர் சாவர்க்காரைத் தாக்கினுர். தாக்கியவரை எம். பி. டி. ஆச்சார்யா கையில் இருந்த குறுந்தடியால் திருப்பித் தாக்கினார். உடனிருந்த வ. வே. சு. ஐயர் சாவர்க்காரைத் தாக்கியவனைச் சுட கைத்துப்பாக்கியை எடுத்தார் உடனே சாவர்க்கார் வ. வே. சு. ஐயரை அமைதிப்படுத்தினார்.

1908-ல் இந்தியா விடுதியில் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை சிறப்பு விருந்தினராக அழைத்துப் பேசவைத்தார் வ. வே. சு. ஐயர். சாவர்க்காரும், வ. வே. சு. ஐயரும் வன்முறைப் புரட்சியில் ஆழ்ந்த பற்று கொண்டவர்கள். காந்தியடிகளோ, தென்னுப்பிரிக்காவில் அஹிம்சையும், சத்யாக்கிரகமும் இணைந்த ஒரு புதிய அறப் போரை நடத்திவந்தவர், இயற்கையிலேயே சாவர்க்காரும், வ. வே. சு. ஐயரும் காந்தியடிகளின் புதிய அறப்போரைப் பற்றி விவாதித்தனர். "இவ்விருவரும் கேட்ட கேள்விகளும் இவர்களுக்கு விடையளித்த காந்திஜியின் தத்துவமுமே 'ஹிந்து ஸ்வராஜ்' என்ற புத்தகத்துக்கு ஆதாரம்" என்று டாக்டர் டி. எஸ்.எஸ். ராஜன் குறிப்பிட்டுஉள்ளார்.

காந்தியடிகளை இந்தியாவிடுதிக்கு வ. வே. சு. ஐயர் எக்காரணம் பற்றி அழைத்தார் என்பது பற்றி 'வ. வே. சு. ஐயர்' என்ற நூலில் டாக்டர்டி. எஸ்.எஸ். ராஜன்பின்வருமாறு எழுதியுள்ளார்

கூட்டம் எதற்காக ? என்று காந்தி கேட்டவுடன் ஐயர் "இந்த தேசத்தில் சுமார் எழுநூறு பேருக்குமேல். நம் நாட்டினர் பல வேலைகளை முன்னிட்டு வந்திருக்கிருர்கள். அதில் பெரும்பாலோர் செல்வந்தர்களான மாணுக்கர்கள். அவர்கள் எல்லோரையும் ஒரு முறையாகிலும் பொது



விஷயத்தில் ஈடுபடும்படி செய்ய வேண்டியது அவசியம் கொஞ்சம் தேசபக்தி புகட்டவும், நம் நாட்டினர் என்ற உணர்ச்சி உண்டாக்கவும் வேண்டும். அதற்காகத் தீபாவளிப் பண்டிகை கொண்டாட வேண்டும் தாங்கள் அந்தக்கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வேண்டும் என்று பதில் சொன்னார்.

இந்தியா விடுதியில் காந்தியடிகள் மிக்க ஊக்கமுடன் விருந்தில் கலந்து கொண்டார் தமக்கும் விநாயக ஸாவர்க்காருக்கும் தேசிய விடுதலை முறையில மாறுதலான அபிப்ராயம் இருந்த போதிலும் இம் மாதிரியான சம்பவங்களில் இந்தியர்கள் எல்லோரும் சேர்ந்து தாம் ஒரு நாட்டினர் என்ற உணர்ச்சியை வளர்க்க வேண்டும்" என காந்தியடிகள் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

இந்தியா விடுதியில் 1908-ல் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை முதன்முறையாக சந்தித்தது வ. வெ. ச. ஐயரின் வாழ்க்கையில் ஒரு முக்கிய சம்பவமாகும். பிற்காலத்தில் காந்தியடிகளின் தலைமையையும் வ. வெ. ச. ஐயர் ஏற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

1910 மார்ச் 13-ல் இலண்டனில் வீர சாவர்க்கார் கைது செய்யப்பட்டார். சாவர்க்காரை விடுவிக்க வழக்காடத்திட்டமிட்டார் வ. வே. சு. ஐயர். இதன்தொடர்பாக இந்தியா விடுதியை தோற்றுவித்த ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவிற்கு-பாரிஸில் இருந்த-வ. வே. சு. ஐயர் மார்ச் 15, 1910-ல் எழுதிய கடிதம் உணர்ச்சிமயமானது. ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா, வ. வே. சு. ஐயருக்கு காசோலையுடன் பதில் எழுதினுர். ஆனுல், வீர சாவர்க்காரை அருந்த முன்னேற்பாட்டுடன் சிறையில் தள்ளியது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். சாவர்க்காரின் சிறைவாசம், வ. வே. சு. ஐயரின் கோலத்தையே மாற்றிவிட்டது. தாடி மார்பில் தவழ ரிஷியாகத் தோற்றமளிக்கத் தொடங்கிவிட்டார். வ. வே. சு. ஐயர். இக்கோலத்தைப் பற்றி சாவர்க்கார் விரிவாக வ. வே. சு. ஐயரின் இரங்கல் கட்டுரையில் வருந்தியுள்ளார். வ. வே. சு. ஐயருக்கு எழுதிய கடிதங்களில் "அன்பிற்குரிய ரிஷி" என்று குறிப்பிடத் தொடங்கினார் வீரசாவர்க்கார்.

பாரிஸ்டராகப் பயிற்சி பெற்று பதிவு செய்து கொள்ள இலண்டன் வந்த வ. வெ சு. ஐயர் புரட்சி வீரர் என்ற பெயரோடு 1910ல் பாரிஸ்டராகப் பதிவு செய்து கொண்டார். வீர சாவர்க்காரின் நீண்ட சிறைவாச காலத்தில் மேடம் காமா வ. வெ. ச. ஐயருக்கு வேண்டிய பொழுதெல்லாம் உதவினுர். மாதம் தோறும் ஐம்பது பிராங்குகளை [பிரெஞ்ச் நாணயம்] வ. வெ. சு ஐயருக்கு மேடம் காமா அனுப்பி வந்தார். வ. வெ. சு. ஐயரின் பாண்டிச்சேரி வாழ்க்கையிலும் இந்தப் பணஉதவி தொடர்ந்தது. இலண்டன் பாரிஸ் வாழ்க்கையில் புரட்சி மணம்வீச பாண்டிச்சேரியில் ஓர் இடை நிலை மாற்றம் தோன்ற சென்னை சேர்மாதேவி வாழ்க்கையில் காந்தியமும் தமிழ்த்தொண்டும் சேர்ந்து புதிய மணம்வீச அமைந்தது அவர் இறுதிகாலவாழ்க்கை.

## எம். பி. டி. ஆச்சார்யா : (1887 – 1954)

இந்தியா ஹவுஸில் வ. வே. சு. ஐயர் உருவாக்கிய ஒரு புரட்சி வீரர் எம். பி. டி. ஆச்சார்யா ஆவார்.

ஊர், பெயர் தெரியாத எவ்வளவோ தியாகிகள் இந்தியாவிற்கு விடுதலையை தேடியளித்துள்ளார்கள். வரலாற்று ஆய்வில் சிலர் தியாகங்கள் கண்டறியப்படுகின்றன.

உண்மையான வரலாற்று உணர்வில் ஆர்வம் காட்டாத காரணத்தால் தமிழர்கள் பலரின் தியாக வரலாறுகள் வெளிச்சத்திற்கு வரவில்லை.

தமிழகத்தில் ஒரு குடும்பமே தேச விடுதலைக்காக உழைத்துள்ளது. அக்குடும்பத்தை மண்டையம் குடும்பம் என்று குறிப்பிடலாம். மண்டியா [கர்நாடகா மாநிலம்] என்னும் ஊரிலிருந்து குடிபெயர்ந்து சென்னையில் வாழத்தொடங்கிய தமிழர் குடும்பம்தான் மண்டையம் குடும்பம். மண்டையம் குடும்பத்தினர் நால்வர் தேசிய இயக்கத்தில் தமிழகத்தின் பெருமையை உயர்தினர். மண்டையம் அழகிய சிங்கப் பெருமாள், மண்டையம் எஸ். சீனுவாச்சார்யா, மண்டையம் எஸ். எம். திருமாலாச்சார்யா, மண்டையம் எம். பி. திருமாலாச்சார்யா ஆகியோர்களே அந்த நால்வர்.

இந்த நால்வரும் மகாகவி சுப்ரண்ய பாரதியாருக்கு உற்றத் துணைவர்களாக உதவியுள்ளனர் குறிப்பாக 'இந்தியா' பத்திரிக்கையைத் தோற்றுவித்து பாரதியாரை அதன் உண்மை ஆசிரியராகப் இருக்கச்செய்தனர் மண்டையம் குடும்பத்தினர் 15.5.1909 "இந்தியா" இதழில் மண்டையம் அழகிய சிங்கப் பெருமாள் மறைவு குறித்து பாரதியார் எழுதியுள்ள "இந்தியா பத்திரிகை ஆரம்பம் செய்வதற்கு மூல காரணங்களாய் இருந்தவர்களிலே பெருமாளும் ஒருவர் என்று குறிப்பிட்டுள்ளார். எம். பி. டி. ஆச்சார்யா 'இந்தியா' பத்திரிக்கையின் அச்சிடுபவராகவும், வெளியிடுபவராகவும் இருந்தார். மண்டையம் பிரதிவாதி பயங்கரம் திருமாலாச்சார்யா என்பது முழுப் பெயராகும். சிறந்த ஆய்வாளர் திரு ரா. க. பத்மநாபன் எழுதியுள்ள 'வி. வி. எஸ். ஐயர்' என்னும் ஆங்கில நூலில் எம். பி. டி. ஆச்சார்யா லண்டன் சென்ற காரணம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

பாண்டிச்சேரியில் இந்தியா பத்திரிகை நன்கு காலூன்றிய பிறகு எஸ் எம் திருமாலாச்சார்யாவும், எஸ். சீனுவாசாச்சார்யாவும் பத்திரிகையாசிரியர் பாரதியாருடன் ஐரோப்பாவுக்கு சென்று வரத் திட்டமிட்டனர். பத்திரிகையின் முழுப் பொறுப்பையும் எம். பி. டி. ஆச்சார்யாவிடம் விடுவது என்றும் முடிவு செய்தனர். எம். பி. டி. ஆச்சார்யாவிற்கு தம்மை ஐரோப்பிய பயணத்தில் சேர்த்துக் கொள்ளவில்லை என்று வருத்தம் ஏற்பட்டது. தம்மை புறக்கணித்தவர்களை முந்திக்கொண்டு லண்டன் செல்ல திட்டமிட்டார் எம். பி. டி. ஆச்சார்யா. இந்தியா பத்திரிகையில் தமது பொறுப்பை விலக்கிக் கொண்டார். உடனே லண்டன் பயணமானார்.

மிக இளைஞரான எம். பி. டி. ஆச்சார்யா நவம்பர் 1908ல் லண்டன் பயணமானார்.

லண்டன் சேர்ந்த எம். பி. டி. ஆச்சார்யாவைபற்றி டி. எஸ். எஸ். ராஜன் வ. வெ. சு. ஐயர் என்னும் தமிழ் நூலில் கூறியுள்ளதாவது:-

ஒரு நாள் சாயங்காலம் எதிர்பாராதபடி ஓர் இளைஞர் ஒரு கைப்பெட்டியைத் தூக்கிக்கொண்டு எங்களிடம் வந்தார். அவருக்கு சுமார் இருபது வயது இருக்கலாம்; மெலிந்த உடல்; முகத்தில் சுறுசுறுப்பும் புத்திக் கூர்மையும் ததும்பிக் கொண்டிருந்தன. இந்தியாவிலிருந்து கப்பலில் மூன்றும் வகுப்பில் பிரயாணம் செய்த களைப்பினால் உடல் மெலிந்து போனதாகவும் தம் பெயர் திருமாலாச்சாரி என்றும் தாம் திருவல்லிக்கேணி என்றும் தெரிவித்தார். சாப்பாட்டுக்கு எதாகிலும் வழி தேட வேண்டிய நிலையில் இருந்தார், சென்னையில் அந்நாளில் பிரசுரமாகிவந்த 'இந்தியா' என்னும் வாரப் பத்திரிக்கை மூலம் லண்டனில் ஐயருடைய கோஷ்டியார் தேச விடுதலைக்காகப் பாடுபட்டு வருவதை தெரிந்து தம்மால் இயன்ற பணியை அவர்களுடன் சேர்ந்து செய்ய, எண்ணி வந்ததாகவும் கூறினார். இவரைக் கொண்டு என்ன செய்வது?, என்பது எங்கள் கவலை.

பாரிஸிலிருந்து தனவந்தரான ஷியாம்ஜி கிருஷ்ணவர்மா தேச விடுதலைக்கு உழைப்பவர்க்கு ஒரு பெரிய நிதி சேமிப்பு வைத்திருப்பதாக உலாவி வந்த வதந்தியை நம்பியே திருமாலாச்சார்யா வந்துவிட்டார். தமக்கு எந்த வேலை கொடுத்த போதிலும் செய்ய உறுதிகொண்டிருப்பதாகவும் எப்படியாகிலும் தம்மை ஆதரிக்க வேண்டுமென்றும் சொல்லியதன் பேரில் எங்களுக்கு சமையல் செய்வது கடைகளுக்கு சென்று தேவையானவைகளை வாங்கி வருவது ஒழிந்த நேரத்தில் எங்கள் சங்கத்தில் அங்கத்தினர்களுக்கு ஏற்படுத்தியுள்ள பல தொண்டுகளைச் செய்வது என்று முடிவு செய்தோம் அவரால் ஏற்படும் செலவை அங்குள்ள மற்ற ஏழு பேர்களும் பகிர்ந்து கொடுக்கவும் ஒப்புக்கொண்டோம். அன்றியும் புதிதாக கீர்த்திகரைபோலவே வந்தபடியால் மனதில் சற்று அவரைப் பற்றிய சந்தேகம் தீரவேண்டியிருந்தது. ஒரு சமயம் அதிகாரிகளுக்காக உளவு வேலை செய்ய வந்தவரோ என்கிற அச்சம் ஒழிவதற்காக எங்களில் ஒருவரை ரகசியமாக அவரை கவனிக்கும்படி ஏற்பாடும் நடந்தது.



இரண்டு மாதம் அவரைக் கவனித்து வந்ததில் நல்ல சீலமுள்ள தேசபக்தர் என்பன அறிந்துகொண்டோம். முகம் கோணாமல் இட்ட வேலையை ஆர்வத்துடனும். திறமையுடனு செய்வதில் அவருக்குள்ள ஆற்றல் நன்கு புலனாயிற்று. ஆனால் எவ்வளவு காலம் இவ காப்பாற்றுவது இதற்கு முடிவு என்ன என்பதை யோசனை செய்து அவருடைய துண்ணறிவுக்கு தேசிய உணர்ச்சிக்கும் உரிய வேலை ஒன்றை ஐயர் கண்டுபிடித்தார்.

லண்டன் போலீஸ் அதிகாரிகளுக்கு எங்கள் வேலைகளைப்பற்றி தெரிந்துகொள்வதி எவ்வளவு கவலை இருக்கிறது என்பதற்கு கீர்த்திகர் பொருட்டு அவர்கள் செலவழித்தத் தொ ஓர் அத்தாட்சி. கீர்த்திகர் செய்துவரும் வேலையும் அவர் கொடுக்கும் வார ரிப்போர்ட்டும் எவ்வள மட்டில் நம்பக்கூடியன என்றறிய அவர்கள் ஆவல் கொள்ளக்கூடியவர்கள் ஆகையால் எங்க விடுதியில் தங்கியுள்ள மற்றொருவர் இந்த வேலையைச் செய்ய முன்வந்தால் அதிகாரிகள் அவர்க் தகுந்த ஊதியம் அளிக்கக் கூடும் என்று ஊகித்து திருமாலாச்சார்யாரை 'ஸ்காட்லண்டு யார் பெரிய துரையைப்போய் பார்க்கும்படி ஐயர் தூண்டியதின் பேரில் அவரும் சென்று துரையை பார்த்துவிட்டு வந்தார். போலீஸ் அதிகாரிகளுக்கு இந்தியா விடுதியில் நடக்கும் எல்லாவற்றையு தாம் தெரிவிப்பதாகவும் ஆறுமாத காலத்திற்கு தம் வேலைத் திறமையைக்கண்டு பிறகு இரட்டிப் சம்பளம் கொடுக்கலாம் எனவும் முதலில் மாதம் ஒன்றுக்கு ஐந்துபவுன் கொடுத்தால் போதுமெனவு முடிவு செய்துகொண்டு உளவாளி உத்தியோகத்தில் அமர்ந்தார். வாரம் ஒருமுறை குறிப்பிட் இடத்தில் பெரிய துரையைத் தனித்துக் கண்டு பேசி விவரங்கள் சொல்வதும் அச்சிட்ட துண் பிரசுரங்கள் பத்திரங்கள் முதலியவற்றில் கிடைத்தவரையில் அவரிடம் கொடுப்பதுவுமான வேலைகளை செய்து வந்தார். கீர்த்திகர் அனுப்பும் ரிப்போர்ட்டை தணிக்கை செய்வது திருமாலாச்சாரிக்கு தே யும் உசிதமும் ஆன சங்கதிகளையோ பிரசுரங்களையோ கொடுத்தனுப்புவது ஆகியவை சம்மந்த பட்ட வேலைகள் யாவற்றையும் ஐயரே செய்து வந்தார். திருமாலாச்சாரியார்க்குக் கிடைத்த ஊ யத்தில் அவருடைய சாப்பாட்டுச் செலவுபோக பாக்கியை சங்கத்திற்கு கொடுத்துவிட்டார் போலீ அதிகாரிகளால் நாங்கள் எவ்வளவு மட்டில் தெரிவிக்கின்றோமோ அவ்வளவு மட்டில்தான் தெரிந் கொள்ள முடிந்தது. அவர்களுடைய உளவாளிகள் எங்களுக்குத் தொண்டர்களானார்கள். இந் விநோத நாடகம் சில மாதங்கள் நடந்தது.

எ. பி. டி. ஆச்சாரியாவைப் பற்றி சுருக்கமான குறிப்புகளை Political froulrs in India 1907 1917 என்னும் நூலில் காண்கிறோம். இதன் ஆசிரியர் ஜேம்ஸ் கேம்பெல் கெர் (James Campbell Ke என்பவர் பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையின் உயர்மட்ட அதிகாரியாவார். 1907 முதல் 1917 வரை இந்திய விடுதலை இயக்கத்தின் புரட்சிகர நடவடிக்கைகளைப் பற்றிய ரகசிய அறிக்கையை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்காக தயாரித்தவர். இந்த நூலில் எம். பி. டி. ஆச்சாரியாவை பற்றி கூற பட்டுள்ளதாவது.

எம். பி. டி. ஆச்சார்யா சென்னையைச் சார்ந்த பிராம்மணர். 1887-ல் பிறந்தார். சென்னை விட்டு நீங்குவதற்கு முன்பு ராஜத்துரோக வட்டாரங்களில் இவர் ஒரு முக்கிய புள்ளி. பிரெஞ் பிரதேசமான பாண்டிச்சேரியிலிருந்து வெளிவந்து பிரிட்டிஷ் இந்தியாவில் புரட்சியைத் தூண்டி இகழார்ந்த பத்திரிக்கையான (notorious) இந்தியாவின் அச்சிடுபவர் வெளியிடுபவர் இந்தியாவி

ிருந்து 1908-ல் வெளியேறினர். லண்டன் சென்று இந்தியா ஹவுசில் தங்கினர். டேன்ஜியருக்கு ரு முறை சென்று வந்த பிறகு 1909-ல் பாரிஸ் சென்றார். 1910-ல் பெர்லினுக்கும் 1911ல்-னிச்சிற்கும் சென்றார். மூனிச்சிலிருந்து கான்ஸ்டான்டிநோபிளுக்கு அஜீத்சிங்கின் தூதுவராக 912-ல்நியுயார்க் சென்றார். எங்கு சென்றாலும் ஐரோப்பாவிலுருந்து இந்தியப் புரட்சியாளர்களுடன் தொடர்புக் கொண்டிருந்தார் நியுயார்க்கில் இரண்டாண்டுகளைக் கழித்த பிறகு பெர்க்லி, லிபோர்னியாவில் கத்தர் கட்சியோடு ஒத்துழைத்தார். 1915-ல் பெர்லின் சென்று அங்கிருந்த இந்தியன் நேஷனல் பார்ட்டியில் சேர்ந்தார். இத்துடன் எம். பி. டி. ஆச்சார்யாவின் புரட்சி வாழ்க்கை முடிந்துவிடவில்லை சோவியத் ரஷ்யா சென்றார். புரட்சித் தலைவர் லெனினை சந்தித்தார். இத்தியக் கம்யூனிஸ்டு கட்சியை அமைத்ததில் பங்கு கொண்டார். எம். என். ராய்யோடு ர்வாக விஷய சம்மந்தமாக மோதினார். முஹாஹிர்கள் எனும் இஸ்லாமியப் புரட்சி வீரர்களுக்கு ராணுவப் பயிற்சியளித்த பொறுப்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இறுதியில் இந்தியாவில் ந்து காலமானார்.

இனி இவரது புரட்சி வாழ்க்கையை விரிவாக ஆய்வு செய்வோம்.

லண்டனில் வ. வே. சு. ஐயரின் உள்ளம் கவர்ந்த இளம் புரட்சி வீரராக உறுவாகிவந்த எம். பி. டி. ஆச்சார்யா வீரசாவர்க்காரை வியந்து வணங்கியத் தொண்டராகவும் விளங்கினார். 1938 மே மராட்டா இதழில் எம். பி. டி. ஆச்சார்யா எழுதிய கட்டுரையில் வீரசாவர்க்காரைப் பற்றி பின் வருமாறு போற்றியுள்ளார் :

அவரிடம் உள்ள காந்த சக்தி கோழையையும் வ. வே, சு. ஐயராகவோ அல்தை ஹர் தயாளாகவோ மாற்றிவிடும். அவருடன் ஒத்துப்போனாலும் போகாவிட்டாலும் அவரிடம் உள்ள நேர்மை மீது அனைவரும் மதிப்பு வைத்தனர்.

எம். பி. டி. ஆச்சார்யாவின் இந்த நிலையை ஒரு நிகழ்ச்சி மூலம் அறிகிறோம்.

மிதவாத தேசியத் தலைவர்கள் திங்ரா 1909 ஜூலை 1ல் கர்சன்வைலியை சுட்ட அடுத்த இரண்டாம் நாளிலேயே ஜூலை 3ல் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் திங்கராவைக் கண்டித்து ஒரு கூட்டம் நடத்தினார்கள். தங்கள் பிரிட்டிஷ் அரசு விசுவாசத்திற்கு ஒரு கூட்டம் போதாது என்று மீண்டும் ஜூலை 5ல் ஆகாகான் தலைமையில் ஒரு கூட்டத்தை நடத்தினர்கள். சுரேந்திர நாத் பானர்ஜி, விபின் சந்திரபால், ஜி. எஸ். காபர்டே முதலானோர் பேசினர். கூட்டத்தின் தலைவர் ஆகாகான் திங்ராவைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை முன் மொழிந்து தீர்மானம் ஒருமனதாக நிறைவேறுகின்றது என அறிவிக்க ஓர் எதிர்ப்புக் குரல் கூட்டம் நடைபெற்ற காக்ஸ்டன் ஹாலில் மோதி எதிரொலித்தது. 'இல்லை ஒருமனதாக இல்லை' என்ற குரல் வந்த இடத்தை நோக்கி இல்லையெனக் கூறுவது யார் என்ற எதிர் வினை ஆத்திரமுடன் வீசப்பட்டபோதும் நான்தான் வீரசாவர்க்கார் எனும் முழக்கம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. வீர சாவர்காருடன் வ. வே. சு ஐயரும், எம். பி. டி ஆச்சார்யாவும் பாதுகாப்பாக நின்றிருந்தனர். எட்வர்ட் பால்மன் என்பவன் எதிர்பாராத விதமாக சாவர்காரின் முகத்தைத் தாக்கிவிட்டான் அணிந்திருந்த மூக்குக் கண்ணாடி தூள், தூளாகியது. அருகிலிருந்த எம் பி. டி. ஆச்சார்யா ஆவேசமுற்றார் கையில் வைத்திருந்த குறுந்தடியால் தாக்கிய பால்மனை நையப் புடைத்தார். பால்மர் உருண்டோடினர்.

"யாரென நினைத்தாய், ஆஹா, அவர் சாவர்கார் நாங்கள் இந்திய ஸின் பீர் இயக்கத்தினர். ஆம் நாங்கள் நாங்களே தான்." எனும் சிம்ம கர்ஜனை குள்ளமான எம். பி. டி. அச்சார்யாவின் உள்ளிருந்து ஓங்கி எரொலித்தது. வ. வே. சு. ஐயரின் வீரக்கரம் கைத் துப்பாக்கியை இறுகப் பற்றி குறிபார்த்தது. வீரசாவர்கார் தடுத்திராவிட்டால் பால்மர் பிணமாயிருப்பான்.

வீர சாவர்காரை கோழைத்தனமாகத் தாக்கியதை சுரேந்திர நாத் பானர்ஜி கண்டித்தார்.



நாவண்மையால் புகழ்பெற்ற விபின் சந்திரபால் திங்கராவைக் கண்டித்துப் பேசிய எம். பி. டி. ஆச்சார்யா வெறுத்தார் தமது வெறுப்பை ஒரு கடிதமாக இந்தியன் சோஷி-ஜிஸ்ட் பத்திரிகைக்கு எழுதினர். விபின் சந்திரபாலரின் கடந்த கால தொண்டிற்காக ந நன்றிபாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் திங்கராவை கோழைத்தனமாக கொலையா என்று அவர் கூறியபொழுதே நமது வெறுப்புக்கு உரியவராகிவிட்டார். எனக் கடிதத் குறிப்பிட்டார் எம். பி. டி. ஆச்சார்யா.

## எம். பி. டி. ஆச்சார்யா பற்றி வ. வே. சு. ஐயர்.

லண்டனில் எம். பி. டி. ஆச்சார்யாவை மாவீரனாக ஆக்க பயிற்சியளித்த வ. வே. சு. ஐ எம். பி. டி- ஆச்சார்யாவை 'தேசபக்த ரத்தினம்' எனப் புகழ்ந்து தமது லண்டன் கடிதத் எழுதினார். ஆச்சார்யாவைப் பற்றிய ஐயரின் இந்த முக்கியக்குறிப்பில் எம். பி. டி. ஆச்சார்யா சில வரலாற்றுச் செய்திகள் அடங்கியுள்ளன. 25. 9. 1909 இந்தியா இதழில் (புதுச்சே வெளிவந்த குறிப்பிடப்பட்ட லண்டன் கடிதத்தில் ஒரு பகுதி வருமாறு:

மொராக்கோவில் மூர் ஜாதியினருடன் சேர்ந்து யுத்தம் செய்ய இரண்டு ஹிந்து வாலிபர் போனர்கள். அவர்களில் ஒருவர் ஜிப்ரால்டருக்குப் போனதும் தன்னுடைய நிச்சயத் மறந்துவிட்டு முயற்சி சரிவரச் செய்யாமல் திரும்பி வந்துவிட்டார். அவர் பெங்காலி ஆன மற்றவர் துணை வந்தவர் ஏமாற்றத்தை கூட சட்டை செய்யாமல் தன்னுடைய சங்கற்பத்தை கடை வரையில் முடிக்க முயல்வதுதான் ஹிந்துவுக்கு அழகு என்பதை உணர்ந்து டான்கியருக்குப் பு பட்டுப் போயிருக்கிறார்.

அவர் சிநேகிதன் ஒருவனுக்கு தான் மனதிடத்துடன் இருப்பதாகவும் தான் போ காரியத்தை முடிக்க மனிதனால் எவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வள எடுத்துப்பார்க்கத் தயாராக இருப்பதாகவும் எழுதியிருக்கிறார். அவர் தமிழ் வேதத்து பிராமண என்று கேட்க தம்முடைய மாகாணத்து ஜனங்கள் ஆனந்தம் கொண்டு அந்த தேச பக்த -தினத்தைக் கொண்டாடுவார்கள் என்று நம்புகிறேன்.

ஹிந்திஸ்தானத்தின் கீர்த்தி ஆப்பிரிக்கா தேசத்து மூர்களுக்குத் தெரியும்படிக்கும் அ மூலமாக உலகத்துக்கும் தெரியும்படிக்கும் நமக்கும் ஒரு உற்சாகமும், கர்வமும், நம்பிக்கை அவரைப்போல சுதந்திர யுத்தப்பிரியமும் உண்டாகும்படிக்கும் அவர் ஜெயசாலியாக வர என்று நமது பாரத மாதாவை எல்லோரும் பிரார்த்திப்போமாக.

வ. வே. சு. ஐயர், எம். பி. டி. ஆச்சார்யாவை வீரத்தியாகியாக உருவாக்கப் பாடுபட்ட இரு சான்றுகள் வாயிலாக அறிகிறோம்.

திரு. தர்மவீரா என்பவர் எழுதியுள்ள லாலா ஹர்தயாள் என்னும் நூலில் (1970) உள் பின் வரும் சான்று ஒன்றாகும்.

சென்னையைச் சார்ந்த எம். பி. டி. ஆச்சார்யாவை வீரத்தியாகியாக்க ஐயர் பயிற்சியளித்தா என்று கூறப்படுகிறது. (பக்கம் - 121) Political Troulre in india. முதல் பதிப்பு 1917 இரண்டா பதிப்பு 1973 உள்ள மற்றொரு சான்று வருமாறு :

பின்வரும் சந்ததியினர் மனதில் நிலைபெறும் வண்ணம் ஒரு வீரத்தியாகியாக எம். பி. ஆச்சார்யாவை உருவாக்குவதற்கு வ. வே. சு. ஐயர் விடா முயற்சியுடன் பயிற்சியளித்தா (பக்கம் 178)

இனி வ. வே. சு. ஐயரின் இலண்டன் கடிதத்திலுள்ள எம். பி. டி. ஆச்சார்யாவின் வரலாற்று செய்திகளைக் காண்போம்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தேச பக்தர்களை இனங்கண்டு அடக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டு ஒடுக்கி வந்த காலத்தில் பகிரங்கமாகப் பெயர் குறிப்பிட்டு எழுத வ. வே. சு. ஐயர் விரும்பாததில் வியப்பில்லை. சுக சாகர்தத் என்னும் வங்காளியையும் எம்.பி.டி. ஆச்சார்யா என்னும் தமிழரையும் இரண்டு ஹிந்து வாலிபர்கள் என வ. வே. சு. ஐயர் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார்.

அயல் நாடுகளில் வாழ்ந்த இந்தியப் புரட்சியாளர்களில் சிலர் ஐரிஷ், எகிப்து, துருக்கி, புரட்சியாளர்களுடன் தொடர்பு கொண்டு பயிற்சிபெற்றனர். மொராக்கோ நாட்டில் கொரில்லா போர்முறையில் பயிற்சி பெறுவதற்காக எம். பி. டி. ஆச்சார்யா சென்றதைக் குறித்து அந்நகரில் இருந்த பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரியின் குறிப்பிலிருந்தும் அறிகிறோம். ஆகஸ்டு 28 1909ல் லண்டனுக்கு எழுதப்பட்ட குறிப்பில் எம். பி. டி. ஆச்சார்யா இரண்டு மாதங்கள் டான்சியரில் தங்கி இருந்ததாகவும் அங்கிருந்த மூர்கள் எனும் கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்து பயிற்சி பெற இயலாமல் இலண்டனுக்கு திரும்பி விட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வ. வே, சு. ஐயரும் தமது லண்டன் கடிதத்தில் மூர்களைப் பற்றிக் கூறியுள்ளதைக் காண்கிறோம்.

1908-ல் இந்திய ராஜாங்க அமைச்சர் மார்லிபிரபு லண்டன், பாரிஸ், பெர்லின், நியுயார்கில் வெடிமருந்தும் வாள் பலமும் கொண்ட சதிக்குழுக்கள் தோன்றி கிளைத்து வருவதைக் கண்டு கவலை தெரிவித்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மொழியில் 'சதிக்குழு' என்றால் இந்திய விடுதலை இயக்கத்தின் மொழியில் 'புரட்சிக்குழு' என்பதாகும். இந்த அயல் நாட்டுப் புரட்சிக் குழுக்கள் அனைத்திலும் எம். பி. டி. ஆச்சார்யாவுக்குப் பங்கிருந்தது.

1909-ம் ஆண்டின் இறுதியில் எம். பி. டி. ஆச்சார்யா லண்டன் நீங்கி பாரிஸ் சென்றார்.

## பாரீஸில் எம். பி. டி. ஆச்சார்யா

1905-ல் "பாரிஸ் இந்தியன் சொசைட்டி" என்னும் பெயரில் ஓர் அமைப்பு லண்டன் இந்தியா ஹவுஸ் அமைப்பின் மாதிரியில் அமைக்கப்பட்டது. அமைப்பாளர் எஸ் ஆர் ராணா (1878-1957) ஷியாம்ஜி கிருஷ்ணவர்மாவின் யாத்த தோழர், பாரிஸிக்குத் தப்பிச் சென்ற முயற்சியில் வீர சாவர்க்கார் லண்டன் போலீசாரிடம் கையூட்டுப் பெற்ற பிரெஞ்சுப் போலீசாரின் கூட்டு விரோதச் செயலால் மீண்டும் லண்டன் போலீசாரால் சிறை படுத்தப்பட்டார். இந்தச் சட்ட விரோதச் செயலை எதிர்த்து புரட்சித்தாய் மேடம் காமாவின் போாதரவின் கீழ் வ. வே. சு ஐயர் பாரிஸ் முற்போக்குப் பத்திரிக்கைகளிடம் முறையிட்டார். இந்த முயற்சிகளில் எம். பி, டி. ஆச்சார்யாவும் பங்கேற்றார்.

மேடம் காமா, லாலா ஹர்தயாள் பிரெஞ்ச் சோசலிஸ்டு தலைவர் ஜே. ஜார்வில் வீரசாவர்க்காரின் விடுதலைக்கு கிளர்ச்சி செய்தனர். மார்ச்செய்ல்ஸ் நகர மேயர் முழு விசாரணை செய்தார். பிரெஞ்ச் சேம்பர் சாவர்க்காரை திரும்ப ஒப்படைக்குமாறு கோரியது.

அயல் நாடுகளில் தொண்டாற்றிய இந்தியப் புரட்சித் தலைவர்களுள் முன்னணியில் புகழ் கொண்ட லாலா ஹர்தயாளும் எம். பி. டி. ஆச்சார்யாவும் பாரீசின் அரசாங்க சார்புடைய பத்திரிகை -யான டெம்ப்ஸ் (Temps) ஆசிரியரை அணுகி வீர சாவர்கார் விடுதலைக்கு ஆதரவு தேடினர். எடுத்த முயற்சியெல்லாம் பயனற்றுப் போயின.



பாரீஸில் மேடம் காமாவின் பெருமதிப்பை பெற்றார் எம். பி. டி. ஆச்சார்யா. பிரெஞ்ச் மொழியில் வெளிவந்த வீரசாவர்க்காரின் முதல் இந்திய விடுதலைப்போர் எனும் வீரகாவியத்தை மேடம் காமாவும் எம். பி. டி, ஆச்சார்யாவும் பிரெஞ்ச் மொழியில் மொழிபெயர்த்தனர் இந்தப் புரட்சிப் பரவலுக்கு பிரெஞ்சுப் புரட்சி வீரரும் இதழாசிரியருமான பிரியன் (E. PIRION என்பவர் நூலை உச்சிமேல் வைத்து மெச்சி முன்னுரை அளித்தார். கல்கத்தாவைச் சேர்ந்த ஞானேந்திர நாத் சட்டர்ஜீ எனும் புரட்சி வீரர் அமெரிக்காவில் 1910ல் இருந்த பொழுது பாரீஸில் இருந்த எம். பி. டி. ஆச்சார்யாவுடன் தொடர்புகொண்டார். திரு. சட்டர்ஜி பாண்டிச்சேரியில் இருந்த அவர் நண்பர்கள் மூலம் எம். பி. டி. ஆச்சார்யாவின் பாரீஸ் முகவரியைப் பெற்றாராம்.

## பெர்லினில் எம். பி. டி. ஆச்சார்யா

ஆயுதப் போராட்டத்தின் மூலம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை தூக்கியெறிய ஜெர்மன் நாட்டு அரசாங்கத்தை நாடவேண்டும் என மேடம் காமா எடுத்துரைத்தார். 1909 ல் ஜெர்மனியில் பல இடங்களில் சொற்பொழிவாற்ற சென்ற காலத்தில் இந்தியர்களின் பிரச்சனையைப் பற்றி அறிந்து -கொள்ள ஜெர்மானிய அறிஞர்களிடையே ஆவலைத் தூண்டினார். 1909ல் மேடம் காமாவின் ஆதரவாளர் வீரேந்திர நாந் சட்டோபாத்யாயா பெர்லினில் இருந்து தல்வார் (TALWAR) எனும் பத்திரிகையை வெளியிட்டார். 1914ல் முதல் உலக மகாயுத்தம் மூண்டதும் பெர்லின் இந்தியப் புரட்சியாளர்களின் களமாக பாரிசுக்கு அடுத்தபடி விளங்கியது.

பெர்லின் குழு என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டது தோன்ற மூல்காரணமான அமைப்பு சுவிட்ஸர்லாந்தின் தலை நகரமான ஜூரிச்சில் 1912 ல் அமைக்கப்பட்ட இந்திய ஆதரவுச் சங்கம் எனப்பட்ட Pro Indian Society என்பதாகும். இந்த அமைப்பைத் தோற்றுவித்தவர் தமிழ் மறவன் செண்பகராமன் பிள்ளை. (1891—1934) ஆவார். Pro India எனும் பத்திரிகை இந்திய ஆதரவுச் சங்கத்தின் பிரச்சார ஏடாக வெளிவந்தது. "உலகத்தின் தலைவிதி ஜெர்மானியர்களின் கரங்களிலுள்ளது. இந்தியர்கள் சுதந்திரம் பெற ஜெர்மனி உதவுமென Pro India பிரச்சாரம் செய்தது ஐரோப்பாவில் உள்ள புரட்சியாளர்கள் ஜெர்மனியோடு உறவுகொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தியது.

பெர்லின் குழு என பொதுப்பட அழைக்கப்பட்டாலும் இந்தியன் இண்டிபெண்டன்ஸ் கமிட்டி இந்தியன் நேஷனல் பார்ட்டி என்பதுதான் அதிகாரப்பூர்வமானப் பெயர்களாகும்.

எம். பி. டி. ஆச்சார்யா இக் குழுவின் ஒரு முக்கிய உறுப்பினர் ஆவார். சுவாமி விவேகாநந் -தரின் சகோதரர் புபேந்திரநாத்தத்தர் தாரகநாத்தாஸ், முகமது பர்கத்துல்லா, ஹர்தயாள் விரேந்திரநாத்சட்டோபாத்யாயா, சந்ரகாந்த்சக்ரவர்த்தி முதலான புரட்சித்தலைவர்களின் கூட்டுறவில் திளைத்தார் எம். பி. டி. ஆச்சார்யா. பெர்லின் குழுவின்சார்பில் 1915-மார்ச் மாதத்தில் துருக்கிநாட்டு அரசாங்கத்தின் ஆதரவைப் பெற தாரக நாத்தாஸ், எம். பி. டி. ஆச்சார்யாவும் அனுப்பப்பட்டனர்.

ஜெர்மன் அயல் நாட்டு அலுவலகத் துறையின் கண்காணிப்பில் பெர்லின் குழு இயங்கியதால் பெர்லின் குழுவின் பல உறுப்பினர்கள் நாளடைவில் ஏமாற்றம் அடைந்தனர். 1917-ல் உலகத்தின் கவனத்தைக் கவர்ந்த மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சி பெர்லின் உறுப்பினர்கள் பலரின் கருத்தையும் ஈர்த்தது. 1917-ல் மகத்தான அக்டோபர் சோஷலிஸப் புரட்சிக்கு முன்பு ஷியாம்ஜி கிருஷ்ண வர்மா, விரேந்திர நாத் சட்டோபாத்தியாயா, ஹர்தயாள் ஆகியோருடன் சேர்ந்து எம். பி. டி. ஆச்சார்யாவும் ரஷ்ய ஜார் மன்னனை எதிர்த்து போராடிய ரஷ்ய புரட்சித் தலைவர்களை சந்தித்தார்.

புரட்சிக்கு பிறகு கே. எம். ட்ராஸ்னோ வெஸ்கி என்னும் ரஷ்ய அதிகாரியுடன் ஸ்வீடனில் இருந்த பொழுது எம். பி. டி. ஆச்சார்யா தொடர்புக் கொண்டார். ஸ்வீடன் நாட்டுப் தலைநகரான ஸ்டாக் ஹோமில் வீரேந்திர நாத் சட்டோ பாத்யாவும், எம். பி. டி, ஆச்சார்யாவும் இந்திய விடுதலைக் கான பிரச்சாரத்தைத் தீவிரமாக நடத்தினர் இவ்விருவரின் உண்மையான ஆர்வத்தை, ட்ராஸ்னோ வெஸ்கி பாராட்டினர். ‘இந்தியா இந்தியருக்கே’ ‘ஏகாதிபத்யம் ஒழிக’ சர்வதேசியம் வாழ்க’ எனும் தலைப்புகளில் மூன்று வெளியீடுகளை இவர் எழுதி வெளியிட்டார்.
சோவியத் ரஷ்யாவின் நல்லாதரவையும் பெற்றுத் தர பொறுப்பேற்றார். சோவியத் ரஷ்யாவின் சார்பில் புரட்சித் தலைவர் லெனின் இந்திய விடுதலை இயக்கத்திற்கு மனமுவந்து பேராதரவை அளித்தார்.

1915-டிசம்பரில் ஆப்கானிஸ்தானில் காபூலில் தற்காலிக இந்திய விடுதலை அரசாங்கத்தை அமைத்த ராஜா மகேந்திரப் பிரதாப் என்னும் புரட்சித் தலைவருடன் தோழமை கொண்டவர் எம். பி. டி. ஆச்சார்யா. 1918 ஆகஸ்ட் மாதத்தில் ட்ராஸ்னோவெஸ்கியின் தலைமையின் கீழ் பெட்ரோகிராடில் அமைக்கப்பட்ட இந்தியப் புரட்சியாளர்களின் சோவியத் ரஷ்யா ஆதரவு பிரச்சார மையத்தில் ராஜமகேந்திர பிரதாப், வீரேந்திர நாத் சட்டோபாத்யாயா ஆகியோருடன் இணைந்து பாடுபட்டார் எம். பி. டி ஆச்சார்யா

1919ல் லெனினை ராஜமகேந்திர பிரதாப் குழுவினர் சந்தித்தனர். இக்குழுவில் எம். பி. டி. ஆச்சார்யாவும் ஒருவர். இச்சந்திப்பின் விளைவாக ஆப்கானிஸ்தானத்தின் வழியாக இந்தியாவில் விடுதலைப் பிரச்சார வெளியீடுகளை பரப்பத் திட்டம் உருவாகியது. இதற்காக ஆப்கானிஸ்-தானத்தில் சோவியத் ரஷ்ய தூதராக இருந்த சூரிட்ஸ் [SURITZ] என்பவர் உதவ வேண்டுமென முடிவுசெய்யப்பட்டது. டிசம்பர் 26 1919ல் மகேந்திரப் பிரதாப் எம். பி. டி. ஆச்சார்யா, அப்துல்ராய் ஆகிய மூவரும் சூரிட்ஸ் துணையோடு காபூல் அடைந்தனர். எம். பி. டி, ஆச்சார்யாவும், அப்துல் ராயும் போல்ஷ்விக் பிரச்சார முறைகளை ஆதரித்தனர். மகேந்திர பிரதாப் தமது தற்காலிக இந்திய விடுதலை அரசாங்க அமைப்பின் பிரச்சார முறைகளை வற்புறுத்தினார்.

ரஷயத் தூதர் எம். பி. டி. ஆச்சார்யா, அப்துல் ராய் அணுகு முறையை ஆதரித்தார் மகேந்திர பிரதாப்புடன் கொண்ட கருத்து வேற்றுமையால் எம். பி. டி. ஆச்சார்யா, அப்துல் ராய் இருவரும் இன்குலாபின் இ – ஹிந்த் [the Indian Revolutionary Association] எனும் புரட்சிகர அமைப்பை காபூலில் நிறுவினர். ஆப்கானிஸ்தான் மன்னர் எம். பி. டி. ஆச்சார்யா, அப்துல் ராயின் தீவிர வாதத்தை ஏற்கும் நிலையில் இல்லாததால் அவர்கள் இருவரையும் காபூலை விட்டு வெளியேற்றினார்.

காபூலில் இருந்து வெளியேறியதும் தாஷ்கண்டில் எம். பி. டி. ஆச்சார்யா அப்துல்ராய் துணையுடன் இன்குலாபின் –இ– ஹிந்து அமைப்பை நடத்தினார். தாஷ்கண்ட் வந்த முஹாஜிர்கள் எனும் பிரிட்டிஷ் அரசு எதிர்ப்பாளர்களான இஸ்லாமியர்களுக்கு இராணுவப் பயிற்சியளித்தார் எம். பி. டி. ஆச்சார்யா. தாஷ்கண்ட்டில் எம். பி. டி. ஆச்சார்யாவும் அப்துல்ராயும் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தனர். இந்திய கம்யூனிஸ்ட்டுகட்சி தாஷ்கண்ட்டில் தோன்ற எம், பி. டி. ஆச்சார்யாவும் காரணமாவார்.

எம். என். ராய் தாஷ்கண்ட் வந்ததும் எம். பி டி. ஆச்சார்யாவிற்கும் எம். என். ராய்க்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. எம். என். ராய் பெர்லின், ஸ்வீடன், அமெரிக்க இந்திய புரட்சி அமைப்புகளையும் எம். பி. டி. ஆச்சார்யாவின் இந்திய சுதந்திர சங்கத்தையும் பொருட்படுத்தாமல் தனியாக ஒரு அமைப்பை இந்திய விடுதலை இயக்கபிரச்சாரத்திற்காக நிறுவ விரும்பினார்.



மேலிடத்து செல்வாக்கு மூலம் எம். என். ராய் தமது திட்டப்படி செயலாற்றினா எம். பி. டி. ஆச்சார்யா நாளடைவில் ஒதுங்கி விட்டார். எம். பி. டி. ஆச்சார்யாவைப்பற் திரு. வா. ரா. அவர்கள் மகாகவிபாரதியார் எனும் நூலில் கூறியுள்ளதாவது :

எம். பி. திருமாலாச்சாரிஎன்ற இன்னொரு திருமாலாச்சாரி பாரதியாரின் நண்பர்களி ஒருவர். இவர் ஐரோப்பாவில் வெள்ளைப் பெண் ஒருத்தியை மணந்து கொண்டிருப்பதாகக் கேள் பலாத்கார இயக்கப் புரட்சியில் கலந்து கொண்டு இந்தியாவிற்கு வரமுடியாத நிலைமைக்கு தம்ம ஆளாக்கிக் கொண்டார் என்று சொல்லப்படுகின்றது.

1922 ல் ரஷ்யாவை விட்டு நீங்கிய எம். பி. டி. ஆச்சார்யா தமது இரண்டாம் மனைவியுட பெர்லின் வந்தார். பெர்லினிலிருந்துகொண்டு சில பத்திரிகைகளுக்கு எழுதிவந்தார்.

1933ல் நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் எம். பி. டி. ஆச்சார்யாவை சந்தித்தார். இந்தி விற்கு வர விரும்பிய எம்.பி.டி. ஆச்சார்யாவிற்கு பாஸ்போர்ட் வசதியை நேதாஜீ செய்துகொடுத்த 1937ல் காங்கிரஸ் பல மாநிலங்களில் ஆட்சிக்கு வந்த பொழுது எம். பி. டி. ஆச்சார்யா இந்தி -விற்கு வந்தார். தமது புரட்சிகர அயல் நாட்டு அநுபவங்கள் சிலவற்றை ‘மராட்டா’ இதழ் எழுதியிருக்கிறார். இரண்டு சான்றுகளைக் காண்போம்.

17 - 5 - 1938 ம் ‘மராட்டா’ இதழில் லண்டனில் சாவர்க்கார் ஒரு மனிதன் - ஒரு வரலாற் ஆசிரியன் - [சாவர்க்காரின் லண்டன் (The War aid the Historian) ] என்னும் தலைப்பில் தி எம். பி. டி. ஆச்சார்யா எழுதிய கட்டுரையின் சுருக்கம் வருமாறு :

இந்தியாவிலிருந்தபடியே லண்டனிலிருந்து சாவர்க்காருடன் வ. வே. சு. ஐயரின் மூலம மறைமுகத் தொடர்பு கொண்டேன். இவர்களுடன் சேர முடியும் எனும் நம்பிக்கையைப் ப கனவு கூட காணவில்லை. ஆனல் சந்தர்ப்ப சூழ்நிலைகள் லண்டனிலிருந்த இவர்களுட என்னைச் சேர்த்துவிட்டது. எவரையும் தனது ஆளுமையால் கவரும் ஆற்றல் பெற்றவர் சாவர்க பிடிவாத குணமுள்ள வ. வே. சு. ஐயர் ஹர்தயாள் போன்றோரை தமது கைகுலுக்கல் ஒன்றி -லேயே தன் கருத்துக்கு இசைவாக மாறவைப்பார். சாவர்க்கார். உண்மையில் லண்டன் வ இந்தியர்களின் தலைவராக சாவர்க்கார் விளங்கினர். ஷியாம்ஜீகிருஷ்ணவர்மாவின் வயதும் அறி அநுபவமும் சாதிக்காததை சாவர்க்கார் சாதித்தார் அவ்வட்பொழுது அவர் எழுதிய அரசி வெளியீடுகளை நாங்கள் இந்தியாவிற்கு தபாலில் அனுப்பி வருவோம். இந்திய தேசிய இயக் காங்கிரஸோடு தோன்றியதெனக் கூறப்பட்டாலும், அதன் வரலாற்றுப் பின்னணியை கி. பி. 1 முதல் அமைத்துக் காட்டுவார் சாவர்க்கார். மொகலாயர்களிடமிருந்த தலைமையை மராட்டியர் எடுத்துக் கொண்டார்கள். மராட்டியர்களிடமிருந்து பிரிட்டிஷார் கைப்பற்றினர்கள், என் சாவர்க்காரின் வராலாற்றுக் கொள்கையை எவர் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இதில் மறுப்பத ஒன்றுமில்லை. சாவர்க்காரின் ஹிந்துத்துவம் முதலில் அரசியல் சார்புடையது. பின்பே சமயச்சா உடையது. இதனல் தான் தேச பக்தியுடைய இஸ்லாமியர்கள் ஒரு மராட்டியராக ஹிந்து தே வாதியாக உள்ளத்தளவில் ஒழுகிய சாவர்க்காருடன் தேச விடுதலைக்காகப் போராட முடிந்தது. 1 புரட்சியை கலகம் எனக் கருதப்பட்டதை வீறு பெற எதிர்த்து விடுதலைப் போராகச் சித்தரித்த, சாவர்க்காரின் பணி இந்திய விடுதலை இயக்கத்தில் ஒப்பற்றது.

இந்தியப் புரட்சித் தாய் மேடம் காமாவைப் பற்றி ஆகஸ்ட் 12-1938-ம் மராட்டா இத எம். பி. டி. ஆச்சார்யா "வாழ்நாள் முழுவதும் ஒரு புரட்சிவாதியாக விளங்கிய மேடம் காமா", எ தலைப்பில் உணர்ச்சிப் பொங்கி ததும்ப எழுதியுள்ளார். மேடம் காமாவின் வேதனை மண்டியஇற கால பாரீஸ் நகர வாழ்க்கையைப் பற்றி எம். பி' டி, ஆச்சார்யர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

மேடம் காமா முகத்தில் தோன்றிய பாரிஸ வாயு நோயினால் மிகவும் துன்புற்றார். டாக்ஸியில் சென்ற பொழுது ஏற்பட்ட விபத்தினால் மண்டையோடு உடைந்தது. தனக்கேற்பட்ட துன்பங்களை ஞானிப் போல் ஏற்றுப் பொறுத்துக் கொண்டார். தனது வீர மரணத்தை பாரிஸில் எதிர்நோக்கி கல்லறை ஒன்றையும் முன்னதாகவே கட்டி முடித்து விட்டார் மேடம் காமா. என்னை ஒரு நாள் அந்த கல்லறையைக் காட்ட அழைத்துச் சென்றார். கல்லறையில் பிரெஞ்ச் மொழியிலும் மேடம் காமாவின் தாய் மொழியான குஜராத்திலும் "கொடுங் கோண்மைக்கு காட்டும் எதிர்ப்பு இறைவனிடம் காட்டும் அடக்கமாகும்", எனும் சொற்றொடர் செதுக்கப்பட்டிருந்தது. பார்சி மத போதனைகளில் மிக்க ஈடுபாடு கொண்ட மேடம் காமா தனது மத வழக்கப்படி தனது சடலத்தை கழுகுகளுக்கு இரையாக்க பாரீஸில் வாய்ப்பில்லையெனக் கருதி புதைக்கக் கல்லறையைக் கட்டினார் ஆனால் அமரராவதற்கு சில மாதங்களுக்கு முன்பு இந்தியாவிற்கு வரத் தடையகன்றது. 1936-ல் இந்தியாவில் இறுதி மூச்சை விட்டார் மேடம் காமா. பார்ஸி மத வழக்கப்படி அவரது வீரவுடல் கழுகுகளுக்கு இரையாக்கப்பட்டது.

இந்தியாவில் வாழ்க்கைப் போராட்டத்தில் மிகவும் அல்லலுற்றார் எம். பி டி. ஆச்சார்யா. 1950 – ல் குடும்பச்செலவிற்கான வருவாயை எட்டிய மாக்டா நாச்மன் எனும் இரண்டாம் மனைவியும் காலமாக எம். பி. டி. ஆச்சார்யா வறுமைப் படுகுழியில் வீழ்த்தப்பட்டார். காந்தியடிகள் அமரரான பிறகும் 'ஹரிஜன்' இதழில் தமது புரட்சிகால சிந்தனைகளைப்பற்றி எழுதினார். ஹரிஜன் இதழில் 51 – 52 ம் ஆண்டுகளில் வெளிவந்துள்ள சில கட்டுரைகளில் எம். பி. டி. ஆச்சார்யாவின் பரிதாபகரமான வீழ்ச்சியைக் காண்கிறோம். தம்மை ஒரு தூய மார்க்ஸிஸ்டாகக் கூறிக்கொண்டு ரஷ்ய போல்ஷ்விஸத்தை கடுமையாகத் தாக்கியுள்ளார் எம். பி. டி. ஆச்சார்யா. ரஷ்ய போல்ஷ் விஸமும் ஒருவிதமான முதலாளித்துவமே. என விழிப்புணர்ச்சி ஒன்றையே பற்றுகோளாகக்கொண்டு தாக்குகிறார். ஸ்டாலினையும் – டாங்கேவையும் முதலாளித்துவத்துக்கு துணை போகிறவர்கள் எனக் கற்பித்துக் கூறுகிறார்.

1954 மார்ச் 24 -- ல் பம்பாய் நகரத்தின் பாட்டியா மருத்துவமனையில் காலமானார். அனாதைப் பிணமாக - பம்பாய் மாநகரச் சபையினரால் எடுக்கப்பட்டது. இறுதிச் சடங்கில் ஓர் சிலரே கலந்து கொண்டனர். மாவீர வாழ்வின் முடிவு கேட்பாரற்றுப்போனாலும் இந்திய விடுதலையின் புரட்சிகர வீர வரலாற்றில் எம். பி. டி. ஆச்சார்யாவின் தியாக பீடத்தை போற்றிப் பாதுகாக்க தியாகிகள் முன் வருவார்களாக.

## டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்

மருத்துவத்துறையில் மேற்படிப்பிற்காக இலண்டன் சென்ற டி. எஸ். எஸ். ராஜன் வ. வே. சு. ஐயர் தொடர்பால் இந்தியா விடுதியில் சேர்ந்தார். இந்தியா விடுதியில் சேர்ந்து இந்திய நாட்டின் விடுதலைக்காக உழைப்பதில் உள்ள உயர்வை வ. வே. சு. ஐயர் எடுத்துக் கூறியதாக டி. எஸ். எஸ். ராஜன் தமது 'நினைவலைகள்' என்ற நூலில் கூறியுள்ளதாவது :

நான் பாரிஸ்டர் பரிட்சையில் தேர்ச்சிபெற்று வக்கீல் தொழிலை விரிவாக ரங்கூனில் நடத்த எண்ணி இங்கே புறப்பட்டு வந்த விஷயம் உனக்கு நன்கு தெரியும். இங்கு வந்து இப்பொழுது ஒன்பது மாத காலமாகிறது. பாரிஸ்டர் பரிட்சைக்கு முதல் அங்கமான ரோமன் சட்டத்தில் நான் முதல்டனாகத் தேறிவிட்டேன் இனி மற்ற பாடங்களிலும் இம்மாதிரியே சிறப்பாகத் தேறிவிடுவேன். இதற்கு ஐயமில்லை. சென்ற மூன்று மாத காலமாக நான் விநாயக சாவர்க்கார் என்ற ஒரு பெரியாருடைய நட்பு கொண்டுள்ளேன். அவரும் பாரிஸ்டர் பாரிஸ்டர் பரிட்சைக்கு படிக்க வந்திருக்கும் இந்திய மாணவர். பக்தி கூர்மையிலும் தேச பக்தியிலும் வாக்கு உண்மையிலும் படிப்பிலும் உயர்ந்த மேதாவி. அவருடைய சிநேகிதத்தினால் என் மனம் மாறுபாடடைந்துள்ளது.



நமது நாடு அடிமைப்பட்ட நாடு என்ற உணர்ச்சி இங்கே வந்த பிறகுதான் எனக்கு நன்றாக விளங்கியது. நம் நாட்டின் தேவை தற்பொழுது பாரிஸ்டர்களும் டாக்டர்களும் அல்ல எல்லாவற்றிற்கும் முன்பு நாடு சுதந்திரம் பெறச் செய்யவேண்டிய முயற்சிதான் அடிமை உணர்ச்சி உள்ள ஒவ்வொரு இந்தியனும் செய்யவேண்டிய வேலை. அதை இந்த நாட்டிலிருந்தே இப்போதே செய்ய வேண்டுமென தீர்மானித்திருக்கிறேன். அதற்காக சாவர்க்கார் தங்கியிருக்கும் இந்தியா விடுதிக்கு அவருடன் உழைக்கும் பொருட்டு செல்லமுடிவு செய்திருக்கிறேன். ஆனால் நீ அங்கு வர வேண்டுமென நான் உன்னைக் கட்டாயப்படுத்தப் போவதில்லை. உனக்கு சம்மதமென்றால் நீயும் வரலாம்.

வ. வே. சு. ஐயரின் தேசபக்தி ததும்பிய சீரிய சிந்தனைச் சொற்கள் ராஜன் அவர்கள் உள்ளத்தில் புதிய கலக்கத்தை ஏற்படுத்தின. ஒரு வாரம் இதைப்பற்றியே ஆழ்ந்து சிந்தித்தார். ஒரு வாரம் கடந்தபின் வ. வே. சு. ஐயரிடம் பின்வருமாறு தமது முடிவைப்பற்றி கூறினார்.

நீங்கள் சொல்வது முற்றிலும் நியாயமே. அனால் பெரும் தியாகத்திலே நான் ஈடுபட சக்தியற்றவனாக இருக்கிறேன். உங்கள் உபதேசத்தின் பயனாக நான் சர்க்கார் ஊழியம் புரிய எண்ணியிருந்த ஆசை ஒழிந்தது. தேசத்துக்கு தொண்டு செய்வது என் கடமையாயினும் எனக்கு உள்ள மற்ற பொறுப்பை நான் தள்ளிவிட முடியவில்லை அதற்காக என்னை மன்னிக்க வேண்டும். எனினும் நானும் தங்களுடன் இந்தியா விடுதிக்கு வர முடிவு செய்துவிட்டேன். நான் லண்டனுக்கு எதற்காக வந்தேனோ அந்தப் படிப்பை யாதொரு குறையுமின்றி முடிப்பேன். அந்த படிப்பிற்கான நேரம் போக மற்ற நேரங்களிலெல்லாம் உங்களுடன் எனக்கும் கிடைக்கும் தேச ஊழியத்தைச் செய்யக்கூடும்.

இந்தியாவிடுதியில் புரட்சிகர அரசியல் நடவடிக்கைகளைப் பற்றிய தமது கருத்துக்களை 'வ. வே. சு. ஐயர்' எனும் நூலில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரையின் முன் பகுதிகளில் இந்நூலிலிருந்து பல மேற்கோள்கள் தரப்பட்டுள்ளன.

மதன்லால் திங்ராவின் வீரச்செயலைத் தொடர்ந்து பிரிட்டிஷ் புலனாய்வுத் துறையின் கண்காணிப்புக் குரியவர்களுள் ஒருவராய் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனும் பட்டியலில் சேர்க்கப்பட்டார்.

மதன்லால் திங்ராவை சிறையில் சந்தித்து வழக்காடுவதற்கு அவரிடம் இசைவு பெற முயற்சி செய்தோர்களுள் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனும் ஒருவர். திங்ராவின் வீரச் செயலுக்கு பாராட்டுத் தெரிவித்து நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு சாவர்காரின் தயாரிப்பு மதன்லால் திங்ரா எனும் கருத்தையும் உரையாடலில் வெளியிட்டார் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன். கர்சன்வைலி கொலையுண்ட நாளன்று மாலையில் மதன்லால் திங்ரா, டாக்டர் டி. எஸ். எஸ் ராஜனுடன் காணப்பட்டதாக காவல் துறை குறிப்பு கூறுகின்றது.

மதன்லால் திங்ராவின் அரசியல் கொலையைப்பற்றி டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனுடைய ஆசிரியர் ஒருவர் விளக்கம் கோரிய பொழுது டாக்டர். டி. எஸ். எஸ். ராஜன் பின்வருமாறு விளக்கமளித்தார்.

ஒரு நாள் அவர் "என்ன ராஜன்", இந்தியாவில் உங்களுக்கு என்ன கஷ்டம் ? நாங்கள் உங்களுக்காக அரும்பாடு படுகிறோமே ! நீங்கள்கேட்பது இன்னதென்று எனக்கு புரியவில்லையே சுருக்கமாக நான் அறிந்துக் கொள்ளக்கூடிய பதிலாக உன்னால் சொல்ல முடியுமா? எதற்காக இந்திய மாணாக்கர்கள் இங்கு வந்து எங்களுடைய பெரிய மனிதர்களைச் சுடவேண்டும்? என்று கேட்டார். அவரிடத்தில் நிதான கோஷ்டியார் இது கேட்கிறார்கள், தேசியக் கட்சியார் இது கேட்கி

றார்கள் என்றால் அவருக்கு ஒன்றுமே புரிந்திருக்காது ஆகையால் சுருக்கமாக அவர் கேட்டதற்கு ஒரு பதில் கேள்வி நான் கேட்டேன். "திருஷ்டாந்தமாக ஜெர்மனியர் இங்கிலாந்தில் அரசியல் ஆதிக்கம் பெற்று இந்நாட்டு மக்களை அடிமைப்படுத்தி அடக்கி ஆண்டு, ஜாதிச்சண்டை, மதப்பூசல்கள் இல்லாமல் ஆட்சி புரிந்தால் உங்கள் மனம் எப்படி இருக்கும்? என்று. உடனே இது ஒரு காலும் முடியாது, நாங்கள் ஒரு விநாடி கூடச் சும்மா இருக்கமாட்டோம் என்று பதில் கொடுத்தார். "இதுதான் இந்தியாவின் போராட்டமும்" என்றேன். உடனே அவருக்கு இந்திய அரசியல் போராட்டத்தின் தத்துவம் தெளிவாயிற்று."

இந்தியாவிடுதி வாழ்க்கையின் முடிவு பற்றி டாக்டர் டி. எஸ். எஸ், ராஜன் கூறியதாவது :

"என்னுடன் இலண்டனில் இந்தியாவிடுதியில் இருந்த நண்பர்களில் ஒருவர் தூக்கிலிடப்பட்டு இறந்துவிட்டார். ஒருவர் தீவாந்தர தண்டனை பெற்று அந்தமான் தீவுகளுக்கு கொண்டு போகப்பட்டார். ஒருவர் ஆங்கில அதிகாரிகளின் கையில் சிக்காமல் தம்மைத்தாமே நாடு கடத்திக் கொண்டு பிரான்ஸ் தேசம் போய்விட்டார். மற்றும் ஒருவர் நம் தோழர்களைக் காட்டிக் கொடுத்து இந்திய சிற்றரசு சர்க்காரிடம் ஊதியம் பெற்றுவிட்டார். இந்த விபத்துக் கெல்லாம் தப்பி, ஊர்வரக் -கூடிய நிலைமை எனக்குத்தான் இருந்தது. ஆங்கிலப் பெரியார் ஒருவருடைய அரிய நட்பும், ஓர் ஆங்கிலச் சிறுமியின் அன்பும், வைத்தியப் பட்டிடமும் பரிசுகளும் தாய் நாட்டும் வற்றாத பக்தியும், மனத்தை வருத்தும் அடிமைத் தளையின் உணர்ச்சியும், வறுமை நிலையும் நான் பெற்ற லாபங்கள்.

இந்தியா விடுதியில் வ. வே. சு. ஐயர், எம். பி. டி ஆச்சார்யா, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் ஆகிய மூன்று தமிழர்கள் ஆற்றிய புரட்சிகர நாட்டுப்பணி இந்திய தேசிய இயக்க வரலாற்றில் ஒளியூட்டும் பகுதிகளுள் ஒன்றாகும்.

## மதன்லால் திங்ரா

இந்தியாவிடுதிக்கு இமாலயப்புகழை ஈட்டித் தந்தவர் மதன்லால் திங்ரா. புரட்சிகரச் சிந்தனையாளர்களுக்கிடையே செயல் வீரனாக உயர்ந்து நின்ற இந்தியாவிடுதியின் போர்க்கள வீர மாண்பையும் உலகறியச் செய்தவன் மதன்லால் திங்ரா.

கர்சன் வைலி தனது குடும்ப நன்பராக இருந்த போதிலும், அவரை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கொடிய அடக்கு முறையின் பிரதிநிதியாகக் கருதி மதன்லால் திங்கரா சுட்டுக் கொன்றான்.

இந்திய ராஜாங்கச் செயலர் மார்லிபிரபு, முன்னால் வைஸ்ராய் கர்சன் பிரபு ஆகிய இருவரை முதலில் ஒழித்துக்கட்டவே திங்கரா ஆறுமாத காலமாக முயன்றதாகவும் அவ்விருவரும் பலத்த பாதுகாப்புடன் இருந்ததால், வாய்ப்பு கிட்டாததால் கர்சன் வைலி மீது குறிவைக்கப்பட்டது.(பக்-45 -மதன்லால் திங்கராவும்-புரட்சி இயக்கமும்-ஆங்கில மூலம்-வி.என். தத்தா-1978)

இந்திய புரட்சி, இளைஞர்களைத் தூக்கிலேற்றி வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை பழிக்கு பழி வாங்க, துடித்தெழுந்ததையே மதன்லால் திங்கராவின் வீர செயல் காட்டியது.

திங்கராவின் நீதிமன்ற விசாரணை ஒன்றரை மணிநேரத்தில் முடிந்துவிட்டது. சாவர்க்கார்-வ. வே. சு.ஐயர் ஆகியோர் வற்புறுத்தியும் தனக்காக வழக்கறிஞர் வைத்துக் கொள்ள விரும்பாது-குற்றத்தை பெருமையுடன் ஏற்றுக் கொள்வதாகவும் களஞ்சிங்கம் இலண்டன் வெஸ்ட் மினிஸ்டர் நீதிமன்றத்தில் கர்ஜனை செய்தது.

எதிப்து, ஐரிஷ், இந்திய நாடுகளின் தேசிய இயக்கங்களை ஆதரித்துவரும் பிரிட்டிஷ்



ஏகாதிபத்தியத்தை எதிர்த்தவருமான டபிள்யு. எஸ். பிளண்ட் ( W. S. BLUNT ) என்னும் ஆங்கிலேயர் எழுதியுள்ள நாட்குறிப்பில் மதன்லால் திங்ராவின் வீரப்பண்புகள் ஏற்றிப்போற்றப் பட்டுள்ளன.

கிருஸ்துவ சமயத்தைப் பரப்ப தொடக்க காலத்தில் உயிர் கொடுத்த கிருஸ்துவ தியாகி எவனும், திங்ராவைப்போல் நீதிபதிகள் முன் அஞ்சா நெஞ்சமுடன் அமைதி தவழும் கம்பீரத்துடன் நேருக்கு நேர் நிற்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார் பிளண்ட்.

மதன்லால் திங்கராவைப் பற்றி ராஜ தந்திரிகள் லாயிட்ஜார்ஜ், சர்ச்சில் ஆகியோருடன் தனியாக உரையாடியதைப் பற்றியும் பிளண்ட் அவர்கள் தமது அரிய நாட்குறிப்பில் எழுதி வைத்துள்ளார்.

இந்த நாட்குறிப்பில் தான் "தேச பக்தியின் பெயரால் ஒன்றுமே கூறப்படாத சொற்கள் திங்ராவின் இறுதியுரைச் சொற்கள்" என்று சர்ச்சில் செய்த வீர வணக்க உரை உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்தும் பழங்கால கிரேக்க மாவீரர்கள் நினைவில் நிற்பது போல திங்ராவும் நினைவில் நிற்பார் என்று சர்ச்சில் பாராட்டியதாகவும் பிளண்ட் குறித்துள்ளார்.

மாவீரன் மதன்லால் திங்ராவின் மண்ணுலக வீர வாழ்வு முடிவுற்றதோடு இந்தியா விடுதியும் மூடப்பட்டது இந்தியா விடுதியை ஷ்யாம்ஜி கிருஷ்ணவர்மா விற்றுவிட்டார்.

இந்தியா விடுதி இந்திய தேசிய புரட்சிகர வரலாற்றில் என்றும் பசுமை நினைவுடன் நிலை பெற்றுவிட்டது. "மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரியது" எனும் பழமொழிக்கேற்ற இலக்கிய திகழ்கிறது இந்தியா விடுதி.

ஓம்

Barbers Bridge Road
Triplicane
5 10-19

அன்பு மிகுந்த சகோதரர் ஸ்ரீமான் சின்னமுத்து முதலியாரவர்களுக்கு என்றும் நன்றே.

தங்களுடைய கார்டு கிடைத்தது. தறியை அனுப்பிக் கொடுக்க இசைந்ததற்கு அநேக வந்தனம். ஸ்ரீமான் தீர்த்தகிரி முதலியாரவர்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். எப்படியாவது அவரை வரவழைத்து தறியை உடனே அனுப்பிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தீபாவளி சமீபிக்கின்ற தாலையால் இரண்டு மூன்று நாட்களுக்குள் தறி இவ்விடம் வந்து சேருமாறு செய்யும்படி நான் பன்முறையும் கேட்டுக் கொள்கிறேன். சரீரத்தில் பலயீனம் அதிகமாய் விட்டது இரண்டு கால்களும் நடப்பதற்கு இயலாதிருக்கின்றன. சில தறிகள் வீட்டிலே போட்டுக் கொண்டால் சௌகரியமாயும் செலவுக்கு சிரமமில்லாமலும் இருக்குமென்று சில நண்பர்கள் கூறுவதினால் இம்முயற்சியினை ஆரம்பிக்கின்றேன், ஆகையால் இவ்வுதவி நீடித்த உதவியாகும் அதன் கிரயத்தை மாதந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாகக் கொடுத்து விடுகிறேன் இப்பொழுது உடனே அவசியமாயிருக்கிறது. கொஞ்சம் சிரமத்தைப் பாராட்டாது. எப்படியாவது அனுப்பி வைக்கும்படி பன்முறையும் கேட்டுக் கொள்கிறேன். இதை தந்தி போல பாவிக்கவும். வியாழக்கிழமைக்குள் தறியை இங்கு எதிர்பார்க்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
சுப்பிரமணியசிவம்.

வாழ்க கைத்தறி ! வளர்க கூட்டுறவு !

கெட்டிசாயம் ! கண்கவரும் வண்ணங்கள் !

## தியாகி சுப்பிரமணிய சிவா

# கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்., No. S. A. 124

**பாப்பாரப்பட்டி-636 809**

தர்மபுரி மாவட்டம்



**கலர் துண்டு, வெள்ளை துண்டு, 80x80 வேட்டி 60x60 லுங்கி, 60x40 லுங்கி, சர்டிங், கோட்டிங் குறைந்த விலையில் கிடைக்கும்**

**தேவைக்கு வருகை தாருங்கள்**

தலைவர்
**P. S. முருகேசன்**
உப தலைவர்
**A. வரதராஜன்**
இயக்குனர்கள்
**L. கோபால்**
**R. மணி**
**N. துரைராஜ்**
**R. சண்முகம்**
**S. புஷ்பா**




நிர்வாகஸ்தர்கள்



15-8-85 சுதந்திர தினம்

தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்டக் காவல்துறை அதிகாரி அவர்களுடன் மாவட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் ஒருபகுதி

## 15–8–85 சுதந்திர தினம்



தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்டக் காவல்துறை அதிகாரி அவர்களுடன்
மாவட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் மறுபகுதி

பாப்பாரப்பட்டியில்
வீரத்தியாகி **சுப்பிரமணிய சிவம்** அவர்களின்
நூற்றாண்டு நினைவுத்தூண்



சேலத்தில் 1923ல் தர்மவான் கிருஷ்ணதாஸ்சேட் அவர்களால்
அவரது செல்வமகள் திருமதி காந்திபாய் பெயரால் அன்பளிப்பாக கட்டி
அமரர் கஸ்தூரிபாய் காந்தியம்மையால் திறந்துவைக்கப்பட்டது




அன்மையில் 1984ல் புதுப்பிக்கப்பட்டது

பெற்ற விருதுகள் கேடயம் பட்டத்துடன்

டாக்டர் **S. N. சோமயாஜுலு** அவர்கள்



தலைவர், தென்மண்டல சுதந்திர போராட்ட வீரர்கள் சங்கம்

திருநெல்வேலி





தியாகச்செம்மல்

**K. சுப்பராயலு**

சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்க மாநிலப் பொதுச் செயலாளர்



தியாகி

**J. K. பத்மநாப செட்டியார்**

பொருளாளர்

தியாகசீலர் தீர்த்தகிரியார் நூற்றாண்டு விழா

மற்றும் மாவட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கம்



தியாகி **இராஜகோபால்**

பென்னாகரம்



P. பொன்னுசாமி, B. A., B. L.,
செயலாளர்

## நிர்வாகிகள்



T. தீர்த்தகிரிகவுண்டர், M. L. A.
தலைவர்



D. C. பெரியசாமி, Ex. M. C.
நிர்வாகத் தலைவர்





தியாகி சின்னக்கண்ணு அம்மாள்
தருமபுரி



தியாகி D.C. கந்தசாமி Rtd. R.I
தருமபுரி



தியாகி M.S. அய்யம்பெருமாள்
தருமபுரி



தியாகி N.V. ராஜன்
நல்லம்பள்ளி



தியாகி A. K. சங்கரன்
சேசம்பட்டி



தியாகி கன்னையாராஜு
கிருஷ்ணகிரி



தியாகி முனுசாமி மணேகார்
பென்னாகரம்



தியாகி டாக்டர்
K. V. கோவிந்தசாமி
அன்னசாகரம்



தியாகி P. சின்னசாமி
நாயக்கன்கொட்டாய்



தியாகி S. பெருமாள்
சேஷம்பட்டி





தியாகி R. பச்சாகவுண்டர்
லளிகம்



தியாகி டாக்டர் தெய்வம்
காவேரிப்பட்டணம்



தியாகி R. சுப்பாராவ்
பாப்பாரப்பட்டி



தியாகி P. L. முருகமுதலியார்
பென்னாகரம்



தியாகி மகாதேவராவ் பவார்
தருமபுரி



தியாகி பொன்னுசாமி
கிருஷ்ணகிரி



தியாகி P. சீனிவாசன்
காவேரிப்பட்டணம்



நண்பர்
D. S. இப்ராஹிம்பாய்
தருமபுரி



தியாகி P. சச்சிதானந்தம்
குமாரசாமிபேட்டை



தியாகி C. சுப்பாராவ்
தருமபுரி





தியாகி C. கிருஷ்ணமூர்த்தி
தருமபுரி



தியாகி முனியப்பசெட்டி
தருமபுரி



தியாகி A. P. கேசவலு



தியாகி முத்தப்பசெட்டி
தருமபுரி



தியாகி மாசிலாமணிசெட்டி
தருமபுரி



தியாகி அருணசலசாமியார்
செங்கல்மேடு



தியாகி B. முத்துவேல்ஆச்சாரி
காரிமங்கலம்



தியாகி K. K. கந்தசாமி
தருமபுரி





தியாகி வடிவேலு
சாணரப்பட்டி



கைத்தறிக் காவலர்கள்
K. V. A. அர்த்தனரி முதலியார்
உயர்திரு ஆறுமுகம், I. A. S. கைத்தறி இயக்குனர்
P. A. வட்டமலை



கைத்தறிக் காவலர் பத்மஸ்ரீ **M. P. N.**
நிர்வாகரத்தினம், நெசவாளர் நேசன் திரு J. சுத்தானந்தம்





தியாகசீலர் வரலாற்றை தொகுத்து
கொங்கு ஆய்வகத்தில் அளித்த
பேராசிரியர் அன்பரசு



சாது ஸ்ரீனிவாசமூர்த்தியும்
சகாக்களின் சமாதியும்








தியாகி T. R. V. பாண்டுரங்கம்
பேதாதம்பட்டி



தியாகி T. முனுசாமி
தருமபுரி



தியாகி U. P. இராமச்சந்திரன்
தருமபுரி



தியாகி V. சித்தஞ்செட்டியார்
தருமபுரி



தியாகி V. வடிவேலு, I. N.
காவேரிப்பட்டணம்



தியாகி மோஹன்ரங்கம்
காவேரிப்பட்டணம்



தியாகி L. A. P. கந்தசாமி
ஊளிகம்



தியாகி D. K. பச்சியப்பன்
தருமபுரி



தியாகி G. A. வடிவேலு



S. S. ரங்கநாதசெட்டியார்
பாலக்கோடு

நல்வாழ்த்துக்கள்

## தியாகசீலர் தீர்த்தகிரியாருடைய நண்பர்கள்

ஈரோட்டுப் புரவலர் மற்றும் சிறை நண்பர்கள்



பெருமாள் முதலியார்



பெரியண்ண முதலியார்



நிர்வாக ரத்தினம்
திரு J. சுத்தானந்தம்

வேதாந்த நண்பர்



சுவாமி விவேகானந்தர்

## தியாகசீலர் தீர்த்தகிரியாரின் நண்பர்கள்



மேல்வரிசை : கோட்டு அணிந்தவர் அங்கா குருசாமி செட்டியார், திரு. வி. க., ம. ரா. குமாரசாமிபிள்ளை

கீழ்வரிசை : வேலாயுதம்பிள்ளை, M. R. S. குப்புசாமிமுதலியார், அப்புமுதலியார் (எ) M. A. கோவிந்தசாமி முதலியார், வள்ளல் சின்னமுத்து முதலியார், தா. ராமசாமி முதலியார், கந்தசாமி முதலியார் மற்றும் பொந்தன் தொரசாமி செட்டியார்



இனிதுர எங்கள் வாழ்த்துக்கள் !



D. N. வடிவேல்கவுண்டர், Ex. M. L. A

வரவேற்புக்குழு

பிரபல

கைத்தறி துணி தயாரிப்பாளர்கள்

அன்னபூர்ணா டெக்ஸ்டைல்ஸ்

சத்தி ரோடு, ஈரோடு

போன் : 222

இங்கிலீஸ் மருந்துகள் வாங்க சிறந்த இடம் :

நன்றி

ஸ்ரீ விஜயலக்ஷ்மி மெடிகல்ஸ்

62, ஆறுமுக ஆசாரி தெரு

தர்மபுரி-1

வாழ்க கைத்தறி ! வளர்க கூட்டுறவு !

**B. பாப்பாரப்பட்டி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட், S. No. 644**

**பாப்பாரப்பட்டி - 636 809.**

தருமபுரி மாவட்டம் (தமிழ்நாடு)

கண்கவர் டிசைன்களில்

**லுங்கிகள்**

**60sX40sX50**

**60sX60sX50**

**60sX80sX50**

கிடைக்கும்

**திரு செல்வராஜன்**
H. I./மேலாளர் பொறுப்பு

**மலிவான விலை ! நீடித்த உழைப்பு !!**

**கெட்டிச் சாயம் !!!**

வாங்கி பயனடைவீர் ! தங்கள் வருகைக்கு நன்றி ! மீண்டும் வருக !



# சுதந்திர போராட்டத்தில் 'சுப்பிரமணிய சிவா'

**N. தியாகராஜன்,** பி. ஏ. (ஹானர்ஸ்) சென்னை

பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ? —பாரதி

பாரத நாட்டின் விடுதலை இயக்க வீரர்களின் வரிசையில் 'சுப்பிரமணியன்' என்னும் திருப் பெயர் கொண்ட மூவரில் சுப்ரமணிய பாரதி, வ. வே. சு. அய்யர் ஆகிய இருவரை ஏற்கனவே சந்தித்தோம்.

இப்பொழுது நம் மனக்கண் முன் தோன்றுபவர் விடுதலைத்துறவி சுப்ரமணிய சிவா!.

இவர்கள் மூவரும் திலகரைத் தலைவராகக் கொண்டு தேசிய நடைப்போட்ட தீவிரவாதிகள்!

சுப்ரமணியசிவா - இவர் சாமான்யர் அல்லர், ஒரு சரித்திரம் — சாதாரணர் அல்லர் சகாப்தம் ஒன்றை உருவாக்கிய சாதனையாளர். பாரத தேவியின் மிதியடியாய் பாடுபட்டு பரங்கியரின் மிதியையும் - அடியையும் பரிசுகளாகப் பெற்ற பண்புடையாளர். மகா ஞானியாய் மனிதாபிமானியாய் உத்தம தேசபக்தராய் — உயர்ந்த தியாக சீலராய் — சிறந்த நாவலராய் திறமையான மொழி பெயர்ப்பாளராய் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தவர். மக்களிடையே இன்று நிறைந்து வாழ்ந்து வரும் ஓர் அரசியல் துறவி.

பாரதியால் 'சிவா' என்று அழைக்கப்படாமல் 'சிவாஜி' என்று போற்றப்பட்ட இத்தொண்டர் 41 ஆண்டுகளே வாழ்ந்தார். கனிரென்ற குரலால் பாரதியின் பாட்டுக்களை நாட்டின் சந்து பொந்துகளிலெல்லாம் பரப்பிய பெருமை இவருக்குண்டு. அவர் நாட்டுக்கு செய்த சேவைகள் "நான் உள்ளளவும் வான் உள்ளளவும்" வரலாற்றில் வாழும் ஐயமில்லை.

வத்தலகுண்டு உத்தமர் வாழ்க்கையில் வறுமைக்கோடுகள் சித்திரம் வரைந்தாலும் நாட்டு சேவையில் சிவாவுக்கு எந்த பாதிப்பையும் இவைகள் ஏற்படுத்தவில்லை.

ஆரிய சமாஜத்தை சேர்ந்த தாகூர்கான் என்பவரின் சொற்பொழிவால் சிவாவின் எண்ணத்தில் ஏற்றிவைக்கப்பட்ட விடுதலைச்சுடர். கப்பலோட்டிய தமிழன் — கவிஞர் பாரதி இவர்கள் சந்திப்பால் திருவண்ணாமலை ஜோதியாய் மாறியது.

"சுயராஜ்யம்" எனது பிறப்புரிமை என்ற தாரகமந்திரத்தை இவர் இதயம் ஜெபித்து உரு பெற்ற, இவர் உடல் போராட்டங்களில் ஈடுபட்டது. அதன் பலன் 9 ஆண்டுகள் கொடும் சிறை வாசம் - ஒரு நோயும் தீண்டமுடியாத சிவாவின் கட்டுடலை தொழுநோய் கவ்விக்கொண்டது இதனால் இரயில் பயணம் தடைப்பட்டது. சிவா கலங்கவில்லை. கட்டைவண்டியில் ஊர் ஊராக சென்றுதனது வெண்கலக்குரலால் கணீரென்று வெள்ளையரை எதிர்த்து மக்களிடையே பிரச்சாரம் நடத்தினர், நாட்டு விடுதலையே தன் மூச்சாக கொண்டார் — வீட்டை மறந்தார்.

பிரபஞ்ச மித்திரன் — இந்திய தேசாந்திரி — ஞானபானு என்னும் பத்திரிக்கைகள் ... தமிழுக்கும், தேசியத்துக்கும் சிவாவின் விரல்கள் படைத்த அழகிய பொக்கிஷங்கள் தான் எத்தனை

தேசத்திற்கு செய்யும் தொண்டே தெய்வத்திற்கு செய்யும் தொண்டு என்ற எண்ணத்தில் உறுதிகொண்ட சிவா. பாப்பாரப்பட்டியில் பாரததேவிக்கு கோவில் அமைக்க எண்ணி அதற்கு தேசபந்து சித்தரஞ்சன்தாஸ் அவர்களைக் கொண்டு அடிக்கல் நாட்டு வித்தார். தேசிய ஒற்றுமைக்கு இதைவிட வேறு சான்றும் வேண்டுமா? மலர்ந்தமுகமும் வளர்ந்த தாடியும்-நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும் கொண்ட சிவாவின் சேவைகளை, வெள்ளை ஆதிக்கத்தினரின் கடும்நடவடிக்கைகள் மட்டுமல்ல. வேறு எந்த சக்தியாலும் தடைப்படுத்த முடியவில்லை.

"குளிர்தலும் சுடுதலும் தொண்டருக்கில்லை" என்ற பாரதியின் மந்திர சொல்லுக்கு இலக்கணமாக திகழ்ந்தவர் சிவா தான்.

வாழ்க சிவாவின் நாமம் !
வளர்க அவர்தம் புகழ்!!

நன்றி : சென்னை தாம்பிரம்-(16—5—

# தீர்த்தகிரியார் கீர்த்தி வாழ்க!

சுதந்திரப்போராட்டத்தில் பங்குகொண்ட முன்னனி தலைவர்களில் தீர்த்தகிரியார் பங்கு போற்றத்தக்கது சுதந்திர போராட்டம் நடக்கும் அந்த காலத்தில் தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதி நிலப்பிரபுக்களின் ஆதிக்க வெறி தலைவிரித்தாடிய காலமது சுதந்திர போராட்ட உணர்வு பலவீனமாக இருந்தது வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து நிற்போரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு.

ஆதரவு எந்த அளவிற்கு இருக்கிறது என்று பகிர்ந்து பார்த்து தீர்த்தகிரியார் சுதந்திர போராட்டத்தில் பங்குகொள்ளவில்லை அன்றையபிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியின் ஆதரவாளர்கள் கொடுத்த துன்பங்களை சிறிதும் பொருட்படுத்தவில்லை.

தான் மேற்கொண்ட நாட்டு விடுதலைப்பணியை தொடர்ந்து நடத்திவந்தார்.

தனித்து நின்று போராட வேண்டியுள்ளதே என தயங்கினரில்லை. இவருக்கு நூற்றுண்டு விழா நடத்துவது சுதந்திர போராட்டத்திற்கு பெருமையளிக்கும் செய்தியாகும்.

தீர்த்தகிரியாரின் நாட்டுப்பற்றுல் தன்கடமையை தொடர்ந்து செய்ய தன்னுடன் தோள் கொடுத்து செயல்பட்டவர்களால் தங்கள் தலைவருக்கு நூற்றுண்டு விழாவும், சிலை திறப்பு விழாவும் அத்துடன் மலரும் வெளியிடுவது வரவேற்கத்தக்கதாகும்.

1942-ல் ஆயிரக்கணக்கான தியாகிகள் அலிபுரம் முகாம் சிறையில் இருந்தனர். அவர்களில் நூற்றுக்கும் அதிகமான பேர்களுக்கு ரத்தக்கழிச்சல் நோய் வந்துற்றது. ஆங்கில வைத்தியத்தால் தீர்க்க இயலாமை வந்தபோது தனது ஆயுர்வேத யூனனிமுறைகளால் குணப்படுத்தினர். மற்றும் சிறை அதிகாரிகளுக்கும் கூட அவரது வைத்தியத் தொண்டு பயன்பட்டுள்ளது. என்பதை கேட்க உள்ளம் சிலிர்க்கின்றது.

ஹவ் என்ற வெள்ளைக்கார துறை இச் சிறையின் சூப்ரெண்டாக இருந்து விடுதலை வீரர்களுக்கு அவன் கொடுத்த தொல்லைகள் பல. அத்தகைய ஜெயில் சூப்ரெண்டுடன் நேருக்கு நேராக நின்று பேசுகின்ற துணிவும் மனஉறுதியும் பெற்றிருந்தார் தீர்த்தகிரியார் என்று காஞ்சிபுர தேசிய வாலிபர் சங்க அங்கத்தினர்கள் கூறும் செய்திகளை கேட்டு மனம் நெகிழாமல் இருக்க முடியவில்லை.

வாழ்க தீர்த்தகிரியார் நாமம்!

வளர்க அவரின் நூற்றுண்டு விழாக்கள்!!

K. S. பார்த்தசாரதி



தியாகி U. பச்சியப்பன்
சேஷம்பட்டி



தியாகி சந்திரசேகரன்
நெடுங்கல்



தியாகி அமரர் A. சண்முகம்
கிருஷ்ணகிரி



தியாகி D. C. பொன்னரங்கம்
தருமபுரி



தியாகி M. R. கிருஷ்ணன்
தருமபுரி



தியாகி M. கிருஷ்ணமூர்த்தி
தருமபுரி



தியாகி ராமகிருஷ்ண ஐயர்
மகாராஜகடை



தியாகி D. D. இராமசாமி
தருமபுரி



தியாகி V. K. முனுசாமிசெட்டி
தருமபுரி



தியாகி G. பச்சியப்பன்
தருமபுரி





தியாகி V. P. முனுசாமிசெட்டி
வீரிசெட்டிபட்டி



தியாகி சுப்புகவுண்டர்
சிட்லகாரம்பட்டி



தியாகி R. ஸ்ரீனிவாசராவ்
குமாரசாமிபேட்டை



தியாகி C. R. தீர்த்தகிரிமுதலியார்
கம்பைய நல்லூர்



தியாகி பெருமாள்
குட்டூர்



தியாகி பெருமாள், I. N. A.
லளிகம்



தியாகி T. ராமகிருஷ்ணன்
தருமபுரி



தியாகி K. S. சஞ்சீவிச்செட்டி
குமாரசாமிபேட்டை



தியாகி சிக்கண்ணகவுண்டர்
அஜ்ஜிபட்டி



தியாகி சி. சின்னுசாமி
சவுளுபட்டி





தியாகி S. V. வாசுதேவன்
காரிமங்கலம்



தியாகி ஆரோக்கியசாமி
பொம்மிடி



தியாகி K. R. அனந்தகிருஷ்ணன்
தருமபுரி



தியாகி பலராமன்
காவேரிபட்டிணம்



தியாகி S. D. தியாகராஜன்
தருமபுரி



தியாகி J. P. முனுசாமி
ஜருகு



தியாகி கூன்மாரிகவுண்டர்
சேஷம்பட்டி



தியாகி A. S. அய்யம்பெருமாள்
அன்னசாகரம்



தியாகி K. P. கிருஷ்ணன்
குமாரசாமிபேட்டை

நீடித்த உழைப்பு
கெட்டிச்சாயம்

கூட்டுறவே
நாட்டுயர்வு

# தியாகி தீர்த்தகிரியார் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்.

## S. A. 86



சேலம் மெயின் ரோடு, பாரதிபுரம் தருமபுரி - 636 705.

எங்களது தயாரிப்புகளான ....

- டவல்கள்
- சர்டிங்குகள்
- கோட்டிங்குகள்
- பெட்சீட்டுகள்
- கலர்பீஸ்கள்
- பாலியஸ்டர் மற்றும்
- கொசுவலைகள்

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

**தேவைக்கு வருகைதர வேண்டுகிறோம்.**

C. இராமகிருஷ்ணன் மேலாண்மை இயக்குனர்
M. S. அய்யம்பெருமாள் தலைவர்
T. S. சிவலிங்கம் உப தலைவர்

இயக்குனர்கள்

T. K. அப்பாதுரை
N, தாமோதரம்
P. விநாயகர்
K. சிவானந்தம்

வாழ்க கைத்தறி !

வளர்க கூட்டுறவு !

போன் : 62433 & 64623

தந்தி : சொசைட்டி

ஸ்தாபிதம் : 1938

கண்ணைக் கவரும் வண்ணப்புடவைகள் !
கருத்திற்கேற்ற அழகிய டிசைன்கள் ! !
அத்தனையும் ஒருங்கே அமைந்த
கைத்தறி ஆடைகள் வாங்கச் சிறந்த இடம் :

# அம்மாப்பேட்டை

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., எண். 532

**அம்மாப்பேட்டை, சேலம்-636 003**

எங்கள் நேரடி விற்பனை நிலையங்கள் :

- ★ தலைமை அலுவலகம் & சில்லரை விற்பனை நிலையம் : அம்மாப்பேட்டை, சேலம்-3
- ★ 46, தேர் வீதி, சேலம்-1 (ஆரியபவன் ஸ்வீட்ஸ் எதிரில்)
- ★ 85-பி, கன்னார தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-2
- ★ 257, கடைவீதி, ஆத்தூர் (சேலம் மாவட்டம்)
- ★ 229, கடைவீதி, அரூர் (தர்மபுரி மாவட்டம்)
- ★ சென்ட்ரல் பஜார், பிளாக் நெ. 19, யூனிட் 6/4, நெய்வேலி-3
- ★ 101, உஸ்மான் ரோட், தி. நகர், சென்னை-17
- ★ 103-87, மேற்கு ரத வீதி, திருநெல்வேலி டவுன்
- ★ 35-பி சின்னகடை வீதி, திருச்சி-2
- ★ 292, அக்ரஹார தெரு, ஈரோடு (பெரியார் மாவட்டம்)
- ★ கே. பி. பி. காம்ப்ளெக்ஸ், 69, அக்ரஹாரம் தெரு, ஈரோடு (பெரியார் மாவட்டம்)
- ★ 118, ராஜா தெரு, கோயம்புத்தூர்-1
- ★ 1, ஆலங்காயம் ரோடு (எ) ஜின்னா ரோடு, திருப்பத்தூர் (வ. ஆ.)
- ★ 24/1, 5வது சர்க்கில், மல்லேஸ்வரம், பெங்களூர்-3
- ★ 3/4, வடக்கு ஆஞ்சநேயர் கோயில் தெரு, பசவன்குடி, பெங்களூர்-4
- ★ மற்றும் மொத்த விற்பனை கிடங்குகள், அம்மாப்பேட்டை. சேலம்-3

எங்கள் சங்க தயாரிப்புகள் அனைத்தும் :

**எங்களது அங்கீகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடம் கிடைக்கும் ★ ★ ★**

**ஆர். சக்ரபாணி,** பி. ஏ.,
உதவி இயக்குநர்/தனி அலுவலர்





வாழ்க கைத்தறி !

வளர்க கூட்டுறவு !

துவக்கம் : 1979

போன் : 42



# தந்தை பெரியார்

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., எண். K. H. 80

காமாட்சி அம்மன்பேட்டை, **K. V. குப்பம்** அஞ்சல் (வ. ஆ.)

**எங்களிடம் வண்ண வண்ண கலர்களில், எண்ணங்களை**
**கொள்ளைக்கொள்ளும் டிசைன்களில் அனைத்து ரக**
**லுங்கிகளும், 40sX40s, சர்டிங் டிசைன்களும்**
**மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்**
**எங்கள் சங்கத்தின் தரமிகு தயாரிப்புகளை**
**அனைத்து கோ-ஆப்டெக்ஸ் நிலையங்களிலும் வாங்கி பயனடைவீர் !**

M. R. லோகநாதன், தலைவர்

P. K. கணேசன், உப தலைவர்

இயக்குனர்கள் :

K. P. மார்க்கபந்து, P. D. ஷண்முகம், T. G ஆறுமுகம்,
N. ராமசாமி, M. வெங்கடாஜலம்

அ. கருணாமூர்த்தி, மேலாளர் V. சேகர், எழுத்தர்

ஸ்தாபிதம் 1952

# தோப்பூர் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட் K. K. 19.

## கோனகப்பாடி அஞ்சல்

**[வழி] தாரமங்கலம் [சேலம் மாவட்டம்]**



சொந்த சாயச்சாலையில் சாயம் தோய்க்கப்பட்டு கைதேர்ந்த நெசவாளர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்ட ஜவுளி ரகங்களுக்கு

**சிறந்த இடம்**

எங்கள் சங்க ஜவுளிகள் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் எல்லா விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

P. மாரிமுத்து தலைவர் K. V. முத்து முதலியார் உபதலைவர்

**நிர்வாகஸ்தர்கள் :—**

சி. பழனியப்பன், மா. மாதேசி, K. வெங்கடாசலம், K. S. பெரியசாமி



துவக்கம் : 1957 தொலைபேசி : 28 ஆட்டையாம்பட்டி

தமிழகத்தில் ஆர்ட் சில்க் ஜவுளிகளுக்கு சிறந்த இடம்

குறைந்த விலை சிறந்த ரகங்கள்

நைலான் வேஷ்டி & ஆர்ட் சில்க் பீஸ், 120s. 100s, 80s, 60s நூல் பேட்டு & பாவஞ்சு, குண்டஞ்சு, வேஷ்டி 60s, 40s துண்டுகள் மற்றும் விசைத் தறிகளில் தயாராகும் 60s, 40s வேஷ்டிகளும், பீஸ்களும் குறைந்த விலையில் கிடைக்கும்.

# தியாகி குமரன்

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட். S 1266

S. பாப்பாரப்பட்டி P. O. [வழி] ஆட்டையாம்பட்டி சேலம் - Dt.



அகில இந்திய கைத்தறி வார விழாக்களில் தொடர்ந்து **முதல் பரிசும்** அரசினரால் நடத்தப்பட்ட கைத்தறித் துணி பரிசளிப்பு விழாக்களில் தமிழக அரசினால் தொடர்ந்து பல பரிசுகளும் பெற்றவை எங்கள் சில்க் ஜவுளிகள்.

தங்கள் தேவைக்கு வருகை தாருங்கள்

தலைவர் : **P. A. வட்டமலை**

உப தலைவர் : **P. K. M. மாணிக்கம்**

இயக்குனர்கள் : ல. குப்புசாமி S. A. அண்ணாமலை அ. பழனியப்பன்

எங்கள் ஜவுளிகள் எல்லா கோ - ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

துவக்கம் : 1977



போன் : 706

# குடியாத்தம்

## ஸ்ரீ புவனேசுவரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சங்கம் லிட்.

**No. K. H. 67**

15, பஸ்வேஸ்வரா ரோடு, புவனேசுவரிபேட்டை

**குடியாத்தம்-632 602**

60x60x50 கெட்டி, 60x40x50 கெட்டி, 60x40x50 மீடியம்

லுங்கிகள் தயாரிப்பில்

**லுங்கிகளில் சிறந்தது**

# "புவன டெக்ஸ்"

**K. திருஞானம்**
தலைவர்

**R. ஆறுமுகம்**
உப தலைவர்

இயக்குனர்கள்

P. கருணமூர்த்தி, K. A. சுப்பிரமணி, A. T. கெங்காதரம்

S. T. முருகையன், P. சண்முகம்



வாழ்க கைத்தறி !

வளர்க கூட்டுறவு !

துவக்கம் : 1951

போன் : 454



# ஸ்ரீ பாலாஜி

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., எண். C. 1932

**தரணம்பேட்டை, குடியாத்தம் வ. ஆ.**

லுங்கிகளில் சிறந்தது

**R. T. லுங்கிகளே !**



எங்கள் சங்கத்தில்

60x60x50A, 60x40x50A சூப்பர்கிளாஸ் 60x40x50M மற்றும் 60x40x40 36", 30"-ல் பலவண்ணக் கலரில் நேர்த்தியான முறையில் உற்பத்தி செய்து விற்பனை செய்கிறோம்.

எங்கள் சங்க லுங்கிகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

**A. R. வெங்கடாஜலபதி,** [illegible]

இயக்குனர்கள் :

K. C. மார்க்கண்டேய, K. M. பொன்னுசாமி, V. N. வெங்கடாசலு

ஸ்தாபிதம் 1952
வளர்க கூட்டுறவு

வாழ்க கைத்தறி
Phone : 37
VENNANTHRUR

# S. 1122. நடுப்பட்டி

## கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்.

அலவாய்பட்டி P. O. (Via) வெண்ணந்தூர் (சேலம் Dt.)

எங்கள் சங்கத்தில் 20 நெம்பர் முதல் 80 நெ வரை வேஷ்டி ரகங்களும் துண்டு ரகங்களும் தயார் ஆகிறது. 60ம் நெம்பரில் சேலை ரகங்களும் தயாராகிறது.

**தேவைக்கு வருகை தாருங்கள்**

தலைவர்
**K. S. ஆறுமுகம்**

உபதலைவர்
**க. பழனியப்ப முதலியார்**



ஸ்தாபிதம் 1956 — கைத்தறியை ஆதரிப்பீர் — போன் 49

## K. K. 89 ஜலகண்டாபுரம் 'தேவாங்கா' கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிமிடெட்

ஜலகண்டாபுரம் - 636 501 (சேலம் மாவட்டம்)



எங்கள் சங்கத்தில் தயாரிக்கப்பட்டு வரும்
**ஸ்பெஷல் ஸ்பன் ரகம் & கோடம்பாக்கம் ரகம் புடவைகள்**
கைத்தறி உலகிலேயே ஒரு புதுமையை உண்டாக்கியுள்ளது.

1973 - ஆம் ஆண்டு கைத்தறி கண்காட்சியில் ஸ்பன் கோடம்பாக்கம் ரகங்களுக்கு

# முதல் பரிசு

பெற்றுள்ளது

எங்களின் சங்க ஜவுளிகள் எல்லா "கோ - ஆப்டெக்ஸ்" எம்போரியங்களிலும், டெப்போக்களிலும் கிடைக்கும்

★ நாணயமான விலை
★ புதுமையான டிசைன்கள்
★ கவர்ச்சியான ரகம்
★ நம்பிக்கையான தயாரிப்பு

நீடித்த உழைப்பு கவர்ச்சியான ரகங்கள்

தந்தி: மெட்ரோ போன்: 68

metrotex

எங்களது கண்கவரும் சிறந்த தயாரிப்புகளான



- படுக்கை விரிப்புகள்
- மேஜை விரிப்புகள்
- வேட்டிகள்
- பாலியஸ்டர் சூட்டிங்
- சர்ட்டிங்
- தலையணை உறைகள்
- கட்டில் நாடாக்கள்

முதலியன

## சென்னிமலை
## மெட்ரோ நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., நெ. C. H. 7

அஞ்சல் பெட்டி 21 சென்னிமலை-638 051 பெரியார் மாவட்டம்

இயக்குநர்கள்
S. கருப்புசாமி, K. இராமசாமி, P. சென்னியப்பன்

உப தலைவர்
**M. மாரப்பன்**

---

வாழ்க கைத்தறி! வளர்க கூட்டுறவு!

போன்: 44

# Dr. KALAIGNAR Tex

## டாக்டர் கலைஞர் கருணாநிதி
## நெசவாளர் கூட்டுறவு உர்பத்தி & விற்பனை சங்கம் லிட்., CH. 11

**காஞ்சிக்கோவில்-638 116**

(வழி) ஈரோடு ஆர். எம். எஸ். (தமிழ்நாடு)





தயாரிப்பு: 2/17 துண்டு ரகங்கள்
பெட்சீட் ரகங்கள்

ஷோரூம்: மாக்கம் & சன்ஸ்
அபினை தியேட்டர்
காம்ப்ளெக்ஸ்
B. N. K. அய்யங்கார் ரோடு
பெங்களூர்-9

R. பிரகாசம்
கைத்தறி அலுவலர் செயலர்

K. R. துரைசாமி
தலைவர்

திரு. டி. எம். மூக்கண்ணாச்சாரியாரை பற்றிய குறிப்புகள் ஹ்யூமின் காங்கிரஸ் அறிக்கையில் உள்ளன. இவருக்கு ராவ்சாஹேப் என்ற பட்டமிருந்தது இந்து மதத்தினர் இரும்பு வியாபாரி தஞ்சை முனிசிபல் சபை உறுப்பினர் 'கும்பகோணம் கைவினைஞர்கள் சங்கத்தின் சார்பில் தஞ்சையில் 12-12-1885ல் நடைபெற்ற கூட்டத்தில் காங்கிரசிற்கு பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப் பட்டார். இவரது பிரதிநிதி எண் 212 இவருடன் எஸ். வி. அய்யாசாமி பத்தரும் என். வைத்திய லிங்க பத்தரும் பிரதிநிதிகளாக தேர்ந்தெடுக்கப் பட்டனர். இவர்களது பிரதிநிதிகள் எண்கள் முறையே 213, 214.

சென்னை காங்கிரசின் ஏழாவது தீர்மானம், தொழிற் கல்வியைப் பற்றியது. (Techinical Education.) இந்தத் தீர்மானம் சேலம் எஸ். ராமசாமி முதலியாரால் முன் மொழியப்பட்டு, சென்னை பச்சையப்பன் கல்லூரி முதல்வர் ஜான் ஆடம் என்பவரால் வழிமொழியப்பட்டு, ஷேய்க் காதிர் பக்ஷ் (ஒனத்) என்பவரால் ஆதரிக்கப்பட்டது.

தீர்மானத்தின் அமைப்பு வருமாறு:

"ஜனங்களின் வறுமையை உத்தேசித்து தேசத்தின் நிலைமைக்கேற்றபடி தொழிற் கல்வி முறையை விஸ்தாரமாக அமைக்கவும், உள்நாட்டுத் தொழில் சாமான்களை ராஜாங்கக் காரியங்களுக்கு உபயோகித்து தேசிய கைத்தொழில்களை உற்சாகப் படுத்தவும், நாட்டுத் தொழிலாளிகளின் திறமையையும் பயிற்சியையும் இப்போதைக் காட்டிலும் அதிகமாக உபயோகப் படுத்தவும்,ராஜாங்கத்தாரைத் தூண்ட வேண்டும்.

இந்தத் தீர்மானத்தின் மீதான விவாதம் முப்பதாம் தேதியன்று காலை 11 மணிக்குத் தொடங்கியது. இந்த விவாதத்தில் கலந்துகொண்டுதான் திரு. டி எம். மூக்கண்ணாசாரி தமிழில் பேசினார். காங்கிரஸ் அறிக்கையில் இவரது பெயருக்குக் கீழே — அடிக்குறிப்பில் பின்வருமாறு செய்தி தரப்பட்டுள்ளது.

"ஐரோப்பாவில் கல்வி எனக் கூறத்தகுந்த எந்தக் கல்வியையும், கைவினைஞர் பெற்றவரில்லை. இந்த நற்குடியாளர், தஞ்சாவூர் குடிமக்களில் மிக்க பிரபலமானவர்; தஞ்சாவூர் முனிசபல் சபையின் உறுப்பினர் என்ற வகையில் நாளும் ஓயாது உழைப்பவர்; பொதுமக்களுக்கு தொண்டு புரிவதில் கருத்தாய் இருப்பவர். தஞசாவூர் மாவட்டம் முழுவதிலும் இருந்து கும்பகோணத்தில் கூடிய கைவினைஞர்கள் கூட்டத்தில் இவரும், மற்ற இருவரும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்"

இந்த விவாதத்தைப் பற்றி அறிக்கை விரிவாகக் குறிப்பிடும் பொழுது, திரு. மூக்கண்ணாசாரியாரின் பேச்சை மட்டும் தனியாகப் பாராட்டியுள்ளது.

"நீண்ட, புரியும்படியான, கருத்தைக் கவர்ந்த முக்கிய அம்சமாக" இருந்தது என பாராட்டுரை குறிப்பிட்டது.

தமிழின் "சொல்லுந்திறமை" க்கு ஆங்கிலேயர் ஹியூம் அளித்த பாராட்டுரையை அப்படியே ஆங்கிலத்தில் அளிப்பது அவசியமல்லவா?

"But parhaps the most interesting feature in the debate was a long, sensible, matter-of fact speech in Tamil by Mr Mookar.asari of Tanjore".

காங்கிரஸ் பிரதிநிதியாக கன்னித் தமிழில் உரையாற்றிய திரு' டி. எம். மூக்கண்ணாசாரியின் தமிழ் மூலம் நமக்கு கிடைக்கவில்லை. ஆங்கில மொழியாக்கத்தின் சுருக்கம் காங்கிரசின் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளது. இதன் தமிழாக்கம் வருமாறு:



"தலைவர் அவர்களே! கனவான்களே! கல்கத்தா' பம்பாயில் நடைபெற்ற இரு காங்கிரஸ் மாநாடுகளிலும் குறிப்பிடத்தக்க குறைபாடு ஒன்று தெரிந்தது. இந்திய மக்கட் தொகையில் உத்தியோகஸ்தர்கள், தொழில் துறையாளர், வர்த்தகர்கள், விவசாயிகள் ஆகியோர் நான்கு முக்கிய வகுப்புகளாகும், இவர்களுள் தொழில் துறையாளர் (Industrial) அந்த காங்கிரஸ் மாநாடுகளில் போதுமான அளவு பிரதிநிதித்துவம் பெறவில்லை. ஆனால் அந்தக் குறைபாடு, இந்த காங்கிரசில் நீங்கியது. கனவான்களே இந்தத் தொழில் துறையாளர் பிரதிநிதிகளில் நான், ஒருவன். தஞ்சாவூர் மாவட்ட அனைத்துத் தொழில் துறையாளர் சார்பில் கும்பகோணத்தில் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மூவர் பிரதிநிதிகளாக வந்துள்ளோம்.

இந்த அவையின் முன்னுள்ள தொழிற்கல்வியைப் பற்றிய விவாதம் நாட்டிற்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் நான் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகுப்பிற்கு பெருமளவு நன்மை பயக்கும் இந்த விவாதத்தில் நான் சில வார்த்தைகள் கூறக் கடமைப் பட்டவன்.

நமது நாட்டின் முன்னேற்றத்திற்காக காங்கிரஸ் இதய பூர்வமாய் பாடுபடுகிறது என்பதில் ஐயமில்லை. கனவான்களே! புகழொளி மிக்க ராஜதந்திரி ராஜா சர். டி. மாதவராவ் அவர்கள், நடு நிலைமையுடன் பணியாற்றும் நீதிபதி திரு. முத்துசாமி ஐயர் போன்ற ஆயிரக்கணக்கானவர்கள் உயர்ந்த பொறுப்பான பதவிகளை அலங்கரிக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அனால் இது மட்டுமே நாட்டின் வளர்ச்சிக்கு நம்மை வழிபடுத்தும் என நாம் எதிர்பார்ப்பது முற்றிலும் பொருந்தாது. (அழுத்தம் இந்நூலாசிரியரால் இடப்பட்டது): அல்லது, தொழில் துறை முற்றிலும் இல்லாத நிலையில், வர்த்தகமோ, விவசாயமோ நாட்டின் வளர்ச்சிக்கு நம்மை வழிப் படுத்தாது, ஏன் என்றால் வர்த்தகத்திற்கும், விவசாயத்திற்கும் முதன்மையான தூண்டுதல் அளிப்பது தொழில் துறையே. ஆக, நாட்டின் வளர்ச்சிக்கு மூதற் காரணமாக விளங்கும் தொழில் துறையின் முக்கியத்துவத்தை இந்த உலகத்தில் யாரே மறுக்கத் துணிவார்கள்? ஐரோப்பிய நாடுகள் தற்காலம் உண்மையிலேயே மகிழ்ச்சியில் திளைக்கும் வளர்ச்சிக்கு தொழில் துறையல்லவா உதவியுள்ளது.?

ஆகையினால் கனவான்களே! நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவுள்ள கலைகளும், தொழில்களும் நலிந்து தேய்ந்து ஒழிந்து போகாமல் காப்பாற்ற வேண்டியது நமது முக்கியக் கடமை அல்லவா? நாட்டின் பல பாகங்களிலும் கலைகளும், தொழில்களும் ஊக்கமுடன் வளர்க்கப்பட வேண்டும் என்பதிலும் நாம் கருத்தாக இருக்கவேண்டும். கருணையும், பெருந்தகைமையும் வாய்ந்த நமது ஆட்சி, நாட்டின் தொழில் துறை முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு தொழிற் கல்விக்கான புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தி, பெருமளவில் மக்கள் பயன்பெற விரிவாகப் புகுத்த முன்வருவதில் காலதாமதம் செய்யக்கூடாது.

கனவான்களே! நமது நாடு இன்று நெருக்கடியான நிலையில் உள்ளது. வரி விதிப்பு உயர்ந்து விட்டது முறையான முன்னேற்றத்திற்கான மூலாதாரங்கள் பற்றாக்குறையாக உள்ளன இந்த நாட்டின் செல்வம் தொடர்ந்தாற்போல வெளியேறிக் கொண்டிருக்கிறது.

இந்த ஆட்சி, நாட்டின் தற்பொழுதைய நிலைமையைக் கண்டு பிடிவாதமாக அலட்சியம் காட்டி வருமாயின் இந்த ஆட்சி இப்பொழுது கூட நெருக்கடி நிலையை உணர்ந்து கடுமையான முயற்சிகளை விரைந்து எடுத்து நாட்டைக் காப்பாற்றத் தவறினால், நாட்டில் உள்ள எஞ்சிய சிறு செல்வமும், இந்த நாட்டை முழுமையான அழிவில் ஆழ்த்திவிட்டு தொலைவில் உள்ள நாடுகளிடம் சென்றடையும். நாட்டை எதிர் நோக்கியுள்ள இந்த பேரழிவைத் தவிர்க்க, கனவான்களே! நாம் ஆட்சியிடம் முறையிடுவோம். தொழிற்கல்வி நிலையங்கள் நாடெங்கும் நிறுவப்பட்டு நன்கு நடத்தப்பட வேண்டும். இந்தியர்களுக்கும் [illegible] இயந்திரப்பொறியி[illegible]

கள் இங்கேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும். இவ்வாறு உற்பத்தியில் ஈடுபடுவோர்களுக்கு தேவைப்படும் பயிற்சி, செய் முறைகளைப் பற்றிய படிப்பு முதலானவற்றிற்கு இங்கேயே ஏற்பாடு செய்ய வேண்டும்.

நாடு முழுவதுமாக இத்தகைய தொழில் நிலையங்களை நிறுவ இயலவில்லையென்றால், முக்கிய நகரங்களிலாவது நிறுவுமாறு நாம் ஆட்சியிடம் கேட்க வேண்டும். இதற்குரிய மூலதனத்தை ஆட்சியாளர் தருவதானாலும் சரி, அல்லது ஆட்சியாளரின் உத்தர வாதத்தின் பேரில் தனியார் தருவதானாலும் சரி, ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தத் தொழில் நிலையங்களின் நிருவாகம், சென்னை கலைப் பள்ளியைப் போன்று (Madras School of Arts) அரசாங்கத்திடமே முழுவதுமாக இருக்கவிடக் கூடாது. அரசின் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் உள்ள சுதேச முதலாளிகளின் நிருவாகத்தில் விடப்பட வேண்டும்.

இந்த நிலையங்களில் உற்பத்தியாகும் பண்டங்களை அரசாங்கம் வாங்கி ஊக்குவிக்க வேண்டும். இந்த முயற்சிகள் வெற்றியடைந்தால் மேலும் பல வெளியூர் நகரங்களில் நிலையங்களை நிறுவி விரிவுபடுத்தவேண்டும்.

சுதேச கைவினைஞர்கள், தொழில் துறையாளர்களை ஊக்கப்படுத்த அரசாங்கம் ஆங்காங்கு பொருட் கண்காட்சிகளை நடத்தவேண்டும். பொருட் கண்காட்சியில் தேர்ந்தெடுக்கப் பட்ட தொழில் திறமையைப் பாராட்டிப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்குவதற்கு திட்டங்கள் வகுக்கவேண்டும். இதற்காக எல்லா ஸ்தல ஸ்தாபனங்களும், முனிசிபல் சபைகளும் 'பரிசு நிதி' ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.

காங்கிரஸின் இந்த வழியில் சாதனைகள் காண பாடுபட வேண்டும். இதனால், அழிந்து வரும் தொழில்கள் உயிர் பெற்று, முன்னேறத் தூண்டுதல் கிடைப்பதுடன், நாடும் சுயபலத்தில் நிற்க உதவும். உலக நாடுகளில் நாம் இழந்த இடத்தை மீண்டும் பெற முடியும்.

தொழிற்சாலைகளும் தொழிற்பட்டறைகளும் (factories and workshops) பெருகிவிட்டால், கனவான்களே! நமது நாட்டிலுள்ள ஆயிரக்கனக்கான மக்கள் கௌரவமாக வேலை வாய்ப்புகள் பெறுவர். வேலைவாய்ப்பற்ற இந்த மக்கள் உயிர்வாழப்போராடுகிறார்கள்.
இந்நாட்டின் நானூற்றைம்பது இலட்ச மக்கள், அனாதைகளாக இருக்கிறார்கள்; அரசாங்கம் ஒப்புக் கொண்டக் கணக்கிலேயே ஒரு நாளுக்கு ஒரு வேளை சாப்பாடு கூட இம்மக்களுக்கு கிடைப்பதில்லை! இந்த அனாதைகளுக்கு சிறு வாயளவு உணவேனும் தரக் கூடிய வேலைவாய்ப்புகளை, உண்டாக்கித் தரும் கலைகளும், தொழில்களும் வளர்ந்தோங்கும் நன்னாளை நாம் எதிர் பார்ப்போமாக.

கனவான்களே! உங்கள் பொன்னான நேரத்தை நான் வெகுவாக எடுத்துக் கொண்டேன் பொறுத்தருள்வீர் உங்கள் முன்னே பேசியதில் அற்ப விஷயங்கள் ஏதேனும் இருந்தால் பொருட் படுத்த வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மூக்கண்ணாச்சாரியாரின் அன்றையப் பேச்சை இன்று படிக்கும் பொழுதுகூட உணர்சி துடிப்பு ஏற்படுகிறது.

காங்கிரசின் பெரும்பாலான பிரதிநிதிகள், இங்கிலீஷ் படித்தவர்களுக்கு பதவி வாய்ப்புகள் தரப்படக்கூடாதா? இங்கிலீஷ் படித்தவர்களின் ராஜவிசுவாசத்தை சந்தேகிக்கலாமா? ரஷ்ய அபாயம் ஏற்பட்டால் தாங்கள் ஓடி வர மாட்டோமா என்றெல்லாம் முழக்கமிட்ட முப்பதாயிரம் பேர்கொண்ட காங்கிரஸ் பந்தலிலே ஒரு தமிழ்ப் பிரதிநிதி அனாதைகளை ஒரு வாய்ச் சாப்பா...



ஏங்கும் அனாதைகளை நாட்டின் தொழில் வளர்ச்சியை தொழிற் கல்வி மக்கட் திரட்சியை சென் அடையவேண்டும் எனும் பேராவலை உள்ளமுருக வெளிப்படுத்தி உணர்த்தினாரே !

என்ன பெருமை! என்ன பெருமை! அந்த முதல் தமிழ்க் குரலுக்கு பெருமை, தமிழுக் மட்டுமா? எடுத்துக்கொண்ட பொருளின் விளக்கத்திற்கும் அல்லவா!

உத்யோகங்கள் பெறுவது மட்டுமா வளர்ச்சியின் அடையாளம் தொழில் துறையி பெருக்கம் தானே வளர்சியின் அடையாளம் எனச் சாற்றினாரே, மூக்கண்ணாச்சாரியார். அ காங்கிரசின் இலட்சியங்களைத்தான் குறிப்பிட்டார் என்றாலும் அதில் விழுந்த அழுத்தம் எழு உணர்ச்சி அலைகள் அல்லவா சிறப்பெய்துகின்றன.

தமிழில் அரசியல் பேசவராது என சமீப காலம் வரையில் போலிப் பெருமை பேச் வருக்கத்தை நினைவில் கொண்டு 1887 -ம் வருடத்தின் மூக்கண்ணாச்சாரியின் அரசியல் பேச் மதிப்பிடுங்கள்.

அவருடைய பேச்சின் முடிவு உணர்ச்சிப் பிழம்பாக அல்லவோ ஒளி வீசுகிறது ? இதனை தான் என்னமோ சுதேசமித்திரனின் காங்கிரஸ் வரலாறு அந்தப் பகுதியை மட்டும் வெளியிட்ட

தொழிற் கல்வியைப் பற்றிய ஏழாந் தீர்மானத்தை ஒட்டிப் பேசியவர்களில் தஞ்சாவூ மூக்கண்ணாச்சாரி ஒருவர். ஸ்ரீமான் மூக்கண்ணாச்சாரியார் செய்த பிரசங்கத்தில் பின்வருமா கூறினார்.

நமது தேசத்தில் ஆலைகளும் தொழிற் கூடங்களும் ஏற்பட்டால் இப்போது யாதொரு வழி மின்றி உடம்பிலே உயிரை நிறுத்த வழி தெரியாமல் தியங்கித் தவிக்கும் ஏழைகளுக் கெல்லா யோக்கியமாக உழைத்து ஜீவனம் செய்ய வழி உண்டாகும். கனவான்களே ! இந்தியாவி கலைளும், தொழில்களும் அபரிதமாக விருத்தியடைந்து சர்க்கார் அதிகாரிகளே ஒப்புக்கொள்ளு கணக்குப்படி இப்போது நாளொன்றுக்கு ஒருவேளைகூட முழு ஆஹாரம் கிடைக்காதபடி கஷ்ட படும் நானூற்றைம்பது லக்ஷம் ஜனங்களுக்கு ஒருவேளை ஆகாரமேனும் கிடைக்கக்கூடிய கால எப்போது வருமோ தெரியவில்லையே என்று மூக்கண்ணாச்சாரியார் வருத்தப்பட்டார்.

திரு மூக்கண்ணாச்சாரியாரின் வருத்தத்தை சுட்டிக்காட்டிய காங்கிரஸ் மகாசபை சரித்தி இத்துடன் தொடர்புடைய செய்தியொன்றையும் தொடர்ந்து தெரிவிக்கிறது.

இவ்விஷயத்தைப் பற்றி பாரத பூமி 'விடுதலைக்குப் பட்டபாடு' என்ற தமது காங்கிர சரித்திர நூலில் ஸ்ரீமதி அன்னிபெஸன்ட் ஆங்கில பாஷையில் ஷெல்லியென்ற கவிராயன் விடுத தெய்வத்தை நோக்கி எழுதிய பாட்டொன்றிலிருந்து பின்வரும் வரிகளை பெயர்த்தெழுதியிருக்கிற ஷெல்லியின் பாட்டு :

(விடுதலைத் தெய்வமே

உழைப்பவர்க் கெல்லாம் உணவு நீ யாவாய் ஆங்கில நாட்டில் இன்றி நாம் காணு சோற்றுப் பஞ்சம் சுதந்திர தேவியே நின்னுடை இன்னருள் நிலவு நாடுகளில் தோன்றாது தோன்றாதம்ம என்பது.

இதிலே "ஆங்கில நாட்டில்" என்பதை பாரத நாட்டில் என்று அன்னிபெஸன்ட் மாற் வாசிக்கும்படி சொல்கிறார்.

மேற்படி பாடலில் சுதந்திர தேவியே என்ற சொற் பிரயோகத்தைக் காண்க: ஷெல்லிதாச பாரதியின் சுதந்திர தேவி எனும் ஒரு பாடலின் தலைப்பையும் எண்ணுக.

ஹ்யூமின் காங்கிரஸ் அறிக்கையிலும் மூக்கண்ணாச்சாரியின் உணர்ச்சி மிக்கத் தனிப்பெ வருத்தத்தை வெளிப்படுத்தும் கருத்துக்களின் குறிப்புரையைக் காண்கிறோம்:

காங்கிரசில் வறுமையைப் பற்றிய மூக்கண்ணாச்சாரியின் பேச்சை காங்கிரஸ் அறிக்கை விமர்சனத்திற்கு எடுத்துக்கொண்டது.

திரு. மூக்கண்ணாச்சாரியாரின் இறுதிச் சொற்களை வைத்துப் பார்க்கும்பொழுது ஒரு விளக்கத்தை நாம் தருவது வழுவாகாது. சொந்தச் சகோதரர்களின் அரை வயிற்றுப் பட்டினியைப் பற்றி பரிவுகாட்டாத காரணத்தால் இதுவரை இவ்விஷயம் பற்றி சிறிதளவே பேசப்பட்டுள்ளது.

இந்த கொடிய வறுமை ஆண்டிற்கு ஆண்டு அடித்தளத்து மக்களை கொன்றழித்து வருகிறது. ஒருவேளை பெரும்பான்மையினர் சமூக ஏணியில் ஊர்ந்து மேலே செல்வதாக இருக்கலாம். டப்ரின் பிரபுவின் நிருவாகம் ஏற்பட்ட காலத்தில் இருந்து வரி விதிப்புகள் பெருகிவிட்டன. ஆட்சியின் முரட்டுத் தனமான போக்கினால் இந்திய மக்கள் ஏமாற்றமுற்றனர். தங்களைச் சுற்றியுள்ள வறுமையை மட்டுப்படுத்த பொருளாதார வசதிகளைப் பெறவில்லை. நிருவாகத்தில் தங்களுடைய சக்தி வாய்ந்த குரல் கேட்பதற்கான பிரதிநிதித்துவம் பெற்றால்தான் வழி பிறக்கும் என உண்மையாக நம்புகிறார்கள்.

இந்திய மக்களின் வறுமையைக் குறிப்பிட்டு மூக்கண்ணாச்சாரியார் புலம்பியதைப் போலவே ஹ்யூமும் புலம்பியுள்ளார்.

கல்கத்தாவில் 1886-ல் "ஒரு முதியவனின் நம்பிக்கை" (The old Man's Hope) என்னும் நூலை ஹ்யூம் எழுதி வெளியிட்டார். பத்தொன்பது பக்கங்கள் கொண்ட இந்தச் சிறு வெளியீட்டில் இந்திய மக்களை வாட்டும் கொடிய வறுமையைப் பற்றிய அவரது மனக்குமுறலை கேட்கிறோம்

"ஓ! நன்றாக உண்டு களிப்பவர்களே" எனத் தொடங்குகிறது ஹ்யூமின் மனக் குமுறல்.

உழைப்பு! உழைப்பு! உழைப்பு! பட்டினி! பட்டினி! பட்டினி! நோய் நோய் நோய் துன்பம் துக்கம் ஐயகோ ஐயகோ என் சொல்வேன்? துக்கமயமான அவர்களது குறுகிய வாழ்வின் ஆதார சுருதிகளே இவைகள்தான். இந்த ஐந்நூறு லட்ச மக்கள் பிறக்காமல் இருந்தாலே எவ்வளவு நன்மையாய் இருந்திருக்கும்! அல்லது இவர்கள் அத்தனை பேர் கழுத்துகளிலும் கருங்கற்களை கட்டி ஆற்றிலே மூழ்கடித்து விடுவதும் ஒரு வகையில் மேலானதாய் இருக்கும்".

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்குமிடத்து 1887-ம் காங்கிரசில் ஒலித்த முதல் தமிழ்குரல், 'தேசியக் குரலில்' தனியொரு வரலாற்றைத் தொடங்கி வைத்தது.

> ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
> நம்மில் ஒற்றுமை நீங்கில்
> அனைவர்க்கும் தாழ்வு.
>
> —பாரதி




வாழ்க கைத்தறி ! வளர்க கூட்டுறவு !

ஸ்தாபிதம் : 1980 தந்தி ; பாரதிடெக்ஸ்



**பாரதி**

**கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்., S. A. 97**

**வள்ளுவர் குடியிருப்பு**
**தாதம்பட்டி ★ சேலம்-14**

(அங்கீகாரம் பெற்ற ஸ்தாபனம்)

★ எங்களிடம் தயாராகும் ஸ்பெசல் ரகங்கள் ★



**80sx60s 80sx80s 100sx100s 100s சுப்ரீம், ஸ்டீல் 100sx120s 120sx120s ரகங்களில் குண்டஞ்சு பாவாஞ்சு, சிறியபேட்டு, பெரிய பேட்டு, மொக்குபேட்டு, ஸ்பெஷல் சூப்பர்பேட், M A பார்டர் ஆகிய ஸ்பெஷல் ரகங்களும் 80sx80s 4 முழம் துண்டு ரகமும் உள்ளன**

எங்கள் சங்கத்தின் ஜவுளிகள் எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்

S. R. மாணிக்கம் — உப தலைவர்

P. C. சீனிவாசன் — தலைவர்

நிர்வாகஸ்தர்கள்

L. சந்திரன், A. V. சண்முகம், V. பத்மனாபன், S. நடராஜன், C. கிருஷ்ணன்

வாழ்க கைத்தறி !          வளர்க கூட்டுறவு !

# KANJICOTEX

★ FAMOUS
★ FINE
★ FANCY

Manufacturers of:
High Class Colour
Towels & Bedsheets

FABRICS

HAND LOOM – FAST COLOUR

The Kanjikovil Weavers' Co-operative
Production & Sale Society Ltd., A. A. 94

**KANJIKOVIL-638 116**
**Periyar Dist. Tamil Nadu**

**M. NALLENDRAN**
TEXTILES CONTROL OFFICER & SECRETARY

**R. NALLASAMY**
PRESIDENT

தியாகசீலர் தீர்த்தகிரியார் நூற்றாண்டு விழா

**Tel : CHENCOPTEX**          **Phone : 43**

# Chencoptex

**AA. 399**

"சென்கோப்டெக்ஸ்"

உங்கள் மனதைக் கவரும்
புதியரகத் துணிகளை
உங்களுக்கு அளிக்கிறது !

★ படுக்கை விரிப்புகள்
★★ அலங்காரத் துணிகள்
★★★ தலையணை உறைகள்

★ மற்றும் பல ரகங்கள் ★

உலகெங்கிலும் உள்ள இல்லங்களை அழகுபடுத்துகிறது

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின்
எல்லா விற்பனை நிலையங்களிலும் கைத்தறி
மாளிகைகளிலும் கிடைக்கும்.

## சென்னிமலை தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனைச் சங்கம் லிட்.,

**No. A. A. 399**

சென்னிமலை (தென்னிந்தியா)

**R. ராஜகோபாலன்,** B.A.
துணி நூல் கட்டுப்பாடு அதிகாரி, செயலர்

**K. சின்னுசாமிகவுண்டர்**
தலைவர்

வாழ்க கைத்தறி !

வளர்க கூட்டுறவு !

**Phone 32**

## Help the Hand-loom



**Vellotex**

DEALERS IN :
2/17, Bedsheets, Towels & Pillow Covers
Our Goods are Available at Reasonable Rates in all Co-optex Depots and Hand-loom Houses in all Over India

**Famous Fine Fancy Fabrics**

Note : FAMOUS FOR FAST COLOUR AND DURABILITY

**The Vellode Weavers' Co-operative Production & Sale Society Ltd., No. K.1177**

**V. VELLODE-638 112**

**[Via] ERODE [PERIYAR Dist.]**

President : **K. KETTIMUTHU**




# மா மனிதர் தீர்த்தகிரி முதலியார்

—o—

(ஜி. ஏ. வடிவேலு)

நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, நிலத்தில் எவர்க்கும் அஞ்சிடா நெறி.

துன்பம் என்னும் கடலைத் தாண்டும் தோணி, சோர்வு என்னும் பேயை ஓட்டும் சூழ்ச்சி அன்பென்னும் தேனில் ஊறித் ததும்பிய புதுமலர் ஆண்மை என்னும் பொருளின் அறிகுறி.

இப்படி வையத்து வாழ்வாங்கு வாழ்பவர்க்கு இலக்கணம் வகுத்தால் அந்த இலக்கணத்திற்கு ஏற்ற முன் உதாரணம் தீர்த்தகிரி முதலியார் தான்.

மேருவை நிகர்த்த உள்ளமும், உருவமும் கொண்ட அந்தப் பெரியவர் போய்விட்டார். மு... சார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் எய்துபிடி சாம்பல் ஆகிவிட்டார். அ... காலத்தின் கட்டளை. நெஞ்சில் உளன் ஒருவன் இன்று இல்லை என்றும் பெருமை உடைத்து இவ்வுலகு என்று திருவள்ளுவர் இக்கால கட்டளையை உலகின் பெருமை என்று கூறுகிறார்.

ஆங்கில ஆட்சி கொடிகட்டி பறந்த காலத்திலே மகாகவி பாரதியார் கூறும் 'இம் என்று... சிறைவாசம், ஏனென்றால் வனவாசம் என்ற நிலை நாட்டில் நிலைத்த நாளிலே தமிழகத்தின் எங்கோ ஒரு மூலையான அன்னசாகரத்தில் அவதரித்தார்.

எங்கோ பிறந்த அவர் தமது செயலின் மூலம் எங்கும் நிறைந்தவர் ஆகிவிட்டார். புரட்சி தலைவர்களான வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுப்ரமணிய சிவா, சுப்ரமணிய பாரதியார், வாஞ்சிநாத முதலியோர் அணியில் அவர்களின் தோழராக திகழ்ந்தார் இப்பெரியார். காந்திஜியின் செல்வாக்கும், அவர் அகிம்ஸா ஆயுதமும் அரசியலில் அதிகம் ஈடுபடுத்தப்படாத காலம் அது. பலாத்காரம் மூலமாக துப்பாக்கியும் குண்டும் கொண்டே ஆங்கிலேயனை விரட்டி விடலாம் என்று தேசபக்தர்கள் நம்பி செயல்பட்ட விடுதலை எழுச்சியின் துவக்க நாட்கள் அவை. ஒரு குறிப்பிட்ட கொடிய வெள்ளையனை சுட்டுக் கொல்லுவது என இவர்கள் குழு முடிவு எடுக்கும் இன்றைய நிலைக்கு நேர் மாறான நிலை அன்று. முடிவு எடுத்தவுடன் அவனை நான்தான் சுடுவேன், எனக்கு அந்த வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் போட்டியிடுவார்களாம். பின்னர் சீட்டு குலுக்கிப் போட்டு அந்த பாக்கியவானை தேர்ந்தெடுப்பார்களாம். இப்படி பெயர் எழுதிப்போட்ட சீட்டு குலிக்கப்பட்டு, அந்த பாக்கியம் கிடைக்காது ஏங்கியவர் முதலியார அவர்கள்.

அவர் மெத்த படித்தவர் அல்ல ஒரு நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர். பெரிய அறிஞர் அல்ல அதைப்பற்றி கவலைப்படவே மாட்டார். அவர் செயல் வீரர். செயல், செயல், என்றும் செயல்பட்டு கொண்டே இருக்க வேண்டும் என்ற உறுதி கொண்டவர். பேச்சு விவாதம் என்றால் அவருக்கு கோபமாக வரும். ஒரு முறை தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்துக்கு சென்று வந்தவரிடம் கூட்டத்தில் என்ன நடந்தது' என்று கேட்டேன். அவர் கூறினார், "அந்த கண்றாவியை ஏனப்பா கேட்கிறாய். ஒரு தீர்மானம் வந்தது' அதில் ஒரு வார்த்தை 'போனான்' என்றிருந்தது, மற்றவர் அதனை 'சென்றான்' என்று மாற்ற வேண்டும் என்றார். இதற்கு விவாதம், சண்டை, நாளெல்லாம் பேசி விட்டு கலைந்தார்கள். இவர்களா சுயராஜ்யம் கொண்டு வரப்போகிறார்கள்?".
தருமபுரியில் பொதுக் கூட்டம் நடத்துவோம். என் நண்பர் ஒருவர் பாரதியார் பாடலை இனிய ராகத்துடன் பாடுவார். அது முதலியாருக்கு கோபம் ஏற்படுத்தி விடும். என்னடா பாட்டு பாடுகிறாய் யாருக்கு வேண்டும் இந்த ராகம்? பாரதியார் இப்படியா பாடினார்? தேன்! என்று உணர்ச்சியோடு வேகமாக வெறி கொண்டு பாடியே காட்டுவார்! எங்களுக்கு சிரிப்பாக வரும்.

எவரையும், எந்த பதவியில் இருப்பவரையும் என்றும் மதிக்க மாட்டார். வேலூர் சிறை வாசத்தின்போது சிறை அதிகாரிகளை ஏதோ கண்டித்து விட்டார். அதனால் கோபமுற்ற அதிகாரி இவரை அடித்து கீழே தள்ளி, அவர் மீது பூட்ஸ் காலுடன் ஏறி மிதித்துள்ளான். அப்பொழுதும் அவர் பாடினர், "சதையை துண்டு துண்டாக்கினலும் உன் எண்ணம் சாயுமோ,ஜீவன் ஓயுமோ!.

பிரிக்கப்படாத சேலம் மாவட்ட காங்கிரஸ்கமிட்டி தலைவராக அவர் இருந்தபொழுது சென்னை மாநில கல்வி அமைச்சர் திரு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் சேலம் வந்திருந்தார். அமைச்சரை சந்திக்க திரு. முதலியார் சென்றார். நானும் உடன் சென்றேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்தோம். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவரும் இருந்தார் செட்டியாரே! தருமபுரிக்கு எப்பொழுது வருகிறீர்கள்? என்று முதலியார் கேட்டார். அதற்கு. முதலியார்! என் சுற்றுபயண திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் உள்ளது கேளுங்கள்! என்றார். வந்தது முதலியாருக்குக் கோபம். அவர் முகத்தில் அனல் பறந்தது அவருக்கே உரித்தான கடுமையான வார்த்தைகளை பொழிந்து தள்ளினார். முதலியாரிடம் மன்னிப்பு கேட்டார் அமைச்சர். இன்று அரசியல் வானில் எங்காவது அத்தகைய வீரனையோ, அவர் உணர்வை மதித்து மன்னிப்பு கேட்ட அமைச்சரையோ அல்லது கூலிக்காரன் என்று கூறியபோதும் சகித்துக் கொண்டு அமைதியாக இருந்த ஆட்சித்தலைவரையோ காணமுடியுமா?

அதே நேரத்திலே ஊழியர்பால் அவர் பொழிந்த அன்புக்கு நிகரே இல்லை. யார் வந்தாலும் முதலில் உணவு அளிப்பார். உடல் நலம் பற்றி கேட்பார். அவர் சிறந்த மருத்துவர். உடனே பெரிய பாட்டல் மருந்து கொடுத்து அனுப்புவார். சிறையிலும் வெளியிலும் பல ஆயிரம் பேர் உடல் பிணியை நீக்கியுள்ளார்.

தேசபக்தன் என்றால் அவன் தெரியாமல் தவறு செய்தாலும் நேசிப்பார் அவனை மதிப்பார். ஒருமுறை அருணா ஆஸத் அலி தருமபுரிக்கு வருகை தந்தார்கள், முதலில் அவர் நேதாஜி வாலிபர் சங்கத்தை துவக்குவது என்றும், பின்னர் பொதுக் கூட்டத்தில் பேசுவது என்றும் திட்டமிட்டிருந்தோம். எதிர்பார்த்ததைவிட மிகப்பெரும் கூட்டம் வந்துவிட்டது. முதலில் நேதாஜி சங்க நிகழ்ச்சி வைத்துக் கொண்டால் அந்த சிறிய இடம் இவ்வளவு பெரும் கூட்டத்தை தாங்காது என்று திட்டத்தை நான் மாற்றி விட்டேன். இதற்கு நானே பொறுப்பு. இது சங்கத் தலைவருக்கு கோபம் அளித்து விட்டது. தாங்கள் அவமரியாதை செய்யப்பட்டு விட்டதாக பெரிய சண்டைக்குக் வந்து விட்டார்கள். மன்னிப்பு கேட்க வேண்டும் என்றார்கள். மனதார தவறு செய்யாததால் நான் மன்னிப்பு கேட்க மறுத்து விட்டேன். உடனே பெரியவர் முதலியார், 'இதற்கு நானே காரணம். என்னை மன்னித்து விடுங்கள்' என்று கைத்தூக்கி அனைவரையும் கும்பிட்டார். அந்த பண்பு உள்ளத்தின் முன்னர் நான் மிகவும் சிறியவன் ஆகிவிட்டேன்!.

அந்த அன்பு உள்ளத்தில் ஆஸ்யமும் இருக்கும் தீர்த்தகிரி முதலியாரும் மற்றவரும் சென்னையில் இருந்த நீலன் என்ற கொடியவனின் சிலையை உடைத்து அப்புறப்படுத்த சத்தியாக்கிரகம் செய்வது என்று முடிவு செய்தார்கள். நான்கைந்து நாட்கள் சிலையை உளியால் தட்டு தட்டு என்று தட்டி உடைத்தார்கள். அதிகாரிகள் பார்த்தார்கள்.சிலையை பழுது பார்க்கும் வேலை நடக்கிறது என்று பார்த்துக் கொண்டே போய் விட்டார்கள். தொண்டர்களும் சலித்து விட்டார்கள். ஒரு நாள் மகாத்மா காந்திக்கு ஜே'' என்று கோஷம் போட்டார்கள். அப்பொழுதான் இவர்கள் சிலை பழுது பார்பவர்கள் இல்லை என்று கைது செய்தார்களாம்! இதனை வேடிக்கையாக சொல்லுவார்!.

அவர் ஏழையாக பிறந்து. வாழ்ந்து. மறைந்து விட்டார். தனக்கென எதுவுமே சேர்த்தது இல்லை. கடைசி மூச்சு வரை நாட்டுக்கே உழைத்தார். என்றுமே அவர் உள்ளத்தில் வறுமை நிலவியது கிடையாது. இல்லாமை என்ற பஞ்சப்பாட்டு அவர் என்றுமே பாடியது இல்லை. பட்டினியில் தவித்தபோதும் இதுவேண்டும் என அவர் யாரையும் யாசித்ததே இல்லை.



இத்தகைய காங்கிரஸின் மேருவுக்கு சாதாரண சட்டசபை அங்கத்தினர் டிக்கெட் கொடுக் காங்கிரஸ் மறுத்து ஒரு செல்வந்தருக்கு கொடுத்தது. அவர் ஏழை என்பதால் கொடுக்கவில்லை ஆனால் இந்த உயர் மதியாளர் அதனை பொருட்படுத்தாது அந்த செல்வந்தரை வெற்றியடைய செய்தார்.

இந்திய நாடு விடுதலைக் கண்ட 1947 ஆகஸ்ட் 14ந்தேதி இரவு முழுவதும் அவருடன் கழித்தேன் அவர் கூறினர், "அப்பப்பா! நாம் பட்ட பாட்டுக்கு எல்லாம் ஒரு முடிவு வந்து விட்டது. இனி நாட்டில் பஞ்சம், பட்டினி, பாட்டைதலை இருக்காது. பிச்சைக்காரன் இருக்க மாட்டான் எல்லோரும் வயிரார இன்பமாக சாப்பிடுவார்கள்!.

அந்த கடலினும் பரந்த, இமயத்திலும் உயர்ந்த உள்ளம் என்னிடம் இப்படி கூறிய து உணர்ச்சி வசப்பட்டது. இதனைச் சொல்லும் போது கண்களில் நீர் கொட்டியது. ஆனால் அவ ஆசை கானல் நீராகிவிட்டது. அவர் உழைப்பிற்கு போதிய ஊதியம் இன்று வரை கிட்டவே இல்லை.

வெறும் மாணவனை தருமபுரி பள்ளியில் பயின்ற என்னை தேச பக்தனுக்கியவர் அவரே காந்திஜியை காட்டியவர் அவரே. நாடு விடுதலை மட்டும் போதும் என்று நிறைவு பெருது நலிந் மக்கள் வாழ்வு உயர தொடர்ந்து உழைக்கும் உள்ளமும், ஊக்கமும், உணர்வும் எனக்கு அளித்தவ அப்பெரியாரே, அவர் உண்டாக்கிய தேசபக்தர்கள் எண்ணற்றவர்கள், காலவேகத்தில் நண்பர்கள் சிலரும் நானும் சோஷலிஸ்ட் ஆனேம். அவர் மாப்பிள்ளை திரு M.S.அய்யம்பெருமாள் கம்யூனிஸ் ஆனர். இதனல் முதலியார் அவர்களுக்கு எங்கள் மீது இருந்த அன்பு குறைந்ததே இல்லை. வேறு கட்சிக்கு சென்ற போதும் எங்கள் உணர்வுகளை மதித்து அதில் நன்கு செயல்பட பலமுறை உதவியுள்ளார்.

திரு. முதலியாரால் உருப்பெற்ற நாம் அவருக்கு செய்யும் அஞ்சலி அவர் எந்த நோக்கத் திற்காக வாழ்நாலெல்லாம் உழைத்தாரோ, அந்த நோக்கம் நிறைவேற உழைப்பதேயாகும்.

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை – வாழ்க!

—பாரதி

# தியாகசீலர் தீர்த்தகிரியார்

கவிதை R. வெங்கட்ராமன்
பென்னாகரம்.

சிறப்பான தர்மபுரி மாவட்ட வரலாற்றில்
சரித்திரச் சிறப்புக்கள் எத்தனையோ இங்கிருந்தும்–
எடுத்தியம்ப வாய்ப்பின்றி இருட்டறையில் இருந்திட்டோம்
தனித்தியங்கும் – மாவட்ட உரிமைதனை பெற்றதினால்
இனித் தயங்கும் எண்ணமின்றி – ஓரிரண்டு புகழதனை
இங்குரைக்க விரும்புகின்றேன்
தாவி வந்து தடவிக் கொடுத்து – தமிழகத்தின் பசிதீர்க்கும்
காவிரி அன்னையினை – வயார வாழ்த்துகின்றேன்
தியாகத்தின் இலக்கணமாய் – திகழ்ந்திட்ட
தியாகச் செம்மல் தீர்த்தகிரியாரின்
நூற்றாண்டு விழாவினை - நெஞ்சார வாழ்த்துகின்றேன்
தன்னலம் ஏதுமின்றி பிறர்க்குதவும்
தகைமை கொண்ட காரணத்தால் -
தகடூர் என்றந்த பெயரும் மாறி
தக்க நற்பெயர் தருமபுரியாய் ஆனதிங்கே !
நாட்டினிலே அறம்வளர்த்த – அதியமான் நெடுமானஞ்சி
நீள் ஆயுளையே தந்திடும் நெல்லிக்கனியதனை
தான் உண்டுவாழ்ந்து -- தரணியை ஆட்டிப் படைக்க நினையாமல்
நீதிப்பாட்டிசைத்த ஔவைக்கே தந்திட்டான் -- ஆனதினால்
தருமபுரி என்றந்த சிறப்பும் பெற்றதாங்கே !
சதுர் வருணம் அக்காலம் – செல்வாக்காய்
இருந்த தற் கடையாளம் – சாதிப்பெயரினிலே
பல ஊர்கள் -- சாட்சியாய் கூறிடலாம்.
எதிர்காலம் நினைவினிலே வைத்திருக்க
ஏதும் மாற்றமின்றி 'பாப்பாரப்பட்டி' என்றும்
அருகினிலே பள்ளிப்பட்டி என்றும் - கண்ணெதிரே
கம்மாளப்பட்டி என்றும் – செட்டிப்பட்டி என்றும்
வியக்கும்வண்ணம் - வேடரப்பட்டியும், வண்ணாத்திப்பட்டியும்
வகைவகையாய் கேட்டிடலாம் – இன்னும் எத்தனையோ
சாதிப் பெயரினிலே - ஊர்கள் பல இருப்பினும்
சண்டையும் வந்ததில்லை -- சச்சரவும் தோன்றவில்லை
சமரச நல் வழியினிலே – சனங்களெல்லாம்
சன்மார்க்க நெறியுணர்ந்து – செவ்வையாய் வாழ்ந்திருந்தார்
பொன்னியெனும் காவிரியும் – போக்கிடம் வேறின்றியே
தஞ்சமென வந்தடைந்தாள் – தருமபுரியை நோக்கியே
தஞ்சையை தானியக்களஞ்சிய மாய் ஆக்கிடவும்
மிஞ்சிய நீரையெல்லாம் மேட்டூரில் தேக்கிவைத்து
மின்சாரம் உற்பத்தியாகின்ற அணையினை அங்குண்டாக்கி
தொழில் மயமாய் பக்கத்து சேலத்தை செய்திடவே
தருமபுரி என்றந்த பெருமையும் பெற்றதாங்கே!



தன்னகத்தே காவிரி செல்வதினால் -- தடையின்றி
மின் விசையாகிலும் பெற்றுமுன்னேற நினைக்கையிலே
தன் நிலத்தில் உருவானதென் – தன்னலத்தால் கர்நாடகமும்
தடையதுவும் சொல்கின்ற சேதி கண்டோம்.

தெய்வங்கள் பெயர் கொண்டு – தேசத்தில் ஓடுகின்ற
ஆறுகள் பலஉண்டு -- அவை யெல்லாம்
மலையினிலே உருவாகி – மாநிலங்கள் வழியாக
தரையினிலே விரைந்தோடி -- கடுகளவும் பயனின்றி
கடலினிலே கலக்கின்ற – காட்சியினை காணுகின்றோம்

விரைந்தோடும் ஆற்றினிடம் வேலைகள் வாங்கியே
வேகத்தை விசையாக்கி - மின்சாரம் பெருகின்ற
வேலைதனை விரிவாக்கி – உற்பத்தி பெருக்கிடவே
உரியதோர் வகையினிலே -- வழிவகைகள் காணாமல்

குறுகிய மண் சட்டியிலே -- குதிரையினை ஓட்டுதல்போல்
மாநிலத்து பிரச்சினைகளை – மலைபோல் பெரிதாக்கி
மக்களின் தேவைக்கு மதிப்பேதும் தந்திடாமல்
ஒருமைப்பாடென்னும் – ஒப்பற்ற கோஷத்தை

ஊரெல்லாம் பரப்புகின்றோம் – ஓய்வு ஒழிச்சலின்றியே !
தேசத்தில் ஓடுகின்ற ஆறுகள் அனைத்தையுமே
தேசியமயமாக்கி தக்கவிதம் தீர்வுகண்டு
தண்ணீர் பிரச்சினையில் தமிழ் வையத்தின் ஐயத்தை
போக்கிடுதல் மையத்து ஆட்சியாளர் மாபெறும் கடமையன்றோ!
'ஒகே' என்னும் கன்னடச் சொல்லுக்கு இணையாக
புகை என்பதுவே தமிழில் பொருளாகும்
மிகையான வேகத்தே தண்ணீர் விழுவதினால்
புகையாக திவலைகள் காட்சிதரும் அதனால்
ஒகேனக்கல் என்ற பெயரும் காவிரிக்கு இங்குண்டு.
இன்னல் பல இருந்திடினும் – இந்நாட்டு சுதந்திரத்தை
எப்படியும் எய்திட வேண்டுமென்ற ஏக்கத்தால்
அடக்குமுறைக்கு ஆளான பல தலைவர்கள்
ஆர்வமுடன் மக்களை தட்டி எழுப்பி
திறம்பட போர் புரிய தலைமறைவாய்
தேசபக்தி வேள்விதனை செய்திட்டார் இங்கே
வேள்வியில் தோன்றிய வெண்ணிறப் புகையதுவோ
வீரர்தம் எழுச்சியினால் எழும்பிய பேரொலியோ
பொய்யாக் காவிரியில் பொழுதெல்லாம் காணுகின்றோம்
சொல்லவியலாத மீன் இனங்கள் சுவைத்து உண்போர்க்கும்
ஒப்பிலா வண்ணத்திரை படம் எடுப்பதற்கும்
செப்பவியலா இயற்கை எழிற் காட்சிகளும்
சத்தான விலை தரும் சந்தனமரங்களும்
கொத்தாக ஊர்ந்து வரும் யானைக்கூட்டங்களும்
அத்தனையும் இம்மலைகளில் நித்தமும் கண்டிடலாம்
சுதந்திரப் போராட்டம் சூடேறி – சுடர்விட்ட நேரமதில்
தியாகத் தீப்பிழம்பில் – துள்ளிக்குதித்து நீந்தும் பெரியார்கள்
எத்தனையோ பேர்கள் இன்னமும் இருக்கின்றார்

அவரெல்லாம் நாத்திறந்தும் தம்பெருமை பேசவில்லை.
நேற்றைக்கோ இன்றைக்கோ - வெளியில் வந்திட்டோர்
ஏற்றம் பெருவதற்கென்றே - ஏதேதோ பேசுகின்றார்.
காற்றடித்த பக்கம் சாய்ந்து நின்று காசைக்குவிப்பதற்கு
அரசியலை சீரழித்து ஆதாயம் தேடுகின்றார் - அன்று
நாட்டு விடுதலையில் நாட்டம் மிககொண்டவர்கள் - இன்று
நாதியற்ற நிலைமையிலே - தாதராக மாறிவிட்டார்
பாட்டி கூறும் பழங்கதைபாய் - ஏட்டினில் தான் சுதந்திரம்
இருட்டிலிருந்து வெளிச்சத்தை காணவே இயலவில்லை
இக்கால நிலைமை போல் - அன்றிருந் திருந்தால்
இந்நாட்டின் சுதந்திரத்தை - எண்ணிப்பார்த்திடவும் இடமுண்டோ
சொல்லாலும் - செயலாலும் - சுயநலத்தை பேணாமல்
சுட்டெரிக்கும் வகையினிலே - இன்னல் பல அனுபவித்தோர்
பட்டியலாய் போட்டு பார்த்திட்டால் - ஏராளம்-ஏராளம்.
அத்தகையோர் வரிசையிலே முதன்முதலாய் வருபவர்தான்
தீர்த்தகிரியார் எனும் தியாகச்செம்மல் - அவர்
கீர்த்திதனை உரைத்திட வார்த்தைகள் கிட்டவில்லை
நேர்த்தியான அரசியல் பாதையிலே - பணம் - காசு
பார்த்தறியா பரம ஏழை - நாட்டுப்பற்றினிலே அவர்
மாற்றறியா பச்சை பசும்பொன் - அன்னவர்
பிறந்த திம் மாவட்டம் - பெருமை கொள்வோம்
அன்னவயல் சூழ்ந்து நிற்கும் - அன்னசாகரம் எனும்
அழகியதோர் சிற்றூரில் - ஆண்டு ஆயிரத்து எட்டுநூற்று எண்பதிலே
தமிழ் நூலால் குறள் நெய்த தெய்வப்புலவன்
வள்ளுவனால் புகழ் பெற்ற நெய்யும் தொழில் குடும்பமொன்றில்
நன்மகனாய் பிறந்திட்டார் - நாடெல்லாம் போற்றிடவே!
செல்வ செழிப்பினிலே மிதந்திட்ட குடும்பம் என்பதினால்
சீருடனும் சிறப்புடனும் - செழித்து வளர்ந்திட்டார்
முளைக்கின்ற போதினிலே - இதுவிளைகின்ற பயிரென தெரிவது போல்
வளர்கின்ற போதினிலே - சுகவாழ்வுதனை வெறுத்திட்டார்
நாட்டு பற்று - ஊற்றாக பெருக்கெடுத்ததினால்
வீட்டுப் பற்றை - விரல் நுனியும் நினைத்தாரில்லை
விதிவிலக்கின்றி வறுமைப்பசி பட்டினி வாட்டவும் தவறவில்லை
ஒருவேளை உணவுக்கு ஒருவழி எனில் - மறுவேளை
உணவுக்கோ மாநாடு கூட்டவேண்டும்
இந்நிலையிலும் அன்னியத்துணி விலக்கல் போர்
மதுக்கடை மறியல் - இன்னும் பல போராட்டம்
நாடகத்தில் வேடம் போட்டு - மக்களுக்கு
நாட்டுப் பற்றினையே ஊட்டி வளர்த்திட்டார்
நாடித் துடிப்புணர்ந்து நாட்டின் நோய் தீர்க்கும்
நல்லதொரு நாட்டு மருத்துவராயும் இருந்திட்டார்
தீவிரத்திலும் தீவிரமாய் - அன்னிய எதிர்ப்பினிலே
'எம்டன்' என்ற பெயரதனை - ஏற்றமாய் பெற்றிட்டார்
சுதந்திரப் போர்வீரர் - சுப்ரமணிய சிவா



இந்திய தேசிய ராணுவப்படை நிறுவிய நேதாஜி
பெரும்புலவர் பாரதியும் - பேரறிஞர் ராஜாஜியும்
தமிழ்த்தென்றல் திரு. வி. க. வும் - வீரர் வாஞ்சிநாதனும்
தீரர் சத்திய மூர்த்தியும் - சீலர் சிதம்பரனாரும்
திக்கெட்டும் புகழ்பெற்ற - தியாகிகள் பல்லோரும்
தீர்த்தகிரியார் தம் தீரம்மிக்க நண்பராவர்
இந்நூற்றாண்டு ஆரம்ப மதில் - இளையதோர் வயதினிலே
எந்நாட்டோரும் போற்றுகின்ற விவேகானந்தரை
இங்கழைத்து வரவேற்றார் - அவர் பெயரில் இவ்வூரில்
இன்றளவும் காணுகின்றோம் - இலவச நூல்நிலையம்,
பத்தாண்டிற்கும் மேலாக - பலப்பல வழக்குகளில்
சிறைசென்று மீண்டுவந்து சிறப்பான பெயர் பெற்றார்.
விடுதலை போரினிலே - நம்மாவட்ட பெருமைதனை
விண்ணுக்கே உயர்த்தி விட்ட பெருமைதனை பெற்றுவிட்டார்
வீரர் தீர்த்தகிரியார் தியாகமும் - பெயரதுவும்
நூற்றாண்டு பலகாண நெஞ்சார வாழ்த்துகின்றேன்
சரித்திரத்தில் ஏறிவிட்ட இத்தியாகியின் பெயரதனை
சரித்திரம் கற்கின்ற மாணவர்கள்
தனித்திறம் பெற்று விளங்கிடவே
தியாகத்தின் இலக்கணமாய்
தீர்த்தகிரியார் இலக்கியத்தை
கற்றுத்தேர்ந்து கடைத்தேற விழைகின்றேன்.

இனியொரு விதி செய்வோம் — அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்
— பாரதி

சுதந்திரப் போராட்ட வீரர்கள் சிறப்பு மலர்

# தியாகி தீர்த்தகிரி

**டாக்டர் : எஸ். என். சோமயாஜுலு**

என்னுடைய 'தேசீய' நண்பர் தீர்த்தகிரியாரின் நினைவுகளில் பல சம்பவங்கள் இன்றளவும் என் உள்மனதில் பசுமையாக இருக்கின்றன.

ஆறடிக்கும் அதிகமான உயரம், ஆஜானுபாகுவானத் தோற்றம். அன்ன நடை, யானை நடை, மயில் நடை, என்பதெல்லாம் வீரனுக்கும் தேச போர்மறவனுக்கும் புறம்பானது என்பதனால், சிங்கநடையைத் தேர்தெடுத்தது போல் தீர்த்தகிரியாரின் வேகநடை இருக்கும்! சாக்குத்துணிக்கு நிகரான முரட்டுக்கதராடை. அதன் அழுக்கில் அவருக்குக் கவனம் குறைவு. தன்னலம், தன்சுகம் தன்பெருமை அறியாத தேசத்தொண்டர் அவர். பேச்சும், மூச்சும் தீவிரவாதமிக்கதாக இருக்கும். எந்தத் தீவிரமும் தேசப்பற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்கிற தாகமும் அதில் இருக்கும்.

அன்புக்குப் பணிவார் அடக்குமுறைக்கு அஞ்சார். ஆணவம் அவர் அறியாதது ஆணவ ஆட்சியாளர்களின் நாடிதெரிந்த சித்த, நாட்டு வைத்தியர் அவர். சிறந்த மருத்துவர் என்பதினாலேயே தனிச்சிறப்புமிக்க தீர்த்தகிரிக்கு, தேசசேவையில் புடம் போட்டப் புகழும் இயற்கை ஆயிற்று தருமபுரிக்கு, தமிழிலக்கியத்தில் 'அறவாழ்க்கையில் சோர்விலாத பூமி' என்கிற பொருள் உண்டு. தருமபுரியைச் சேர்ந்த தீர்த்தகிரியாருக்கோ அறவாழி மண்ணில் அவதரித்த காந்தீயப் பேழை என்கிற புகழுமுண்டு. வெள்ளையர் ஆட்சியில் இந்தியர்கள் அடிமைகளாக உழன்றநேரம் உய்வதறியாது ஓய்ந்துகிடந்தநேரமும் அதுதான்! அந்தக் காலக்கட்டத்தில்.

சோழவந்தான் சீனிவாசவரதன்
சிதம்பரபாரதி
கல்கிசதாசிவம்
ஸ்வாமி வித்யானந்தஅடிகள்
மீனாட்சிசுந்தரம்
ராஜாஜி

லட்சுமணசுவாமிமுதலியார்
B. நரசிம்மய்யர்
ஆதிநாராயணசெட்டியார்
வாசுதேவய்யா
ஈ. வே. ராமசாமிநாயக்கர்

சிதம்பரம் நைனியப்பபிள்ளை
வேலூர் 'கோடையிடி' குப்புசாமிமுதலியார்
திருவண்ணாமலை அண்ணாமலைப்பிள்ளை
பண்ருட்டி தேவநாகய்யா
சென்னை எம். எஸ். சுப்பரமணிய அய்யர்
சேலம் பவானிசிங்

என மூன்று தேசபக்த அணிகள் தமிழகத்தில் தேசீயத் தீயை, தியாக வேள்வியை வளர்க்கும் பெரும் சக்திகளாக விளங்கின. இவற்றுள் தீவிரவாதமும், வேகமும்கொண்ட அணியின் முன்னணித் தொண்டராக இருந்தார் தியாக தீபம் தீர்த்தகிரியார்.



சென்னையில் நீலன் சிலையை அகற்றும் நாட்டுப் பணியிலும், நான் மேற்கொண் விடுதலைப் போராட்ட திட்டங்கள் பலவற்றிலும் எனக்கு வாய்த்த மெய்த்தொண்டராக நம்பிக்கை குரிய அருஞ்சகாவாக தியாகச்சுடராக தீர்த்தகிரி திகழ்ந்தார். அவரை நான் நன்கறிவேன்.

டாம்பீகங்கள் தெரியாத. பழக மிக இனிய எளிய உயரிய மனிதர் அவர். அப்பழுக்கற் காந்தீயவாதி, சுப்ரமணிய சிவாவிடம் அளவற்ற மதிப்பும் ,பணிவும் கொண்டிருந்த தீவிரவாதியாக தீர்த்தகிரியார், காந்தியடிகளாரின் சாத்வீக ஒத்துழையாமைத் திட்டங்களின் மூலம் கத்தியின் ரத்தச்சிதறலின்றி, சுதந்திர பாரதத்தை அடைய முடியும் என்கிற அனுபவங்கள் சேர்ந்தபோ என்னுடன் காந்திஜியின் தத்துவங்களைப் பின்பற்றுவதில், பரப்புவதில், செயலாற்றுவதி நெருங்கிய தோழராக மாறினார். தமிழ்நாட்டில் காங்கிரஸ் பேரியக்கத்தைக் கட்டி வளர்த்த மி கட்டுக்கோப்பான தேசபக்தக் கனல்களில் தருமபுரி தீர்த்தகிரி முதலியார் அவர்களுக்கு முதலிட உண்டு. மாறிவரும் யுகதர்மங்களினாலும் புறக்கணிக்கப்பட முடியாத மறக்க இயலாத தேசபக் மணி அவர்.

மகாகவி பாரதியாரிடமும் அவரது கவிதைகளிடமும் எனக்கிருந்த வேகத்தை முழு அளவி தன்னுள் வாங்கிக் கொண்டு அலைகடலெனப் பொங்கியவர் தியாகச்செம்மல் தீர்த்தகிரியார்.

அந்த நாட்களில் தியாகி தீர்த்தகிரியும் நானும உடன் பிறவாச் சகோதரர்களாகவே அறியப்பட்டிருந்தோம். அவருடைய ஆர்ப்பாட்டமான எடுப்புமிக்க எதிரிகளை அஞ்சவைக்கும் உத்வேகமான தொண்டு இன்றைக்கும் ஒரு தேசபக்தனுக்கு ஊட்ட சத்தாக அமையக் கூடியதாகும் சிறைக்கு அவர் வைறத்த பெயர் சிந்திக்கும் அறை. எனவே துவக்க நாளில் தீவிரவாதியாகவும் பின்னர் காந்தியத் தொண்டராகவும் வெள்ளையராட்சியை எதிர்த்தபோதெல்லாம் தனக்கும் கிடைத்த கடுந் தண்டனையை சிறை வாசத்தைக் கண்டு தீர்த்தகிரியார் ஆனந்தப் பள்ளு இசைத்தார்.

சுதந்திரப் போராட்ட வீரர்களை பிரிட்டிஷார் நடத்திய விதத்தை இப்போது நினை கொண்டாலும் ரத்தம் உறைந்துவிடும். அவ்வளவு ஈனத்தனமாக, மிருகத்தனமாக பயங்கரமாக இருந்தன. அந்நிய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் இவையெல்லாம் எங்கள் மேனிக்கு அளிக்கப்பட்ட வறட்டுத்தனமான தண்டனைகள் என்பார் தீர்த்தகிரியார். உண்மையும் அதுதான்

பிரிட்டிசாரின் கொடுங்கோன்மைகள் விடுதலை வீரர்களின் உள்ளத்தைச் சிதைக்கவோ சிறைப்படுத்தவோ கடைசிவரையிலும் இயலவே இல்லை என்பதே இந்திய சுதந்திரப் போராட்ட வரலாறு. இதில் தீர்த்தகிரியாரின் பங்கும் தேசப் பணியும் பொன்னென முத்துக்களினால் பொறிக் கப்படும் அதற்கு அச்சாரமாக, முன்னோடியாக அவர் வாழ்ந்த நாட்டுப்பற்றை வளர்த்த தருமபுரி யில் அவருக்கு இப்போது சிலை எழுப்பப்பட்டுள்ளது. இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்டு நான் நெஞ்சம் நெகிழ்கிறேன் என் இதயமும், இமைகளும் ஆனந்தக் கண்ணீரில் பனிக்கின்றன. சுதந்திரப் போராட்ட வேள்வியில் பல பத்தாண்டு காலம் என்னுடன் இணை பிரியாமல் உறுதுணை யாக நின்று நெஞ்சார செயலாற்றியத் தோழருக்கு நன்றி மறவாத நாட்டு மக்கள் இவ்வாறு கௌரவம் செய்யும் பாக்கியத்தை நேரில் அநுபவிக்கும் சுகத்தின் அருமையே அலாதியானது.

இத்தகைய ஒரு வாய்ப்பினை 85 – வயது முதியவனான எனக்கு அளித்துள்ள தருமபுரி தியாகிதீர்த்தகிரியார் நூற்ருண்டு விழா கமிட்டியினருக்கு என் நன்றி. காங்கிரஸ் கட்சியின் நூற்ருண்டு விழா நடைபெறும் காலகட்டத்தில் தீரர் தீர்த்தகிரியாரின் நூற்ருண்டும் கொண்டாடப் படுவது மிகச் சிறப்பு. அற்புதமான பொருத்தம்.

"உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்."

என்கிற வள்ளுவத்திற்கு இலக்கணமான தியாக தீபம் தீர்த்தகிரியார் பெயரும், பெருமையும் வெல்க ! வாழ்க !

★ ★ ★



# கொடி காத்த குமரன் வரலாறு

திரு. P. A. வட்டமலை
தியாகி குமரன் W. C. S.
ஆட்டையாம்பட்டி

வீரம் செறிந்த தமிழ்நாட்டிலே கொங்கு நாடு என்பது ஒரு பகுதி. 'கார் உலவும் கொங்கு நாடு' என்று காளமேகப் புலவரால் பாராட்டப்பெற்ற பிரதேசம் அது. அக்கொங்கு நாட்டின் தலை சிறந்த நகரங்களில் ஒன்று திருப்பூர். பஞ்சாலைகள் நிறைந்தது இக் கொங்கு நாட்டில் பெரியார் மாவட்டத்தில் சென்னிமலை என்பது ஒரு சிறு நகரம். அந் நகரின் குன்றின்மீது சுப்பிரமணிய சுவாமி எழுந்தருளியுள்ள விசேஷ சிவஸ்தலங்களில் ஒன்ருகும். அங்குள்ள பரம்பரை மக்கள் செங்குந்த மரபைச் சேர்ந்தவர்கள். குமரக் கடவுளின் நவ வீரரது வழியில் தோன்றியவர்கள் ஆதியில் அம்மரபினர் 'செங்குந்தம்' என்ற ஈட்டிப்படை தாங்கி வீரம் விளைவித்து வந்தனர் அதன் பின்னர் நிகரற்ற நெசவுத் தொழிலை மேற்கொண்டனர். தமிழில் மறைபாடி அழியாப் புகழ் பெற்ற திருவள்ளுவ முனிவர் மேற்கொண்ட தொழிலல்லவா? பாவம் ஏதுமற்ற புனித தொழில். அது மட்டுமா? மாந்தரின் உடல் மானத்தை மூட அத்தொழில் இன்றியமையாதது. எனவே மக்கள் பணியுமாகும் நெசவுத் தொழில்.

சென்னிமலையில் இத்தகைய செங்குந்தர் மரபில் ஒரு ஏழைத் தரிக்காரர் குடும்பத்தில் 1904-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பிறந்தார் நம் குமரன். அவ் வீரனைப் பெற்றெடுத்த பாக்கியவதியின் பெயர் திருமதி கருப்பாயி அம்மாள் தந்தையின் பெயர் திரு. நாச்சிமுத்து முதலியார்.

இவருக்கு பெற்ருேர்கள் இட்டப்பெயர் குமாரசாமி என்பதாகும். அதுவே அவர் விடுதலைப் போரில் ஈடுபட்டு அமரர் ஆன பின் "குமரன்" என்று மாறிவிட்டது. சென்னிமலை போர்டு உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து, ஐந்தாம் வகுப்பு வரையில் படித்தார். குமாரசாமியை அதற்கு மேல் படிக்க வைக்க பெற்றவரின் வருமபடி இடம் தரவில்லை. எனவே பள்ளிப் படிப்பை முடித்துக் கொண்டு ஈரோடு நகருக்குக் காவேரி நதியின் அக்கரையில் உள்ள பள்ளிபாளையத்திற்கு சென்று, தமது தாய் மாமன்களான திரு. சொக்கலிங்க முதலியார், திரு. காளியப்ப முதலியார் என்பவருடன தங்கியிருந்து, நெசவுத் தொழில் பயிற்சி பெற்ருர். மதிநுட்பமும், மட்டற்ற சுறுசுறுப்பும், தொழில் பற்றுதலும் கொண்டவராக இருந்ததால், குமாரசாமி அதிவிரைவில் தொழிலைக் கற்றுக்கொண்டு. பட்டுச்சேலை நெய்வதில் நிபுணர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். பின்னர் தமது சொந்த ஊரான சென்னிமலைக்கே திரும்பி தொழில் செய்து பிழைத்து வந்தார்.

1923-ம் ஆண்டில் தமது 19-வது வயதில் திருமதி ராமாயி அம்மாள் என்ற 14 வயதே நிரம்பிய இளம்பெண்ணை மணந்து கொண்டு இல்லற வாழ்க்கையைத் தொடங்கினுர். ஆனல் வாழ்க்கைச் செலவுக்குத் தேவையான வருமானம் நெசவுத் தொழிலில் கிட்டவில்லை. பாவமற்ற தொழில் லாபமற்றதாக மாறிவந்ததை உணர்ந்தார். இவரது பெற்ருேர் இக்காரணம் பற்றியே தமது மக்களை அத்தொழிலை விட்டு பஞ்சு நூல் வியாபாரம், ஜவுளி உற்பத்தி, சாய அச்சுப் பட்டறை முதலியவற்றை நடத்தி வந்த வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை தேடிக்கொண்டு பிழைக்குமாறு தூண்டி வந்தனர். எனவே குமாரசாமியும் அவரது சகோதரர்களும் ஈரோடு, திருப்பூர் முதலிய நகரங்களில் குடியேறினார்கள். குமாரசாமிக்கு ஈரோட்டில் வேலை கிடைக்கவில்லை எனவே திருப்பூர் போனார். ஒ. கே எஸ். அண்டு ஈ. ஆர். ஆர் என்று விலாசம் வைத்துக் கொண்டு வெகு பிரபலமாகப் பஞ்சு வியாபாரம் செய்து வந்த, திரு. சென்னியப்ப முதலியார், திரு. ரங்கசாமி கவுண்டர் என்ற கூட்டு முதலாளிகள் குமார சாமிக்கு வேலை கொடுத்து ஆதரித்தனர்.

சோதனையும் பொறுப்பும் நிரம்பிய அந்த வேலையை 1925 – ஆம் ஆண்டு முதல் 1931 – ம் ஆண்டு முடிய சற்றேரக் குறைய ஆறாண்டு காலம் நன்றாகச் செய்து முதலாளிகளின் நன் மதிப்பைப் பெற்றார்.

